# கழுதையே வெளியே போ



பெப்ரவரி 20 - பெப்ரவரி 26, 2011 February 20 - February 26, 2011 பக்கங்கள் - 28 25.00

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சுடர் ஒளி

THE SUDAROLI

வார மலர்



கிரிக்கெட் கொண்டாட்டம்

உள்ளே

டோனியின்

வர்ணப் படம்

வெள்ளை

ரோஜா

முள்

புதிய தொடர் ஆரம்பம்

# ரணில் ஒரு நயவஞ்சகர்

ரஞ்சன்

சீற்றம்



# "முகத்தில் காறித் துப்பினேன்..."

ஜெரா



துயரங்கள் உச்சமாய் தெரிந்த காலத்தில் ஒருநாள். அதற்கு முதல்நாளிரவே அந்தச் செய்தி மிகவேகமாக எம்மிடையே பரவியிருந்தது. உலகில் யாராவது ஒரு பெரியவர் அந்தச் சனங்களுக்காக குரல் கொடுக்கமாட்டாரா? ஒரு மணிநேரமாவது சன்னங்களின் சத்தம் ஓய்வெடுக்கும்படி யாராவது கட்டளையிடமாட்டார்களா? குழந்தைகளின் பிணங்களைக் காக்கைகளிடம் இருந்து காப்பாற்றி மரியாதையுடன் தகனம் செய்ய/ புதைக்கமாட்டார்களா? உணர்ச்சி வசமாகி தீ புகுந்து கொள்ளும் முத்துக் குமாரன்களின் வேண்டுகைகளையாவது யாரும் கண்டு கொள்வார்களா? என ஆயிரம் கேள்விகளோடு பத்திரிகைகளைப் புரட்டிய காலத்தில் அது நிகழ்ந்தது.

அவர்களை வரவேற்கும் முன்னேற்பாடாக பாதுகாப்பு வலயங்கள் அறிவிக்கப்பட்டன. சனங்கள் மிஞ்சிய உயிர்களைத் தூக்கிக் கொண்டும், குடில்களைக் கலைத்துக் கொண்டும் வலயங்களை நோக்கி ஓடுகின்றனராம். அந்தத் தகவல் கிடைப்பதற்கு முதல் மணித்தியாலத்தில் மரணித்தவர்களது பிணங்கள் கூட நிராதரவாய் கிடக்கிறதாம். செய்திகள் தெரிவித்தன.

இரண்டு நாட்களுக்கு கொலைத் தொழிலாளர்களுக்கு ஓய்வை வழங்கியிருந்தார்கள். நான்கு மாதங்களுக்கு மேலாகக் கொலைத் தொழிலாளர்களின் தொழில் குழந்தைகளையும் பெண்களையும் கூரிய கத்தியினால் கழுத்தில் வெட்டுவதுதான், பாவம் அவர்கள் களைத்துப் போயிருந்தார்கள்; சலித்துப் போயிருந்தார்கள். அதற்காகவும், கத்திகளை தீட்டிக் கூர்மையாக்கிக் கொள்வதற்காகவும் இரண்டு தின போர் ஓய்வு அறிவிக்கப்பட்டிருந்தது.

அந்த இடைவெளிக்குள், அன்றைய நாள் அம்மாவும், அக்காவும் என்னோடு நீண்ட நாட்களுக்கு பிறகு பேசியிருந்தார்கள். அண்டவெளியில் இருந்து குரல்கள் கேட்பதைப் போலிருந்தன. அவர்கள் இருவரும் உயிரோடு, அசையக் கூடிய நிலையில் இருப்பதை உணர்ந்து கொண்டேன். அப்பாவும், தம்பியும்? தம்பி பதுங்கு குழிக்குள் ஒளித்திருக்கிறானாம். வெளியில் வந்தால் ''பிடிச்சுக் கொண்டு'' போய்விடுவார்களாம். நான்குமாதமாக பதுங்கு குழிக்குள்தானாம் எல்லாம். அப்பா மூடிய பதுங்கு குழிக்கு மேல் காவல் காத்துக் கொண்டிருக்கிறாராம்.

அன்றைய தினப்பத்திரிகைகள் எல்லாம் பெரியபெரிய கருப்பு எழுத்துக்களில் இந்தியாவில் இருந்து வந்த அவர்களைப்பற்றியே புகழ்ந்திருந்தன. ''அங்கே போகிறார்களாம்..., இங்கே வருகிறார்களாம்'' புழுகித் தள்ளின. இரவோடு இரவாக ஒட்டப்பட்டிருந்த நோட்டிஸ்களில் 'அவர்கள்'. அவர்களின் தலைமைப்பூதம் போன்றவர்கள் கைகளைக் காட்டிக் கொண்டு சிரித்துக் கொண்டிருந்தனர். அவர்களைத் தாங்கிய நோட்டிஸ் பட்டங்களில் கூட சிக்கிளிடம் குடித்த ரத்தவாடை வீசியது.

> "அந்தத் தெரு முழுவதும் ஆமிக்காரரும், பொலிஸ்காரர்களும் எறும்புகள் போல் நின்றிருந்தனர். ஆனால் எம் தசைகளைக் கடிக்க மாட்டார்கள் என்ற துணிவிருந்தது. ஏனெனில் பார்க்கப் போவது அவர்களை அல்லவா?...."

பல்கலைக்கழகக் கட்டடக் காட்டுக்குள் அவர்கள் முதலில் எம்மைச் சந்திக்கப் போகிறார்களாம். விடியும் முன்னே எமக்குத் தலைமை தாங்கிய பைல்காரன் பெருமையடித்துக் கொண்டான். பின்னாளில் அரசியல் 'தீபம்' ஏற்ற முன்னாளில் அவன் செய்த கூத்து இது. நானும் சில நண்பர்களும் 7.00 மணிக்கெல்லாம் புறப்பட்டோம் இரவெல்லாம் அவர்களிடம் கேட்பதற்காக தயார் செய்து வைத்திருந்த கேள்வி மூட்டைகளைத் தூக்கிக் கொண்டு எமது பிரதான வாசலில் அடையாள அட்டைகள் பரிசோதிக்கப்பட்டன. அந்தக் குறுந்தெரு முழுவதும் ஆமிக்காரரும், பொலிஸ்காரர்களும் எறும்புகள் போல் நின்றிருந்தனர். ஆனால் எம்தசைகளைக் கடிக்கமாட்டார்கள் என்ற துணிவிருந்தது. ஏனெனில் நாம் பார்க்கப் போவது அவர்களை அல்லவா? கட்டடக் காட்டின் பெருவாயிலில் மீண்டும் அடையாள அட்டை அனுமதியளித்தது.

கல்லிருக்கைகள் நம் கதைகளை, நமக்கு தெரிந்த அரசியலை மென்றிருந்தன. பாதுகாப்பவர்கள் பரபரப்பாகிக் கொண்டிருந்தனர். பலர் ஆர்வமிகுதியாலும், அவர்களைப் பார்ப்பதற்காகவும் குழுமியிருந்தனர். வானத்தில் இரண்டு உலங்கு வானூர்திகள் மிகவேகமாய்க் கடந்து போயின எல்லாரும் அண்ணார்ந்து பார்த்தோம். அதில் நானும் ஒருவன்.

11 மணியாகியும் ஒருவரும் வரவில்லை. பாதுகாப்புத் தரவல்லவர்களெல்லாம் கலைந்து விட்டனர். யாழ். பொது நூலகத்தில்தானாம் சந்திப்பு. பார்க்க விரும்புபவர்கள் அங்கு வரட்டுமாம். எம்மில் பலர் பஸ்களில் ஏறினோம். எல்லோரும் கோபப்பட்டார்கள்.

நூலக வாசலில் சனங்கள் நிரம்பி வழிந்தார்கள். நூறு வருடங்களின் பின் கட்டவிழ்த்து விடப்பட்டவர்கள் போல முண்டியடித்துக் கொண்டிருந்தனர். வாசலில் இந்திய கொலைச் சக்கரமும், இலங்கையின் வாளேந்திய சிங்கமும் பறந்து கொண்டிருந்தன. சமூகத்தின் முக்கியஸ்தர்களுக்கு மாத்திரம் தானாம் அனுமதி . எமக்கும் அனுமதி மறுக்கப்பட்டது. பின் என்னம்...... அழைத்து வந்தார்கள். நீண்ட நேர வாக்குவாதத்தின் பின் சிகரெட் குடித்துக் கொண்டிருந்த ஒரு வெள்ளை மனிதன் எங்களில் சிலருக்கு அனுமதி தந்தார். நானும் உள்நுழைந்து கொண்டேன்.

வந்திருந்த மூன்று ''தொப்புள் கொடி உறவு''களுடன் இந்நாட்டவர் சிலரும் மேடையில் குந்தியிருந்தனர். முறுக்கிய மீசையுள்ள திருமாவளன் பதுங்கிக் கொண்டிருந்தார். வந்திருந்தவர்களில் நீண்ட மூக்குக்காரன் ''நாம் துயரடைகிறோம்... உங்களை பார்த்ததில் மகிழ்ச்சி....'' அரசாங்கத்துக்கு எடுத்துக் கூறுவோம்...'' என்றார்கள். அவர்களது அரசியல் போலவே பேச்சிலும் குழப்பினார்கள். கனிமொழி வாய் பொத்தியிருந்தார். எம்மில் பலரும் கேள்வி கேட்டனர். யாரோ ஒருவர் "ராஜீவ் என்ற ஒற்றைக்கொலைக்காக இன்னும் எத்தனை கொலை செய்யப் போகிறீர்கள்?'' என்றார். எல்லோரும் வாய்களை மூடிக் கொண்டனர். தொப்புள் கொடி உறவுகளில் வேறு யாருமே பேசவில்லை. அவசரமாக கூட்டம் நிறைவுற்றது. அந்தக் கணத்தில் குடும்பத்தையே பலிகொடுத்து விட்டு வந்திருந்து மூலையில் அழுது கொண்டிருந்த ஒருவரை யாருமே கவனிக்கவில்லை. என்னோடு வந்த எல்லா நண்பர்களும் அவர்களோடு நின்று போட்டோ எடுத்துக் கொள்ள முண்டியடித்தார்கள்.நான் அவர்களின் முகத்தில் காறித்துப்பினேன், திரும்பி வந்தபோது மதில்களில் ஒட்டிக்கிடந்த போஸ்டர்களின் மீது காறித்துப்பினேன். அன்றைய இரவு அரைத்தூக்கத்தில் வந்து போன கனவில் அந்தப் பேய்கள் இருந்தன. தூரத்தில் கொலைத் தொழிலாளர்கள் மீதமிருந்தவர்களை முகாம்களில் தேடத் தொடங்கினர். ★

மக்கள் சில விநாடிகள் அமைதியாய் இருந்தனர். சற்று நேரத்தில் பெரும்கூச்சலும் ஒப்பாரியும் கலந்து ஒலிக்க "கழுதையே வெளியே போ" எனக் கூக்குரலிட்டனர். செருப்புகளால் எறிந்தனர்.



# கழுதையே வெளியே போ

கடந்த வாரத்தில் உலகெங்கிலும் உள்ள ஊடகங்களில் சூடு பிடித்திருந்த விடயம் எகிப்திய மக்கள் புரட்சியும் அதனைத் தொடர்ந்து ஹோஸ்னி முபாரக்கின் தப்பி யோட்டமும் ஆகும். வறுமை, வேலையில்லாப் பிரச்சினை, விலைவாசி உயர்வு மற்றும் தொடர விருந்த வாரிசுரிமை ஆபத்து போன்றன மக்களை அரசுக் கெதிராக மாற்றிய காரணங்களாகும். இதற்கு உடனடித் தீர்வாக 82 வயதாகும் ஹோஸ்னி முபாரக் தனது இரு சகாப்த ஆட்சியில் இருந்து பதவி விலகவேண்டும் என மக்கள் கிளர்ந்தெழுந்திருந்தனர். கிட்டத்தட்ட 10 லட்சம் மக்கள் 17 நாள்களுக்கு மேலாக எகிப்தின் தலைநகரமான கெய்ரோ உட்பட முக்கிய நகரங்களில் தொடர்ச்சியான ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்திருந்தனர். மக்கள் குழுமியிருந்த தாரீர் சதுக்கத்தில் இறுதிநாளில் 17 லட்சம் பேர் கூடியிருந்ததாகச் செய்தி ஒன்று குறிப்பிட்டது. மக்கள் எழுச்சி இரண்டு வாரங்களைக் கடந்து நிலைமை மோசமாகிக்கொண்டிருப்பதை உணர்ந்த இராணுவம், தொலைக்காட்சியில் அதிபர் முபாரக் தோன்றித் தனது முடிவை அறிவிப்பார் எனத் தெரிவித்தது.

இதற்கிடையில் முபாரக்கிற்கும் இராணுவத்தினருக்கும் பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருந்தபோது அமெரிக்க புலனாய்வுப் பிரிவினர் விடுத்த அறிக்கையில் முபாரக் பதவி விலகுவார் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனவே மக்களும் இதனைப் பெரிதும் வரவேற்று தாரீர் சதுக்கத்தில் அரச தொலைக்காட்சிக்கு முன்னால் குழுமியிருந்தனர். திரையில் தோன்றிய முபாரக் 17 நிமிடங்கள் உரையாற்றினார். "செப்ரெம்பரில் ஜனநாயக ரீதியான தேர்தல் நடத்த ஏற்பாடுகளைச் செய்துவருகிறேன். அதுவரை நான் அதிபர் பதவியை விட்டு விலகப்போவதில்லை. எனது சில அதிகாரங்களைத் துணை அதிபர் சுலைமானிடம் கையளிக்கிறேன்" என்றார். மக்கள் சில வினாடிகள் அமைதியாய் இருந்தனர். சற்று நேரத்தில் பெரும் கூச்சலும் ஒப்பாரியும் கலந்து ஒலிக்க "கழுதையே வெளியே போ" எனக் கூக்குரலிட்டனர். செருப்புக்களால் எறிந்தனர். மக்கள் ஜனாதிபதி மாளிகையையும் அரச தொலைக்காட்சி நிலையத்தையும் முற்றுகையிட்டு பணிகளை முடக்கினர்.

நிலைமை கட்டுக்கடங்காமல் போய்க்கொண்டிருப்பதைப் பார்த்த இராணுவம் அவசர ஆலோசனைகளை நடத்தி இறுதியில் அதிகாரபூர்வ அறிக்கையை வெளியிட்டது. நாடு முழுவதும் இராணுவத்தின் கட்டுப்பாட்டின்கீழ் வந்துவிட்டதாகவும், பிரச்சினையைத் தீர்ப்பதில் தொடர்ந்தும் கலந்தாலோசனையில் ஈடுபட்டுள்ளதாகவும் அந்த அறிக்கை தெரிவித்தது.

**அட்சயன்**

இதற்கிடையில் அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன், ஜேர்மன் போன்ற நாடுகள் அதிபர் முபாரக்கின் பிடிவாதத்துக்கும், சீர்கெட்டுவரும் ஜனநாயக நிலைமைகளுக்கும் எதிராக பல கண்டனங்களை வெளியிட்டிருந்தன. எகிப்தின் ஜனநாயகத் தலைவர் எல்பரேடி "இராணுவம் நாட்டைக் காக்கவேண்டும்" எனக் கேட்டுக்கொண்டார்.

இராணுவம் தனது இரண்டாவது அதிகாரபூர்வ அறிக்கையை தொடர்ந்து வெளியிட்டது. அந்த அறிக்கையில் செப்ரெம்பரில் பாராபட்சமற்ற தேர்தல் நடைபெறும் எனவும் அந்தப் பொறுப்பு அதுவரை இராணுவத்தின் கீழ் இருக்கும் எனவும் நிலைமை சீராகியவுடன் நீண்டகாலமாக நீடிக்கும் அவசரகாலச் சட்டம் நீக்கப்படும் எனவும் மக்கள் தமது வீடுகளுக்குத் திரும்பி வழமையான கடமைகளில் ஈடுபடவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டது.

## நியூயோர்க் பஷன் - 2011



இதனையே சர்வதேச ஊடகங்கள் எகிப்திய ஆட்சியை இராணுவம் கைப் பற்றிவிட்டதாகத் தெரிவித்திருந்தன. ஆனால் இராணுவத்தினரின் இந்த இரண்டு அறிக்கையிலும் திருப்தி அடையாத மக்கள் நாடு முழுவதும் போராட்டத்தைப் பரப்பினர்.

கெய்ரோ, அலெக்ஸ்சான்றியா, மன் சூரா, சூயஸ், டாம்ன்ஹர், டண்டா, மன் ஹல்லா, அசுயிற், சொசாக் உள்ளிட்ட பல நகரங்கள் புரட்சியால் கொதித்தன.

நிலைமை தீவிரமானதைத் தொடர்ந்து இராணுவம் ''அதிபர் முபாரக் பதவி விலகுகிறார். தனது அதிகாரங்களை இராணுவத்திடம் கையளிக்கிறார்'' என துணை அதிபர் சுலைமான் அரச தொலைக் காட்சியில் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து அல் அரேபியத் தொலைக் காட்சி முபாரக் ஹெலிகொப்டர் ஒன் றின் மூலமாக நாட்டை விட்டு ஓடிவிட்ட தாகவும், அவர் சினாய்த் தீபகற்பத் திலுள்ள ஷாம் எல்ஷேக்கில் இருப்ப தாகவும் சொன்னது. ஆனால் அல் ஜெசிரா தொலைக்காட்சி முபாரக் இஸ் ரேலின் தலைநகரான டெல் அவிவ் வில் இருப்பதாகத் தெரிவித்தது.

செய்திகளை அறிந்த மக்கள் தமக் கிடையேயும் இராணுவத்தினருக்கிடை யேயும் வாழ்த்துக்களை பகிர்ந்து கொண்டு பூங்கொத்துக்களை இராணு வத்தினருக்கு வழங்கினர்.

பின்னர் தத்தம் வீடுகளுக்குத் திரும்பி தற்போது வழமையான நட வடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். எகிப்தில் நிலைமை இயல்பு நிலைக் குத் திரும்பியுள்ளது.

இந்நிலையில் நீண்ட காலமாக இருக்கும் அவசர காலச் சட்டத்தை தற் போதைய நெருக்கடிகள் முடிவுக்கு வந்த பின்னர் நீக்குவதாக இராணுவத்தரப்பு உறுதியளித்துள்ளது. இன்னும் ஆறு மாதங்களில் ஜனநாயக தேர்தல் நடத் தப்படும் எனவும் அதுவரை சுதந்திர மாகவும் நேர்மையாகவும் தேர்தலை நடத்துவதற்கும் அரசியல் சட்டத்தில் உரிய திருத்தங்களை செய்வதற்கும் உறுதியளித்து இருக்கிறது. அதுவரை நாட்டின் அனைத்து நடவடிக்கைகளை யும் இராணுவத்தரப்பே மேற்கொள்ளும் எனவும் கூறப்பட்டுள்ளது.

### ஹோஸ்னி முபாரக்கின் தொடக்கமும் முடிவும்

1981.10.06 அன்று எகிப்திய ஜனா திபதியாக இருந்த அன்வர் சதாத் பாதுகாப்பு அணிவகுப்பு ஒன்றின்போது சுட்டுக்கொல்லப்பட்டார். இதைச் சாதக மாகப் பயன்படுத்திக் கொண்ட முபா ராக் துணை அதிபர் பதவியில் இருந்து ஜனாதிபதிப் பதவிக்கு தம்மைத் தாம் தரம் உயர்த்திக் கொண்டார். அன்றி லிருந்து 2011.02.12 வரையான 30 வருட காலம் ஜனாதிபதியாக எகிப்தை ஆட்சி செய்தார். இந்த முப்பது வருட கால பகுதியில் 6 தடவைகள் பயங் கரவாத தாக்குதல்களில் இருந்து உயிர் தப்பியுள்ளார். ஆட்சியைப் பிடித்துக் கொண்டதிலிருந்து தப்பியோடும் வரை அமெ ரிக்கா சார்பானவராகவே இருந்தார். இவருக்கு எதி ராக உள் நாட்டில் ஒரு அமைப்பு தொடங் குவதையோ, எதிர்க்கட்சி உரு வாவதையோ தடை செய்தே வந்தார். இவரது ஆட்சிக்காலத் தில் வெளி உல குக்குத் தெரி யாத பல கொடூர கொலைகளும் மனித உரிமை மீறல் சம்பவங் களும் நிகழ்ந் திருக்கின்றன. அது இனி எகிப்தில் மலரப் போகும் ஜன நாயக ஆட்சி யினால் வெளிக்கொணரப்படலாம்.



### அமெரிக்கா- இஸ்ரேல் யாருடன்?

எகிப்திய மக்கள் கொந்தளிக்கத் தொடங்கிய காலத்திலிருந்து அமெ ரிக்க ஜனாதிபதி பாராக் ஒபாமா எகிப் தில் சீர்திருத்தங்கள் நிகழ வேண்டும் எனத் தெரிவித்தரே தவிர, முபாராக் மக்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு உடன டியாக பதவி விலக வேண்டும் என்று ஒருபோதும் கூறவில்லை. அவ்வளவு தூரம் எகிப்தில் இருக்கக்கூடிய அமெ ரிக்காவின் நண்பனான ஹோஸ்னி முபா ராக்கின் உறவு நெருக்கமாகவும் தேவை யாகவும் இருந்தது. ஒருபோதும் அவரைப் பகைத்துக்கொள்ளவோ பதவியில் இருந்து இறக்கிவிடவோ அமெரிக்கா விருப்பம் இல்லாமலேயே பிரச்சினை யிலிருந்து தப்பிக்கொள்ளும் நழுவல் போக்கைக் கடைப்பிடித்தது. எவ்வா றானபோதிலும் இந்தப் புரட்சி இவ்வளவு காலம் இழுபறி நிலைக்குப் போனமைக் கும் திடீரென இராணுவம் தலையிட்டு தீர்வுக்கு வந்தமைக்கும் அமெரிக்க நிலைப்பாட்டில் ஏற்பட்ட மாற்றமே கார ணம். யாரோ ஒரு கைப்பிள்ளையை எகிப் தின் இராணுவத்தில் இருந்தோ ஜனநாயகவாதிகளிடமிருந்தோ தேர்ந் தெடுத்துவிட்டார்கள் என்றே இதற்கு அர்த்தம்.

அமெரிக்காவைப் பொறுத்தவரை யில் எகிப்து இன்னொரு ஈரான் ஆகி விடக்கூடாது என்பதில் கவனமாக இருக்கிறது. ஏனெனில் 1979ல் ஈரானில் நிகழ்ந்த இஸ்லாமியப் புரட்சி அமெ ரிக்காவுக்கு சரியான அனுபவத்தைத் தந்துள்ளது. புரட்சிக்கு முன்பிருந்த அரசு அமெரிக்காவின் பக்கம் சரிந்தி ருந்தபோதும் புரட்சிக்குப் பின்னரான அரசு இன்றுவரை அமெரிக்காவுக்கு அடங்க மறுக்கும் தேசமாகவே தன்னை மத்திய கிழக்கில் முன்நிறுத்துகிறது.

இந்தப் பயத்தினாலேயே உலகம் முழு வதும் முபாராக் பதவி விலக வேண்டும் எனக் குரல் கொடுத்து கொண்டிருக் கும்போது ஒபாமா, முபாராக் சீர்திருத் தத்தை கொண்டுவரவேண்டுமென ஓதிக் கொண்டிருந்தார். ஏனெனில் ஒபாமா இன்னொரு கார்ட்டர் ஆக விரும்பமாட் டார்.

அமெரிக்காவை விட இஸ்ரேலே இந்தப் பிரச்சினையால் அதிகம் கவ லைப்பட்டது. தனது நிலைப்பாட்டை இஸ்ரேல் பிரதமர் நேதன்யாகு வெளிப் படையாகவே கூறியிருந்தார். எகிப்தில் ஆட்சி மாற்றம் முஸ்லீம்கள் கைக்குப் போகும். அதனால் இஸ்ரேலின் பொருளா தாரம் மிக மோசமாக பாதிக்கப்படும். கடந்த முப்பது ஆண்டுகளாக இஸ்ரே லும் எகிப்தும் வர்த்தக ரீதியிலான, அர சியல் ரீதியிலான உறவுகளைப் பேணி வருகின்றன. [illegible] காலங்களில் இஸ் ரேல் மிகப் [illegible] யாருளாதார வளர்ச் சியை அ[illegible]து. எடுத்துக்காட் டாக தனது [illegible]கோட்டை எகிப் துடன் பகிர[illegible]ண்டதால் இராணு வத்துக்கா[illegible] மிகவும் குறைந்தி ருக்கிறது. எ[illegible]ான போர்க்காலங் களில் 23 வீத வருமானைய இராணுவத் துக்குச் செலவிட்ட இஸ்ரேல் எகிப்துட னான அமைதிக்குப் பிறகு 9 வீத வரு வாயை மாத்திரமே செலவிடுகிறது. அத் துடன் போர்க்காலங்களில் ஆயிரக்கணக் கான படைகளை நிறுத்தி வைத்திருந்த இஸ்ரேல் இப்போது சில நூறு அளவில் மட்டுமே படைகளை நிறுத்தியுள்ளது.

அமெரிக்கா - இஸ்ரேலுக்கு எகிப் தில் தமது இஷ்டத்துக்கு ஆடக்கூடிய ஒரு நல்ல கைப்பிள்ளையை உருவாக் கிக் கொள்ளும் விருப்பம் உள்ளது. அதற் காகவே பாடுபட்டுக் கொண்டிருக்கின் றனர். அதற்கேற்றாற்போல் மக்களால் தெரிவு செய்யப்படுபவர் அமைந்து விட்டால் எகிப்து ''ஜனநாயக வழிக்கு''த் திரும்பிவிடும். இல்லையேல் மீண்டும் ஒரு மக்கள் புரட்சி ஏற்படலாம். அது இப்போது நடந்து முடிந்ததைப் போல சுலபமானதாக இருக்காது. அப்போது இராணுவத்தினரின் துப்பாக்கிகள் தமது மக்களுக்கு எதிராகவே பாவிக்கப் படலாம். * * *



# புருஷனுக்காக காத்திருத்தல் எனும் கொடுமை



"Half Widows" ஆங்கிலத்தில் எவ்வளவு அழகான வார்த்தை. ஆனால் இந்த வார்த்தைக்குள் புதைந்திருப்பது கண்ணீர், சோகம், மனஅழுத்தம், வாழவே முடியாத சமூக கொடுமை, பிள்ளைகளை வளர்த்தெடுக்கும் துயரம், ஆண்களின் காமத்துக்காக துளைக்கும் பார்வை, செக்ஸ் தேவை யுள்ளவள் என்று ஒவ்வொரு வரும் நோக்கும் இழிநிலை, பொட்டு வைப்பதா இல்லையா என்ற தடுமாற்றம், வெள்ளைச் சேலைக்கு மாற வேண்டுமா எனும் கொடூரம், புருஷன் இல்லாதவள் தானே என்னவும் செய்யலாம் என்ற பொதுவான நோக்கு, எல்லா இடத்திலும் உதாசீனம், ஊரில் பதற்றமான நிலமை. அழகாக உடுக்க முடியாது. புருஷனைத் தொலைத்துவிட்டு சீவி சிங்காரிக்கிறாள் என்ற கேலி இவ்வளவையும் தாண்டி இந்த உலகத்தில் ஒரு பெண்ணால் வாழ முடியுமா? வாழத்தான் வேண்டுமா?

புருஷன் இருக்கிறானா இல்லையா? என்ற ஏக்கத்தில் இன்னும் இலங்கையில் எத்தனை ஆயிரம் பெண்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

89,000 விதவைகள் வடக்கு கிழக்கில் இருக்கிறார்கள் என்று மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் சொல்கிறது. இது பொதுவான ஒரு கணக்கெடுப்பு.

புருஷனைக் காவு கொடுத்த பெண்கள் ஒருபுறம். புருஷனைத் தொலைத்துவிட்டு ஆமிக் காம்ப்புக்கும், பொலிஸ் ஸ்டேசனுக்கும், மனித உரிமைகள் அமைப்புகளுக்கும், ஜனாதிபதிக்கும், நல்லிணக்க ஆணைக்குழுவுக்கும் மனு கொடுத்து தினமும் கண்ணீரும் சோறும் தின்கின்ற தமிழ்ப்பெண்கள் எத்தனை ஆயிரம் பேர். புருஷன் வருவார் என்ற நம்பிக்கை மட்டுமே அவர்களிடம் இருக்கிறது.

கொடூரமான யுத்தத்தினால் காணாமலாக்கப்பட்ட ஆண்களுடைய மனைவிமார்களுக்குத் தான் பாதிவிதவை என்ற பெயர்.

புருஷன் செத்துப் போனால் தலை முழுகி விட்டு மனஅமைதி அடைந்து விடலாம்.

இது, இருக்கிறானோ இல்லையோ என்ற மனஏக்கத்தில் நான்கு, ஐந்து, பத்து வருடங்களாக தேடியலைந்து கொண்டிருப்பது எவ்வளவு பெரிய கொடுமை?

சமூகத்தில் பல காரணங்களினால் பாதி விதவைகள் உருவாக்கப்பட்டுக் கொண்டே இருக்கிறார்கள்.

எனக்குத் தெரிந்த ஒரு பெண்மணியின் கணவரைக் காணவில்லை என்றார்கள். அவளுக்கு மூன்று பிள்ளைகள்.

புருஷன் வெளிநாட்டுக்குப் போகிறேன் என்று போனவர் இருக்கிறாரா இல்லையா என்று தெரியவில்லை.

ஒரு மாசம், இரண்டு மாசம், ஒரு வருஷம், இரண்டு வருஷம் என்று ஒரு தகவலும் இல்லாமல் ஆறு வருஷம் ஓடிவிட்டது.

அந்தப் பெண்ணின் குடும்பத்தினர் பணக்காரர்கள். விசாரிக்காத ஆட்களில்லை; தேடாத இடமில்லை. அந்தப் பெண் மனதளவில் உடைந்து போனாள். இனிப் புருஷன் வர மாட்டார் என்று முடிவெடுத்துவிட்டு அண்மையில்தான் வேறு ஒருவரை குடும்பத்தின் வற்புறுத்தலினால் திருமணம் செய்து கொண்டாள்.

வெளிநாடுகளுக்குப் போன புருஷன் சில நேரம் போகின்ற இடத்தில் ஒரு கலியாணத்தை முடித்துவிட்டு ஊரில் உள்ள தொடர்பை அறுத்துவிடுவார்.

சில நேரம் விசா பிரச்சனை யால் லண்டன், ஜேர்மனி போன்ற இடங்களில் புருஷன்மார் இறுக்குப்பட்டு இருக்கும் கஷ்டமான மன நிலையும் இருக்கிறது. அதனை ஊரில் உள்ளவர்களுக்குச் சொல்லிப் புரியவைக்க முடியாது.

> **வளரும் பிள்ளைகளுக்கு தகப்பன் என்ன ஆனார் என்று சொல்ல முடியாமல் தாய் விக்கித்து நிற்கும் அவலமான நிலமையின் கஷ்டம் விதவைகளுக்குத் தான் தெரியும்.**

அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டவர்கள், அப்பீல் பண்ணியவர்கள் என்று ஆறேழு வருடம் கூட இறுகி இருப்பவர்கள் ஏராளம்.

இப்பொழுது தான் அப்படி 10 வருடம் இருந்தவர்களுக்கு லண்டனில் விசா கொடுக்கிறார்கள். 10 வருஷம் மனைவி பிள்ளைகளைப் பிரிந்து இங்கு கணவனும் அங்கு மனைவியும் கஷ்டப் படுகின்ற பலரை எனக்குத் தெரியும். அவர்களைப் பிரித்து வைத்திருப்பது விசா.

அதற்கிடையில் ஊரில், இலங்கையில், தமிழகத்தில் வாழுகின்ற மனைவிமாருக்கு இங்கு லண்டனில் இருந்து ரெலிபோன் எடுத்து 'உன்ரை புருஷன் வேறு ஒரு பொம்பிளையை வைத்துகக் கொண்டிருக்கிறார்' என்று வேலை மினைக்கெட்டு நேரம் எடுத்து போன் காசு செலவழித்து சொல்லுகின்ற ஒரு ஆளை நான்கண்டிருக்கிறேன். அவருக்கு வேலை, இங்குள்ள புருஷன்மார் எந்தப் பெண்ணோடு கதைத்தாலும் அந்தப் பெண்ணோடு செக்ஸ் தொடர்பு வைத்திருக்கிறார் என்று ஊரில் உள்ள மனைவிமாருக்கு 'கோல்' எடுத்து சொல்வதுதான்.

ஏற்கனவே பதறிப் போயிருக்கும் மனைவிக்கு எப்படி இருக்கும்? பெண்கள் தங்களுடைய புருஷன் மார் வேறு ஒரு பெண்ணோடு தொடர்பு வைத்திருக்கிறார் என்றால் அதைவிட அவர்களுக்கு வேறென்ன கவலை இருக்க முடியும்.

யுத்தத்தைக் காட்டி தீவிரவாதிகளோடு தொடர்பு என்று வீடு புகுந்து அள்ளிப் போட்டுக்கொண்டு போன இராணுவத்தின்பிடியில் இருக்கும் புருஷன்மார் எப்பொழுது வருவார்கள் என்று தெரியாமல் இருக்கின்ற பெண்கள் இலங்கையில் மட்டுமல்ல உலகத்தின் எல்லா மூலைகளிலும் இருக்கிறார்கள்.

1989 களில் காஷ் மீரில் தீவிரவாதிகள் என்று பிடித்துப் போன ஆண்களின் மனைவிமார்கள் இராணுவம் பிடித்துக் கொண்டு போன தம் கணவன்மார்கள் இந்த இருபது வருடத்தில் என்ன ஆனார்கள் என்று தெரியாமல் வேறு திருமணமும் முடிக்கவில்லை. வாழ்க்கை நரகமாக கழிந்து போய்க் கொண்டிருக்கிறது.

**இளைய அப்துல்லாஹ்**

இலங்கையில் புலனாய்வுப் பிரிவினர் என்று சொல்பவர்கள் கொத்துக் கொத்தாகக் கொண்டு போனவர்களுக்கும் நடந்தது இதுதான். காஷ்மீரில் இந்தியப் படை கொண்டு போனவர்களுக்கும் நடந்தது இதுதான்.

கொண்டு போன மனிதர்கள் எங்கே என்று கேட்டால் ''ஒருவருடம் காணவில்லை என்றால் வந்து மரணச் சான்றிதழை வாங்கிப் போங்கள்'' என்று மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் சொல்கிறது.

காஷ்மீரில் இராணுவம் ஒன்றுமே சொல்லாமல் கல்லுளி மங்கன் போல கிடக்கிறது.

சம்பாதிக்க வழியில்லை, பிள்ளைகளை ஒழுங்காகக் கவனிக்கமுடியாது, ஊரவர்களின் அசட்டை என்று வாழ்வும் வயதும் அழிந்து கொண்டிருப்பவர்கள் "Half Widows". அரை விதவைகள்.

புருஷன் இல்லாதவர்கள், புருஷனைத் தொலைத்தவர்கள் அனேகமாக கிராமங்களைச் சேர்ந்த, படிப்பறிவு குறைந்தவர்களாகவே அதிகமான பெண்களை உலகம் முழுக்கக் காணுகிறோம்.

போதிய பணவசதி இன்றி சுயதொழிலுக்குப் போனாலும் வேலைக்குப் போகும் வீட்டில் உள்ள ஆண்களால் பாலியல் சேட்டைகளுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள்.

எனவே அவ்விதம் வீடுகளில் வேலை செய்யப்போகும் பெண்கள் சுதந்திரமாக வேலை செய்ய முடியாமல் இருக்கிறது.

இலங்கையில் மட்டும் கிழக்கு மாகாணத்தில் 49,000 பெண்களும், வடக்கு மாகாணத்தில் 40,000 பெண்களும் விதவைகளாக இருக்கின்றனர்.

இதில் கொடுமை என்னவென்றால், 40 வயதுக்குக் குறைந்தவர்கள் 12,000 பேர். 8000 விதவைப் பெண்களுக்கு குறைந்தது 3 பிள்ளைகள் இருக்கிறார்கள்.

ஒரு விடயத்தை இங்கு சொல்லத் தான் வேண்டும். இலங்கை அரசாங்கம், தான் செய்த யுத்தத்தில் பாதிக்கப்பட்டவர்களை கைவிட்டிருக்கிறது. விதவையொருத்தி தனது கணவனின் மரணச் சான்றிதழைக் சமர்ப்பித்தால் நஷ்ட ஈடு 50,000 ரூபா கிடைக்கிறது. அரசு கொடுக்கிறது. புருஷன் செத்துப் போனான் என்று உறுதியாகத் தெரியாமல் பூவையும் பொட்டையும் இழக்கத் தைரியமில்லாத எமது தமிழ்ப் பெண்கள் பல வருடங்களாக அதிகார தரப்பினர் கடத்திக் கொலை செய்த கணவன்மார்கள் திரும்பி வருவார்கள் என்ற வெறும் நம்பிக்கையோடு நெற்றியில் கும்குமத்தை அழிக்க விரும்பாமல், மரணச் சான்றிதழை எடுக்காமல் இருக்கின்றனர்.

இது தமிழ் 'சென்டிமென்ட்' சம்பந்தப்பட்டவர்கள் வாழ்வின் பெரும் நெருக்கடி. ஆனால் சமூகம், கலாசாரம் என்று சொல்லித்திரிபவர்கள் கூட இந்த அபலைப் பெண்கள் விடயத்தில் வாய் திறவாமல் இருக்கின்றனர்.

வளரும் பிள்ளைகளுக்கு தகப்பன் என்ன ஆனார் என்று சொல்ல முடியாமல் தாய் விக்கித்து நிற்கும் அவலமான நிலமையின் கஷ்டம் விதவைகளுக்குத் தான் தெரியும்.

வாழ்வில் இழந்து போனவைகளைத் தேடிக்கண்டு பிடிக்க முடியும். ஆனால் தமது புருஷன்மார் உயிருடன் உள்ளார்களா? இல்லையா? என்று தெரியாமல் நிற்கும் பெண்கள் இந்த விதவைகள்.

ஆண்கள் ஆதிக்க சமூகத்தில் எத்தனைக்கென்று இந்தப் பெண்களால் போராடமுடியும் என்று கேட்கிறார் ஒரு சமூக ஆர்வலர். சமூகம் எப்பொழுதும் பெண்களையே தண்டிக்கிறது. அது இலங்கையிலும் அப்படித்தான் காஷ்மீரிலும் அப்படித்தான் சூடானிலும் அப்படித்தான். ★



# சுடர் ஒளி

**20, பெப்ரவரி - 26, பெப்ரவரி, 2011**

*85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை, கொழும்பு-14. டெலிபோன்: 0115798005 பாக்ஸ்: 0115517944 - 5*

E-mail: editorial@sudaroli.com


## பாதிக்கப்படுபவன் தமிழன் மட்டுமே

நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்ட ஒன்று இப்போது நடந்து விட்டது. இலங்கையில் அமைதி திரும்பினால் கடலில் தமிழக - ஈழத் தமிழ் மீனவர்கள் இடையே மோதல்கள் ஆரம்பிக்கும் என்ற எதிர்வு கூறல்கள் 2002 முதல் 2005 கடந்த அமைதிக்கான காலத்திலேயே முன்வைக்கப்பட்டன. இப்போது அது உண்மையாகி இருக்கிறது.

எல்லை மீறினார்கள் என்ற குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 136 பேர் வடக்குக் கடலில் சிறைப்பிடிக்கப்பட்டார்கள். இலங்கைத் தமிழ் மீனவர்களே அவர்களைப் பிடித்தார்கள் என்று சொல்லப்படுகின்றது.

இலங்கையின் வடக்குக் கடலில் மீன்பிடிப்பது தொடர்பான இந்தப் பிரச்சினை அளவுக்கு அதிகமாகவே இன்று அரசியல்மயப்பட்டுக் கிடக்கிறது. "மீனவர்கள் மீனின் பின்னால் செல்பவர்கள். அவர்களுக்கு கடலில் எல்லை எது என்பது தெரியாது. அதனால் அவர்கள் சாதாரணமாகவே இலங்கை எல்லைக்குள் சென்று விடுகிறார்கள்" என்கிறார் பேராசிரியர் சூரியநாராயணன்.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியரான இவருக்கு இந்தப் பிரச்சினை பற்றிய ஆழமான அறிவும் அனுபவமும் இருக்கின்றது. மறுபுறத்தில் இந்தப் பிரச்சினனை ஈழ மீனவர்களின் மனிதாபிமான வயிற்றுப் பிழைப்புப் பிரச்சினையாகவும் இருக்கிறது.

தாம் கடன் பட்டு வாங்கி கடலில் விரிக்கும் வலைகளை இந்திய இழுவைப் படகுகள் (ட்ரோலர்) ஒரே இரவில் அறுத்துவிட்டுச் செல்வதால் தமது வாழ்க்கையே கேள்விக்குறியாகி விடுகிறது என்கிறார்கள் வடக்கு மீனவர்கள்.

"எமது கடல் எல்லைக்குள் வந்து மீன்பிடிக்க வேண்டாம் என்றுகூட நாங்கள் சொல்லவில்லை. இழுவைப் படகுகளில் வந்து இருமடி முறையில் மீன் பிடிக்க வேண்டாம் என்றே கேட்கிறோம்" என்று சொல்கிறார் அந்தோனிப்பிள்ளை எமிலியாம்பிள்ளை. வடமராட்சி கிழக்கு மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் அவர்.

கடந்த 30 வருடங்களாகப் போரால் கடலில் அதிக தூரம் சென்று மீன்பிடிக்கும் வாய்ப்பு வடக்கு மீனவர்களுக்கு மறுக்கப்பட்டிருந்தது. இப்போதே அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக அதிலிருந்து மீண்டு வருகிறார்கள். தமது வாழ்க்கையை ஓரளவுக்காவது மீளக் கட்டியெழுப்பலாம் என்று அவர்கள் எண்ணும் நேரத்தில் இந்திய இழுவைப் படகுகள் வெடி குண்டுகளாக அவர்கள் வாழ்க்கையைச் சிதறடிக்கின்றன.

பிரச்சினையை இரு தரப்பு மீனவர்களும் பேசித் தீர்க்க வேண்டும் என்று நீண்ட காலமாகச் சொல்லப்பட்டு வருகின்றது. ஆனால் முடிவுதான் இல்லை. எடுக்கப்பட்ட சில முயற்சிகளும் வெற்றியளிக்கவில்லை. பதிலாக, தமிழகத்தில் தற்போது தகிக்கும் தேர்தல் வெக்கை இந்தப் பிரச்சினையையிலும் அடிக்கிறது. அதனை அரசியல் மூலதனமாக்க திமுக முதற்கொண்டு அனைத்துக் கட்சிகளும் ஆலாய்ப் பறக்கின்றன. விளைவு இரு நாட்டு உறவுகள், இராஜதந்திர முறுகல்கள் என்பதாகப் பிரச்சினை விஸ்வரூபம் எடுத்துள்ளது.

கைதான இரண்டே நாள்களுக்குள் (கடந்த வெள்ளிக் கிழமை) மீனவர்களை விடுவிக்க வேண்டும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் பகிரங்கமாக எச்சரிக்கை செய்யுமளவிற்கு பிரச்சினை முற்றியது. அதற்குப் பயந்து கொண்டு உடனடியாகவே அவர்களை இலங்கையும் விடுவித்தது.

ஆனால், வடக்கு மீனவர்களின் பிரச்சினைக்கு ஆக்கபூர்வமான தீர்வு எதுவும் இல்லாமலேயே பிரச்சினைக்கு இரு நாட்டு அரசுகளும் தீர்வு கண்டு கொண்டன. இன்னும் விளக்கமாகச் சொன்னால் மீண்டும் சிங்களமும் வடக்கிந்தியர்களும் இணைந்து தமிழர்களின் வயிற்றில் அடித்துள்ளார்கள்.

# அத்துமீறலா? வல்லாதிக்க நாடகமா?

இலங்கையில் இப்போது புதிய பிரச்சினை ஒன்று உருவாகியிருக்கிறது. வடபகுதிக் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழைந்து கடலின் இயற்கைத் தன்மையைக் குழப்பும் வகையிலான மீன்பிடி முறைகளைப் பயன்படுத்தி வளங்களைச் சுரண்டி வரும் குற்றச்சாட்டு நீண்ட காலமாகத் தொடர்கின்றது. இதனைத் தடுக்கும் வகையில் இலங்கை - இந்திய அரசுகளுக்கிடையில் பேச்சுக்களும் ஒப்பந்தங்களும் ஒருபுறமாக நடைபெற, மறுபுறத்தில் அத்துமீறல்களும், வன்முறைகளும் நடந்தவண்ணமே உள்ளன. கச்சதீவு உரிமைப் பிரச்சினை தொடக்கம் இலங்கை மீனவர்கள் இந்தியக் கடல் எல்லைக்குள் அத்துமீறுவதும், இந்திய மீனவர்கள் இலங்கைக் கடல் எல்லைக்குள் படையெடுப்பதும் இரு நாட்டு வெளியுறவில் இருக்கும் விசுவாசத்தை அவ்வப்போது இடையூறு செய்வதாக அமைகின்றன.

முன்பு இந்தப் பிரச்சினைகள் வேறு விதமாக அணுகப்பட்டன. அதாவது 2009 இற்கு முன் இலங்கை-இந்தியக் கடற்பரப்பில் நடக்கும் எல்லாச் சம்பவங்களும் புலிகளின் தலையில் சுமத்தப்பட்டன. தென்னிலங்கை மீனவர்கள் தாக்கப்பட்டாலோ, அல்லது இந்திய மீனவர்கள் தாக்கப்பட்டாலோ, அனைத்துச் சம்பவங்களும் விடுதலைப் புலிகள் மீது சுமத்தப்பட்டன. இதனால் இருநாட்டு உறவுகளுக்கும் நெருக்கடி ஏற்படவில்லை. இப்போது இந்திய மீனவர்கள் தாக்கப்படுவது, கொலை செய்யப்படுவது போன்ற சம்பவங்களுக்கு இலங்கைக் கடற்படையினர்மீது வெளிப்படையாகக் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. அண்மையில் இந்திய மீனவர் கொல்லப்பட்ட சம்பவத்துக்காக மஹிந்த ராஜபக்ஷவின் கொடும்பாவியும் தென்னிந்தியாவில் எரிக்கப்பட்டது.

இவ்வாறான நெருக்கடிகளில் இலங்கை இந்திய உயர்மட்டங்களுக்குள் அவசர சந்திப்புக்களும் உடன்படிக்கைகளும் ஏற்படுத்தப்பட்டு உறவில் பங்கம் ஏற்படாத வகையில் சமரச முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. உயர்மட்டங்களின் கைமாற்றுப் பயணங்களும் நடந்தன. இவை எல்லாவற்றினதும் ஒரு மாத முடிவுக்குள் யாழ்ப்பாணக் கடற்பரப்பில் அடுத்தடுத்து நூற்றுக்கணக்கான இந்திய மீனவர்கள் யாழ்.மீனவர்களால் பிடிக்கப்பட்டதுடன் அவர்களின் படகுகளும் கரைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. கடந்த செவ்வாய்கிழமை பருத்தித்துறைக் கடற்பரப்பில் அத்து மீறி தடை செய்யப்பட்ட இழுவைப்படகுகளில் மீன்பிடித்துக் கொண்டிருந்த 112 இந்திய மீனவர்கள் முனை பகுதி மீனவர்களால் பிடிக்கப்பட்டதுடன் அவர்களது 26 படகுகளும் கரைக்குக் கொண்டு வரப்பட்டன. மறுநாள் புதன்கிழமை மாதகல் கடற்பரப்பில் 4 கடல்மைல் தொலைவில் அத்து மீறி மீன்பிடியில் ஈடுபட்டிருந்த 26 இந்திய மீனவர்கள் வலி.தென்மேற்கு கடற்றொழிலாளர்களால் பிடிக்கப்பட்டதுடன் அவர்களது 7 படகுகளும் கைப் பற்றப்பட்டன. பிடிக்கப்பட்டவர்கள் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டு நீதி மன்றத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளனர்.

**பூமுகன்**

இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழைந்து தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளைப் பயன்படுத்தி வடபகுதிக் கடல் வளத்தை சுரண்டும் செயல் நெடுங்காலமாக நடைபெறுகின்றது. முன்பெல்லாம் இவை கண்டும் காணாமல் விடப்பட்டதாகவே கொள்ளவேண்டும். இவற்றை தடுக்கவோ தட்டிக்கேட்கவோ எமது பகுதி மீனவர்களுக்கு அதிகாரம் இருக்கவில்லை. அது மட்டுமன்றி இந்திய மீனவர்கள் இப்போது நெருங்கி வரும் இடங்களுக்கு எமது மீனவர்கள் செல்ல அனுமதியும் இருக்கவில்லை. இதனால் வளச் சுரண்டல் போதியளவில் நடைபெற்றன. பதிலாக எமது கடற்றொழிலாளர்கள் இடம் பெயர்ந்து வேறு தொழில்களைச் செய்யவேண்டிய நிலையே ஏற்பட்டது. இப்போதும் மீனவர்கள் கடலுக்கு செல்லும் நேரம், பகுதி என்பன பல இடங்களில் மட்டுப்படுத்தப்பட்டே இருக்கின்றன.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் நடந்து முடிந்த இந்த இரண்டு சம்பவங்களுக்கும் பின்னால் சில மர்மங்கள் இருப்பது தெளிவாகின்றது. உண்மையில் மீனவர்களின் தனி முயற்சியால்தான் இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டார்களா? அல்லது இவர்களை யாராவது தூண்டி விட்டார்களா? அல்லது இவர்களுக்கு யாராவது துணை செய்தார்களா? என்ற கேள்விகள் எழுகின்றன. ஆனால் பதில், தனி முயற்சியெனவே சொல்லப்படுகின்றது.

இது, தமிழக மீனவர்கள் துன்புறுத்தப்படுவது, கொலை செய்யப்படுவது தொடர்பில் இலங்கைக் கடற்படையினர் மீது எழுந்துள்ள சர்ச்சையை விலக்கிக் கொள்ளும் வகையில் வடபகுதி மீனவர்களைத் தூண்டி விட்டு தமிழகமீனவர்களுக்கும் இலங்கைத் தமிழ் மீனவர்களுக்கும் இடையில் வன்முறைகளை ஏற்படுத்தி குற்றச்சாட்டில் இருந்து தப்பித்தக் கொள்ளும் இலங்கை அரசின் முயற்சியா? ஆனால் பதில், நிச்சயமாக அப்படியில்லை. இது மீனவர்களின் உரிமைப் பிரச்சினை என்று அமையலாம்.

இது, இந்தியா திட்டமிட்டு மீனவர்களை இலங்கை கடற்பகுதிக்குள் நுழையத் தூண்டி விட்டு, எங்களது மீனவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை. எனவே இலங்கையின் வடபகுதிக் கடற்பரப்பில் (யாழ்ப்பாணக் கரையோரங்களில்) முகாம் அமைத்து இந்தியக் கடலோரக் காவல் படையைப் பணிக்கு அமர்த்தும் முயற்சியா? ஆனால் இதற் கான பதில்...

ராஜீவ் காந்தியை விடுதலைப் புலிகள்தான் கொன்றார்கள் என்ற ஊகத்தின் அடிப்படையில் இலங்கை அரசுக்கு எதிராக ஆரம்பகாலத்தில் புலிகள் அமைப்பைக் கட்டியெழுப்பிய இந்தியாவே புலிகளை அழிக்கவேண்டும் என்ற முழு மூச்சுடன் செயற்பட்டு அதனை நிறைவேற்றியிருக்கிறது. அந்த நோக்கத்துக்காக இலங்கையில் தமிழ் ஆயுதக்குழுக்களை இந்தியா வளர்த்ததோ அந்த நோக்கம் நிறைவேற அவர்களை விலக்கிக்கொண்டது. இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தனது இருப்பை நிலை நாட்டிக்கொண்டு அமெரிக்காவுக்கு சவால் விடுவதே இந்தியாவின் அந்த நோக்கமாக அப்போது இருந்தது. (அமெரிக்காவை விட அயல் நாடான இலங்கை மீது எனக்கு அதிக அக்கறை உண்டு என்ற தொனியில்)

நோக்கங்களும் தேவைகளும் காலத்துக்கு காலம் மாறுபடும். இப்போது புதிய நோக்கமும் தேவையும் இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ளது. இதுவும் வல்லாதிக்கப்போட்டிதான். ஆனால் அமெரிக்காவுடன் இல்லை. ஏனென்றால் இப்போது இந்தியா அமெரிக்காவின் செல்லப்பிள்ளை. புதிய வல்லாதிக்கப் போட்டி இந்தியா - சீனா ஆகியவற்றுக்குள்தான்.

சீனா இலங்கைக்குள் இப்போது எவ்வளவு ஆதிக்கம் செலுத்துகின்றதோ அந்த அளவுக்கு மேலாக இந்தியா மூக்கை நுழைத்துக்கொள்கின்றது. நானா? நீயா? போட்டிதான் இது. இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் இல்லாது போக இலங்கையின் தென்பகுதியை சீனாவும் வடபகுதியை இந்தியாவும் விழுங்கத் தொடங்கியுள்ளன. இந்தச் சந்தர்ப்பத்தில் சீனாவின் விழுங்கலை தந்திரோபாய முறையில் மீட்கும் முயற்சியில் இந்தியா இறங்கியுள்ளது.

இந்தியாவுக்கு நல்ல நம்பிக்கை இருக்கின்றது இலங்கை உண்ட பாத்திரத்துக்குள் திருப்பி... இருக்காது என்று. அந்த அளவுக்கு விடுதலைப்புலிகளை அழிப்பதற்காக இந்தியா உதவியிருக்கின்றது. இதனைப் பயன்படுத்தி அரசியல், பொருளாதார ரீதியில் இலங்கை மீது இந்தியா ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியுள்ளது.

இந்திய மீனவர்கள் தொடர்ச்சியாக இலங்கை கடல் எல்லைக்குள் பிடிக்கப்பட்டால் அவர்களை இலங்கையில் குறுகிய நாள்கள் வைத்துப் பராமரிப்பதற்குக்கூட பல்வேறு பிரச்சினைகள் ஏற்படலாம். இதற்கும் இந்திய உதவியைத்தான் நாட வேண்டியிருக்கும். இருபக்க அரசுத் தரப்பினரும் ஏதோ அடிப்படையில் தப்பித்துக் கொள்வார்கள். ஆனால் மீனவர்களுக்கிடையில் பிரச்சினை ஆரம்பிக்குமாக இருந்தால் அதை கட்டுப்படுத்துவது சாத்தியமற்ற விடயம்தான். மாறி மாறி பழி தீர்க்கப்பட்டுக் கொண்டே இருக்கும்.

யாழ். சம்பவங்கள் தொடர்பில் தமிழ் அரசியல் தரப்பில் மௌனம் காக்கப்படுகின்றது. அவர்கள் மீனவர்களுக்கு பின்னால் எவரோ செயற்படுவது குறித்தே இந்த மௌனத்தை காட்டிவருகின்றனர். மீனவர்களை இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட வேண்டாம் என்று கூறுவதற்கோ அல்லது பிடியுங்கள் என்று ஊக்குவிக்கவோ இவர்கள் விரும்பவில்லை.

சீனாவும் இந்தியாவும் மோதி பலப்பரீட்சை வைப்பதற்கு இலங்கையைப் பயன்படுத்த எண்ணும் இந்த சந்தர்ப்பத்தில் அவர்களுக்குச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுத்துவிட்டு எம் தலையில் மண்ணை அள்ளிப் போட்டுக் கொள்ளும் நிலையை விலக்கவேண்டும். யுத்தத்தால் அழிந்துபோன எமது தேசத்தை கட்டி எழுப்புவதற்கு பதிலாக வேறு வில்லங்கங்களை விலை கொடுத்து வாங்குவது பொருத்தமற்றது. #

# விலங்கு சுமக்கும் விதவைகள்



சந்திரசேகரஆசாத்

விதவைகள் என்ற வார்த்தை உச்சரிக்கப்படும் போதே அதற்குள் ஒரு பரிதாபமும் இன்னொரு புறம் ஒரு ஏளனமும் தொனிப்பதை உணர முடியும். ஆனால் இவர்கள் பரிதாபப்பட வேண்டியவர்களோ அல்லது ஏளனம் செய்யப்படுபவர்களோ அல்ல என்றும் அவர்களும் ஏனையோரைப் போன்று இயல்பான வாழ்க்கைக்கு உரிமையுடையவர்கள் என்பதும் உணரப்படும் போது மட்டும்தான் அவர்கள் இன்று சுமக்கும் விலங்குகள் உடைவதற்கான வாய்ப்புகள் உருவாகும்.

இத்தனைக்கும் இவர்கள் எந்தக் குற்றமும் செய்தவர்கள் அல்லர். மாறாக இவர்கள் வேறு எவரோ எங்கிருந்தோ செய்துவிட்ட குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்கள். பொருளாதாரம், சமூக அந்தஸ்து, பாலியல் தேவைகள் எனப் பன்முகங்களில் வஞ்சிக்கப்பட்டு வாழுபவர்கள். அதுமட்டுமன்றி எமது சமூகத்தில் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு ஏனைய பெண்களிடமிருந்து வேறுபடுத்தப்பட்டு அவர்கள் இனம் காட்டப்படுவதே எமது பண்பாட்டின் பேரால் எமது சமூகம் அவர்களுக்கு இழைக்கும் பெருங் கொடுமை யாகும். அது அவர்களை ஒவ்வொரு வினா டியும் தங்கள் நிலை மைக்காக வேதனைப்பட வைக்கும் இரக்க மற்ற மனிதாபிமானப் படுகொலையாகும்.

இக்கட்டுகள் மத்தியிலும் தங்களைச் சாதனையாளர்களாக நிலைநாட்டிக் கொண்டவர்கள் இல்லையென்று சொல்லிவிட முடியாது. திருமதி.இந்திராகாந்தி, திருமதி.சிறிமாவோ பண்டாரநாயக்கா போன்றோர் விதவைகளாகவே உலகம் வியக்கும் தேசத்தலைவர்களாக பெரும் சாதனைகளை ஈட்டினர். கணவன் இறந்த பின்பும் வேறு எவருமே முன்நிற்க முடியாத இனசயரசியாக திருமதி.கே.பி. சுந்தராம்பாள் விளங்குகின்றமையை நாம் மறந்து விடமுடியாது.

இப்படி ஒரு சில விரல் விட்டு எண்ணக்கூடிய தொகையினர் விதவைகளாக இருந்தபோதும் உயரிய நிலையை எட்டவும், மற்றவர்களால் பேசப்படும் வகையில் உயரவும் அவர்கள் ஏற்கனவே வகித்து வந்த சமூக அந்தஸ்தே காரணமாக விளங்கியது. ஆனால் சாதாரண குடும்பங்களைச் சேர்ந்த பெண்களைப் பொறுத்த வரை அவர்கள் விலங்கு சுமக்கும் நிலையிலேயே வாழ வேண்டியுள்ளது. அண்மையில் சிறுவர் மகளிர் விவகார அமைச்சர்

ஹிஸ்புல்லா அவர்களால் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில் இலங்கையின் வடக்குக் கிழக்கில் என்பத்தொன்பதாயிரம் விதவைகள் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. வடக்குக் கிழக்கின் மக்கள் தொகையுடன் ஒப்பிடும் போது கணவனை இழந்த பெண்களின் தொகை பெரும் விகிதாசாரமே.

கிழக்கில் 1984, 1990, 1991 ஆகிய காலப் பகுதிகளில் அரசு படைகள் கிராமங்களைச் சுற்றி வளைத்து ஆண் களை ஓரிடத்தில் கூட் டிவைத்து கண் மூடித் தனமாகச் சுட்டும் வெட்டியும் எரித்தும் மேற்கொண்ட படுகொலைகள் அங்கு ஆயிரக்கணக்கான விதவைகளை உருவாக்கின. அக்கால கட்டத்தில் வடக்கிலும் மணலாறு வல்வெட்டித்துறை போன்ற பகுதிகளிலும் இப்படியான இரக்கமற்ற படுகொலைகள் மேற்கொள்ளப்பட்டன. கடந்த முப்பது வருடப் போர்க்காலத்தில் ஏராளமான விதவைகள் உருவாக்கப்பட்டது மட்டுமன்றி வன்னியில் போரின் இறுதி நாட்களில் பல்லாயிரக்கணக்கான பெண்கள் விதவைகளாகும் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது.

போரின் போது விதவைகள் உருவாவது தவிர்க்க முடியாதது எனச் சிலர் சுலபமாகச் சொல்லி விடலாம். ஆனால் போர் முடிந்த பின்பும் அவர்கள் அனுபவிக்கும் தொடர்துன்பங்களை அவர்களும் மனித ஜீவன்கள் தான் என்ற வகையில் எவரும் அலட்சியம் செய்துவிட முடியாது.

போர்களில் ஏராளமான முஸ்லீம்கள் இறந்தபோது அண்ணல் முகமதுநபி அவர்கள் ஒரு ஆண் நான்கு பெண்களைத் திருமணம் செய்ய அனுமதி வழங்கினார் தானே. ஒரு விதவையைத் திருமணம் செய்து முன்னுதாரணமாக விளங்கினார். கடுமையான இந்துத்துவக் கோட்பாட்டைப் பின்பற்றிய மகாத்மா காந்தி கூட இந்திய பாகிஸ்தான் பிரிவினையின் போது ஏற்பட்ட உயிரிழப்புகளின் போது இளைஞர்கள் விதவைப் பெண்களைத் திருமணம் செய்ய முன்வர வேண்டும் என அழைப்பு விடுத்தார்.

இப்படியாக அன்றிலிருந்து இன்று வரை விதவை களின் பிரச்சினைகளைத் தீர்க்கப் பலவித முயற்சிகள் எடுக்கப்பட்டாலும் கூட அவர்கள் முகம் கொடுக்க வேண்டிய துன்பங்கள் குறைந்தபாடுமில்லை; நீங்கிய பாடுமில்லை.

எமது தமிழ்ச் சமூகத்தைப் பொறுத்த வரை சமூக மாற்றங்கள் எவ்வளவு தான் உருவாகிய போதும் சில நம்பிக்கைகளில் இன்னும் பண்பாட்டின் பெயரால் முடங்கிப் போயிருக்கிறோம் என்பதை ஏற்கத் தான் வேண்டும். எமது பாதிக்கப்பட்ட பெண்களும் அதுவே பெண்மை என்றும், ஒரு நல்ல பெண்ணுக்குரிய தகமைகள் எனவும் நம்பி தம்மைத்தாமே வருத்திக் கொள்கின்றனர். பெண் விடுதலை பற்றிப் பேசுபவர்கள் கூட ஒரு பெண் இந்தக் கட்டுப்பாட்டை மீறிவிட்டாலும் அருவருப்புடன் பார்க்கும் நிலைமையே நிலவுகிறது. அவரின் வாழ்வியல், உடல், உள உணர்வுகள் பற்றி எவருமே பொருட்படுத்துவ தில்லை.

கணவனை இழந்த ஒரு பெண் மூன்று விதமான நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டியவளாகிறாள்.

> குடும்பத்தின் பொருளாதார நிர்வாகத் தேவைகளை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பை அவள் தலையில் சுமக்கும் போது அவளே உழைக்க வேண்டிய தேவைக்குத் தள்ளப்படுகிறாள். ஆனால் பணிபுரியச் செல்லுமிடங்களில் பல சந்தர்ப்பங்களில் விரும்பத்தகாத விளைவுகளைச் சந்திக்க வேண்டி நேர்ந்து விடுகிறது.

அவன் கணவன்இல்லாத நிலையில் பொருளாதாரத் தேவைகள் உட்பட குடும்பத்தின் முழு நிர்வாகப் பொறுப்பையும் தானே சுமக்க வேண்டியவளாயுள்ளாள். அடுத்து, பல சமயங்களில் பாதுகாப்பற்ற ஒருநிலையில் ஆண்களின் பாலியல் சார்ந்த துன்புறுத்தல்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய அதே நேரத்தில் ஒவ்வொரு சிறு விஷயத்திலும் கூட ஏனைய பெண்களாலேயே சந்தேகக் கண் கொண்டு பார்க்கப்படும் நிலைமைக்கு உட்படுத்தப்படுகிறாள். மூன்றாவது, அவளின் உடலில் இயற்கையாகவே எழும் பாலியல் தேவைகளை நிறைவேற்ற முடியாது மன அழுத்தங்களுக்கும் உடல் நோய் களுக்கும் உட்படுகிறாள்.

பொது நிறுவனங்களோ பெண்ணிலைவாதிகளோ இந்த விதவைப் பெண்களின் முதலாவது பிரச்சினை தொடர்பாக அக்கறைப்படுவதுடன் நிறுத்திவிடுகின்றனர். அவர்களின் விமோசனத்திற்கு அது போதுமானது என்பது போலவே நடந்து கொள்கின்றனர்.

இப்பெண்கள் சந்திக்கும் பிரதான பிரச்சனை இது என்பது உண்மை தான். குடும்பத்தின் பொருளாதார நிர்வாகத் தேவைகளை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பை அவள் தலையில் சுமக்கும் போது அவளே உழைக்க வேண்டிய தேவைக்குத் தள்ளப்படுகிறாள். ஆனால் பணிபுரியச் செல்லுமிடங்களில் பல சந்தர்ப்பங்களில் விரும்பத்தகாத விளைவுகளைச் சந்திக்க வேண்டி நேர்ந்து விடுகிறது. சில சந்தர்ப்பத்தில் வார்த்தைகளாலோ அல்லது தொடுதல், உரசுதல் போன்ற சில கீழ்த்தரமான முறையிலேயோ சிலரின் தொல்லைகளுக்கு ஆட்பட வேண்டி ஏற்படுகிறது. இதற்கு நேரடியாக எதிர்ப்புத் தெரிவிக்க முடியாது மனசுக்குள்ளேயே புழுங்க வேண்டிய இக்கட்டான நிலையும் தோன்றலாம். மிகக் குறைந்த சந்தர்ப்பங்களில் பலவந்தமாகவோ தவிர்க்க முடியாமலேயோ எதிர்ப்புத் தெரிவிக்க முடியாமலோ பாலியல் வல்லுறவுக்கு உட் படுத்தப் படும் மோசமான நிலைமையும் எழுவதுண்டு. அதை விட இவர்களின் வறுமை நிலை காரணமாக சில நகரங்கள் ஆடைத் தொழிற்சாலை வேலை போன்ற பொய்க் காரணங்களைக் காட்டி. இவர்களைத் தொலை தூரங்களுக்கு அழைத்துச்சென்று ஆபத்துக்களில் மாட்டும் சம்பவங்களும் இடம்பெற வாய்ப்புண்டு.

சில தொண்டு நிறுவனங்கள் இவர்களுக்கும் சுயதொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுப்பதன்மூலம் இவர்கள் இப்படியான இக்கட்டுகளுக்குள் அகப்படாமல் காப்பாற்ற முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றன. ஆனால் இந்நிறுவனங்களால் முழு விதவைகளுக்கும் உதவ முடியாது என்பது யதார்த்தமாகும்.

அடுத்து சமூகத்தால் சந்தேகக் கண் கொண்டு பார்க்கப் படுவது இப்பெண்களை மனோரீதியாகப் பெரும் பாதிப்பிற்கு உள்ளாக்கும் நிலமையை உருவாக் கும். குடும்ப வருமானத்துக்காகவும் தேவை களை நிறைவேற்றவும் இவர்கள் பல் வேறு தரப்பினரோடும் பழகவேண்டிய தேவை எழுகிறது. இப்படியான சந்தர்ப்பங்களில் இவர்களின் பலவீனமான நிலையைக் கருத்தில் கொண்டு சில ஆண்கள் தங்கள் பாலியல் வக்கிரகங்களை இவர்கள் மீது பிரயோகிக்கும் நிலை ஏற்படுவதுமுண்டு. இவர்களும், இவர்களுடன் பழகும் ஆண்களும் நல்ல முறையில் பழகினாலும் கூட சிலரால் சந் தேகக் கண் கொண்டு பார்க்கப் படுவதுமுண்டு.

இப்படியான நேரங்களில் பெண்களே கூட பெண்களைக் கேவலப் படுத்தும் அநியாயமும் நடப்பதுண்டு.

மூன்றாவது, பிறரால் பொருட்படுத்தப்படாத, புரிந்து கொண்டாலும் பேசப் படாத, ஆனால் தவிர்க்க முடியாத விடயமாகும்.



# விலங்கு சுமக்கும்....

நாம் இதைப்பற்றிப் பேசுவதே பண்பாட்டு விரோதம் என்று கூறுமளவுக்கு இப்பிரச்சினையின் பெண்ணடிமைத்தன மூலம் எங்கள் எல்லோர் மனதிலும் உறைந்து போய்க்கிடக்கிறது.

இந்தவிதவைப் பெண்களுக்கும் உடல் உள்ளம் சார்ந்த பாலியல் உந்துதல் இருக்கும் என்பதை எவரும் கண்டு கொள்வதில்லை. இப்பெண்கள் கூட சமூகத்தில்தம்மைக்கெட்டவர்களாகக் காட்டி விடுவார்கள் என்ற காரணத்தால் தங்களுக்கு அப்படி உணர்வுகள் இல்லை என்பது போலவே வெளிக்காட்டி வருகின்றனர். இதுதான் தங்கள் தலைவிதி என எண்ணி அத்தகைய உணர்வுகளை வலிந்து அடக்கி வருகின்றனர். ஆனால் இந்த நிலைமை, சமூகம் இவர்களுக்கு இழைக்கும் மிகப் பெரும் கொடுமை என்பதை நாம் உணர வேண்டும்.

பசி, தாகம் போன்றே பாலியல் தேவைகளும் இயற்கையானவை என்பதை நியாயமான மனிதர்கள் எவரும் மறுக்க மாட்டார்கள். மனமும் உடலும் எதிர்ப்பாலாரின் உறவுக்காக ஏங்கும் என்பது தவிர்க்க முடியாதது. ஒரு உளப்பூர்வமான மென்மையான அரவணைப்புக் கூட எவ்வளவோ துன்ப துயரங்களைக் கழுவி விடும் வலிமை வாய்ந்தது என்பதை நாமறிவோம். இயல்பான பாலியல் உணர்வுகள் அடக்கப்படும் போது ஒரு பெண் பெரும் மன அழுத்தங்களுக்கு உட்படுகிறாள். இதன் காரணமாக அவளையறியாமலே ஒரு நிம்மதியற்ற, சீறிச்சினக்கும் ஒரு மன நிலையை அடைகிறாள். இதுவே பலவிதமான உடல் நோய்களுக்கும் மூலகாரணமாக அமைத்து விடுகிறது.

அண்ணல் முகமது நபியோ மகாத்மா காந்தியோ இப்பிரச்சனையைப் புரிந்து கொண்ட அளவுகூட எம்மவர்கள் இப்பிரச்சினையைப் புரிந்து கொள்ளவில்லை என்பது தான் மிகப்பெரும் சோகமாகும்.

விதவைகளின் விமோசனம் என்பது பற்றிப் பேசும் போது இதைத்தவிர்த்து விட்டுப் பேசுவதில் அர்த்தம் இருக்க முடியாது. அதற்காக அவர்கள் கட்டற்ற பாலியல் நடவடிக்கைகளில் ஈடுபடலாம் என்பது அர்த்தமாகி விட முடியாது. ஆனால் அவர்கள் மீண்டும் குடும்பம் என்ற எல்லைக்குள் கொண்டு வரப்பட்டு அவர்களின் தேவைகள் நிறைவு செய்யப்பட வேண்டும் என்பதே இங்கு வலியுறுத்தப் படவேண்டிய அம்சமாகும். இன்று துரதிஷ்ட வசமாக விதவைகளாகிவிட்ட இப்பெண்களின் பொருளாதாரத் தேவைகள், சமூகத்தின் சந்தேகப் பார்வையிலிருந்து விடுபடல், பாலியல் தேவைகளை நிறைவு செய்தல், ஏனைய பெண்களுக்குரிய அதே மதிப்பு வழங்கப் படல் போன்றவற்றின் மூலமே இவர்களின் விமோசனத்துக்கு வழிதிறக்க முடியும்.

இப்படியான விமோசனம் நோக்கிய முயற்சிகளில் இவர்கள் தனித்து சுயமாக இயங்கும் ஆபத்துக்களை எதிர் நோக்கலாம்; ஏமாற்றப்படலாம்; மேலும் சிக்கல்களுக்குள்ளும் தள்ளப்படலாம்.

எனினும் அண்மையில் கிளிநொச்சியில் விதவைகள் அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டமை நல்ல ஆரம்பமாகவே தோன்றுகிறது. ஆனால் அது கோழி வளர்ப்பு தையல் பயிற்சி என்பவற்றுடன் தனது பணியை முடித்து விடக்கூடாது. ஒவ்வொரு விதவைப் பெண்ணின் தேவைகளையும் புரிந்து அவற்றை நிறைவு செய்வதில் அந்த அமைப்பு ஒரு தலைமைப் பாத்திரம் வகிக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.


அதேவேளை எமது சமூகம் தனக்குள்ள பொறுப்பையும் கடமையும் மறந்து விடக்கூடாது. இந்த விதவைகள் சாதாரண பெண்கள் அல்ல. எமது மக்களின் விடுதலைக்காக தங்கள் கணவர்களை விலை கொடுத்தவர்கள். எனவே அவர்கள் கௌரவிக்கப்பட வேண்டியவர்கள்; அவர்கள் துன்பதுயரங்கள் நீங்க நாம் ஒவ்வொரு வரும் கரம் கொடுக்க வேண்டும். ★


'சுடர் ஒளி'யின் வாசகர்களே!

100,000 ரூபா
வரை பணப்பரிசை வெல்ல
ஓர் அரிய வாய்ப்பு

'சுடர் ஒளி' நாளிதழ் நடத்தும் 'உலகக் கிண்ணக் கிரிக்கெட் பரிசுப் போட்டி - 2011'
சரியான எதிர்வு கூறல்களுக்கு மகத்தான பரிசுகள்.
பரிசுகளை வெல்ல 'சுடர் ஒளி' நாளிதழ் விளையாட்டுச் சுடரைப் படியுங்கள்


## ஏரிக்குள் எட்டாவது உலக அதிசயம்!



உலகின் 7 அதிசயங்களான இந்தியாவின் தாஜ்மகால், சீனாவின் பெருஞ்சுவர் உள்ளிட்டவைகள் சமீபத்தில் அறிவிக்கப்பட்டன. இந்த நிலையில் தற்போது 8-வது உலக அதிசயமாக நியூசிலாந்தில் உள்ள ரோடோ மகானா ஏரிக்குள் மூழ்கி கிடக்கும் மொட்டை மாடிக் கட்டிடங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

இந்த மொட்டை மாடி கட்டிடங்கள் ஏரியின் 60 மீட்டர் ஆழத்தில் இருப்பது தெரிய வந்துள்ளது. இவை 19-ம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. எரிமலைகளின் சீற்றத்தால் கடந்த 125 ஆண்டுகளுக்கு முன்பு ஏரிக்குள் மூழ்கியிருக்கலாம் என கிவி மற்றும் அமெரிக்கா விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

தண்ணீருக்குள் மூழ்கி கிடக்கும் மொட்டை மாடிகள், இளஞ்சிவப்பு மற்றும் வெள்ளை நிறத்தில் ராட்சத திருமண கேக் வடிவத்தில் உள்ளன. அவை கடந்த 1886-ம் ஆண்டு ஏரிக்குள் மூழ்கியிருக்கலாம் என கூறப்படுகிறது. இந்த ஏரி நியூசிலாந்தின் ஜியோதெர்மல் பகுதியில் உள்ள வடக்கு தீவில் அமைந்துள்ளது. இதை தண்ணீருக்குள் மூழ்கி பார்க்க அதி நவீன ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதன் மூலம் தங்கள் நாட்டின் சுற்றுலா வளர்ச்சி அதிகரிக்கும் என நியூசிலாந்து அரசு தெரிவித்துள்ளது.


# இலங்கை பொலிஸ்
## பொலிஸ் சேவைக்கு ஆட்சேர்ப்பு

கீழ்வரும் பதவிகளுக்கான திருமணமாகாத இலங்கைப் பிரஜைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

| பதவிகள் | அடிப்படைத் தகைமைகள் |
|---|---|
| உப பொலிஸ் பரிசோதகர் | வயதெல்லை 18 - 28 வயதிற்குள். உயரம் 05 அடி - 06 அங்குலம் / மார்பு 32 அங்குலம். கல்வி - க.பொ.த. (சா.த.) பரீட்சையில் கணிதம் தாய்மொழி உட்பட 04 பாடங்கில் திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் ஒரே தடவைகளில் சித்தியடைந்திருந்தல் வேண்டும். மற்றும் க.பொ.த. (உ.தர) பரீட்சையில் ஒரே தடவையில் 03 பாடங்களில் சித்தியடைந்திருக்கவும் வேண்டும். |
| பெண் உப பொலிஸ் பரிசோதகர் | வயதெல்லை 18 - 28 வயதிற்குள், உயரம் 05 அடி - 04 அங்குலம். கல்வி - க.பொ.த. (சா.த.) பரீட்சையில் கணிதம், தாய்மொழி உட்பட 04 பாடங்கில் திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் ஒரே தடவைகளில் சித்தியடைந்திருந்தல் வேண்டும். மற்றும் க.பொ.த. (உ.தர) பரீட்சையில் ஒரே தடவையில் 03 பாடங்களில் சித்தியடைந்திருக்கவும் வேண்டும். |
| பொலிஸ் கொஸ்தாபல் | வயதெல்லை 18 - 28 வயதிற்குள், உயரம் 05 அடி - 04 அங்குலம். மார்பு - 30 அங்குலம். கல்வி - க.பொ.த. (சா.த.) பரீட்சையில் கணிதம் தாய்மொழி உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாமல் குறைந்தது 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இரு தடவையில் சித்தியடைந்தவர்கள் முதல் தடவையில் 05 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| பெண் பொலிஸ் கொஸ்தாபல் | வயதெல்லை 18 - 28 வயதிற்குள், உயரம் 05 அடி - 02 அங்குலம். கல்வி - க.பொ.த. (சா.த.) பரீட்சையில் கணிதம் தாய்மொழி உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாமல் குறைந்தது 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இரு தடவையில் சித்தியடைந்தவர்கள் முதல் தடவையில் 05 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| பொலிஸ் கொஸ்தாபல் சாரதி | வயதெல்லை 18 - 28 வயதிற்குள், உயரம் 05 அடி - 03 அங்குலம் / மார்பு 30 அங்குலம். கல்வி - க.பொ.த. (சா.த.) பரீட்சையில் கணிதம் தாய்மொழி உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாமல் குறைந்தது 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இரு தடவையில் சித்தியடைந்தவர்கள் முதல் தடவையில் 05 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். வாகனம் ஓட்டும் திறமை இருப்பதற்கான சாரதி அனுமதிப்பத்திரம் பெற்ற பின்னர் ஆகக் குறைந்தது 01 வருடத்திற்கு மோட்டார் வாகனம் செலுத்திய அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். |

**மேலதிக தகவல்களுக்கு 24.12.2010ஆம் திகதிய அரச வர்த்தமானி இலக்கம் 1686ஐ பார்க்கவும்**

மேல் குறிப்பிட்ட பதவிகளுக்கான ஆரம்ப, உடற்தகுதிகாண் மற்றும் எழுத்துப் பரீட்சைகள் யாவும் அறிவித்த திகதிகளில் கீழ் குறிப்பிட்ட இடங்களில் நடைபெறும்.
யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, அநுராதபுரம், கண்டி, குருணாகல், பதுளை, மாத்தறை மற்றும் கொழும்பு.

**விண்ணப்பங்கள்**
**அனுப்பவேண்டிய முகவரி :**
**பணிப்பாளர்,**
**பொலிஸ் ஆட்சேர்ப்புக் காரியாலயம்,**
**இல. 375 ஹெவலக் றோட், கொழும்பு - 06.**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 25.02.2011. மேலதிக விபரங்களுக்கு :
01-1-2552736, 011-2552861, 011-2585524, 011-2552953 இணையத்தளம் www.police.lk

பொலிஸ் மா அதிபர்

**விறுவிறுப்பூட்டும் மர்மத்தொடர் - 1**

# வெள்ளை ரோஜா முள்

மு.சிவநேசன்

கொடுக்கிற தெய்வம் கூரையைப்பிய்த்துக் கொண்டு கொடுக்கும் என்பார்களே, அது உண்மைதான். நடந்தவற்றை நம்பவே முடியாமல் ஆச்சரியத்துடன் கையில் குவிந்திருந்த, நிலத்திலும் ஏணிப்படிகளிலும் சிதறிப் பரவி இருந்த வைரங்களைக் கண்கொட்டாமற் பார்த்துக் கொண்டிருந்தான் மைக்.

அத்தனையும் மின்னிடும் அசல் வைரக் கற்கள். பற்பல அளவுகளில் பல நூற்றுக் கணக்கான எண்ணிக்கையில் இருந்தன. சுமார் ஆயிரம் கற்கள் வரையில் கூட இருக்கலாம்.

மைக்கிற்கு வைரங்களைப் பற்றிய விசாலமான அறிவு இருக்கவில்லை. எனினும் இவற்றின் பெறுமதி பல மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆக இருக்கும் என்பதை மட்டும் நிச்சயமாக நம்பினான்.

நேரம் நள்ளிரவு 12.00 மணியை எட்டிக்கொண்டிருந்தது. மெல்ல மெல்ல ஏணிப்படிகளில் அவதானமாக இறங்கி வந்து கைகளிலும் தோற்பையிலும் குவிந்திருந்த வைரங்களை மேசைமீது அவதானமாக வைத்தான்.

நிலத்தில் சிதறிப் பரவி இருந்த சில கற்களை எடுத்து உள்ளங்கையில் வைத்து ஆராய்ந்தான். மின்ஒளியில் கண்ணைப் பறிக்கும் அவை அசல் வைரங்களே! வாழ்க்கையில் இப்படித் தொகையாக இவற்றை அவன் கண்டதும் இல்லை; கிடைக்கும் என எதிர்பார்த்ததும் இல்லை.

நண்பன் றொப் ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பான். அவனுக்கு இதைப் பற்றி மூச்சும் விடக்கூடாது. முழுவதையும் தானே சுருட்டிக்கொண்டாக வேண்டும். உழைப்பதில் ஆளுக்குச்சரி பாதி என்ற விதி இவ்விடயத்தில் விலகட்டும் என்றெல்லாம் நினைத்தான் மைக்.

எப்படி விவகாரத்தை றொப்பிற்குத் தெரியாமல் கொண்டு செலுத்தலாம் எனச் சிந்தித்தவாறே ஒன்றும் விடாமல் சிந்திச் சிதறிய வைரங்களை ஒவ்வொன்றாகப் பொறுக்கிக் கொண்டிருந்தான் மைக்.

ஏதோ அரவம் கேட்டு நிமிந்து பார்த்த போது வாசலில் ஆடாமல் அசையாமல் நின்று கொண்டிருந்தான் றொப்.

அவர்கள் இருவரும் இரண்டு நாட்களுக்கு முன்புதான் இந்தப் பெரிய பங்களாவில் குடிவந்து இருந்தார்கள். அமெரிக்காவில் சற்று நாட்டுப்புற மான பகுதியில் சகல வசதிகளுடனும் கூடிய நவீன பங்களா அது.

ஆயுள் காலத்துக்கும் உழைத் தாயிற்று என்ற திருப்தியுடன் தமது பழைய தொழில்களைக் கைவிட்டு அமைதியானதொரு வாழ்க்கையை வாழ எண்ணி இங்கு குடிவந்தவர்கள் அவர்கள்.

இவ்வளவு காலமும் செய்த அட்டூழியங்களும் நாடகங்களும் அம்பலத்துக்கு வரு முன்பே சாதுரியமாகத் தப்பிச் சாதாரண மனிதர்களை போல இங்கு குடிவந்து விட்டதில் இரு நண்பர்களுக்குமே அலாதித் திருப்தி.

இனி உழைத்ததைப் பங்கு போட வேண்டும். அவை சில தலைமுறைகளுக்குப் போதும். அடுத்தவருக்குச் சந்தேகம் ஏற்படாத வகையில் எப்படி யும் எடுப்பாக வாழலாம். இனி ஒரு குடும்ப வாழ்க்கையை ஒவ்வொரு வரும் அமைத்துக் கொண்டு பிரிந்து போகலாம் என்ற இணக்கம் ஏற்பட்டு விட்டது.

இருவருக்குமே வயது இருபத்தெட்டுத்தான். இந்த வயதில் தமது சொந் தத் திறமையையே மூலதனமாகக் கொண்டு இவர்கள் உழைத்துக் குவித்திருக்கும் பணத்தை இனித் தான் கணக்குப்பார்க்கப் போகிறார்கள்.

பத்திரிகையில் வந்த விளம்பரத்தைப் பார்த்த பின்பு இந்த பங்களாவை வந்து பார்த்தபோது அவர்களுக்குத் திருப்தியாக இருந்தது. அமைதியான சூழல். நிம்மதியாக அங்கே பொழுதைப் போக்கலாம். இயற்கை எழில் கொஞ்சும் அந்தச் சூழலில் கால்நடை களோடும் பயிர்களோடும் உறவாடி அதில் வரும் வருமானத்தில் சீவிப் பது போன்ற பிரமையினை உண்டாக்கி விடலாம்.

இப்படித் திட்டமிட்டு வந்தவர்களுக்கு இங்கே புதையல் சந்திக்கும் என்ற எதிபார்ப்புக் கிட்டவில்லை. இனியும் என்னவெல்லாம் சந்திக்குமோ?

★

வாசலில் நின்றுகொண்டிருந்த றொப்பின் விழிகள் ஆச்சரியத்துடன் மைக் செய்வதைப் பார்த்துக் கொண்டிருந்தன. அவனுக்கு ஏதும் விளங்கவில்லை. சுவரிலே சாத்திய ஏணி. அருகே றூபியின் பெரிய பிறேம் போடப்பட்ட படம். அதில் றூபி தனக்கே உரித்தான புன்னகையை உதித்த வண்ணம் இருந் தாள். ஏணியின் உச்சியில் ஒரு சுத்தியலும் இரண்டு ஆணிகளும்.

ஏணி சாத்திய இடத்துக்கு மேலாக சுவரில் ஓர் உடைவு. உடைவின் ஊடே தென்படும் 'போறை' போன் ற துவாரம். ஒரு மேசை மணிக்கூட்டை வைக்கத்தக்க அளவான இடம் அங்கே தெரிந்தது.

தரையெங்கும் சிதறியிருக்கும் உடைந்த கொங்ரீட் பூச்சும் தூள்களும் அவற் றுடன் சிதறுண்டு உருண்டு கிடந்து மின்னிடும் வைரங்கள்.

இந்தச் சாமத்தில் தான் உறங்கும் வேளை மைக் செய்வது என்ன என்பது றொப்பிற்கு விளங்கவில்லை. அவன் மனதில் சந்தேகங்கள் வலுத் தன.

எப்போதோ எங்கோ தனக்குத் தெரியாமல், கொள்ளையடிக்கப் போன இடத்தில் மைக் இவ் வைரங் களைச் சுருட்டி வந்து இந்த வீட்டில் ஒளித்து வைத்திருக்க வேண்டும். அல்லது இங்கே இவை இருப்பதைத் தெரிந்துகொண்டுதான் இந்த வீட்டுக்கு குடிவந்திருக்க வேண்டும்.

தான் அதிகம் இந்தப் பங்களாவை விரும்பாத போதும் மைக்கின் பிடிவாதம் காரணமாக இங்கு வந்தது புரிய ஆரம்பித்தது அவனுக்கு. கடந்த பத்து வருடங்களாகத் தொழிலில் இணைந்திருந்த இருவருக்கும் இடையே ஒரு சிறு கருத்து வேறுபாடு கூட வந்திருக்கவில்லை. ஒரு சந்தேகப் பொறிகூடக் கிளம்பவில்லை. இது தான் முதற்கோணல். இனி உழைத்ததைப் பங்கு போடும் காலம் அல்ல வா?

உடைவு ஏற்பட்ட இடத்தை உற்று நோக்கினான் றொப். இது அடைக்கப்பட்ட பலநூறு ஆண்டுகள் கூட இருக்கலாம். தோற்பையின் தன்மையும் அதை உறுதி செய்வது போல் இருந்தது. அப்படியானால் றூபியின் படத்தைத் தொங்கவிட முயன்ற மைக்கிற்கு புதையல் கிடைத்து இருக்கிறதா? அல்லது அவன் வைரத்தை எடுத்து விட்டுத் துவாரத்தை மறைக்கப்படத்தைப் பயன் படுத்த இருந்தானா? தமக்குள் ளேயே துப்பறிய வேண்டிய தேவை முதன் முதலில் ஏற்பட்டு விட்டதே!

உழைப்பதில் ஆளுக்குச் சரிபாதி என்ற ஒப்பந்தம் இன்னும் ரத்தாக வில்லை. உறக்கம் வர மறுத்தால் எழுந்து ஏதாவது செய்யலாம் என நினைத்த மைக் தனதும் றொப்பினதும் நீண்டநாள் பங்கு காதலியான றூபியின் படத்தை இங்கு தொங்க விட நினைந்ததே உண்மை. விடிந்ததும் எழுந்து பார்க்கும் றொப்பிற்கும் அது ஓர் அதிர்ச்சியாக இருக்கட்டும் என்றே அவன் நினைத்தான்.

ஆனால் நடந்தது என்ன?

அவன் ஏணி மீது ஏறி ஆணியை சுவரில் ஒரு பொருத்தமான இடத்தில் வைத்து சுத்தியலால் சற்றுத்தட்டியது தான் தாமதம் பொல பொல வெனக் கொங்கிரீட் பூச்சுக் கொட்டுப்படவும் உள்ளே ஒரு துவாரம் தென்படவும் சரியாக இருந்தது. அது ஒரு இரகசிய காப்பிடம் என்பதை உட னேயே அவன் புரிந்துகொண்டான்.

உள்ளே கையைவிட்டு அள்ளியபோது உக்கிய தோற்பையில் இருந்து சிந்திய வைரங்கள் அவனை அசத்திவிட்டன. இப்போது றொப் வந்துவிட்டதால் எண்ணத்தில் மண். இதிலும் பாதிதானா என்ற ஏக்கம். இப்படி ஒரே ஒரு கல் மட்டும் கிடைக்காதா என அவனவன் ஏங்கும் ஏக்கம் மற்றவர்களுக்கு எங்கே புரியப் போகிறது?

★ ★ ★

மைக், றொப் இருவரும் பள்ளிக் கால நண்பர்கள். இருவரும் இணை பிரியாமலே இருப்பர். இரட்டையர் கள் போல வேறுபாடு களும் குறைவு. எண்ணம், சிந்தனை, செயல் இலக்குகள் எல்லாம் இருவருக்கும் எப்போ தும் ஒன்றாகவே இருக்கும்.

படிப்பில் அதிகம் சுட்டித்தனம் இல்லாவிட்டால் விளையாட்டு, கலை நிகழ்ச்சிகள் போன்றவற்றில் இருவரும் அசத்தி விடுவார்கள். இருவருக்கும் இடையில் முதலாம் பரிசுக்குரியவரைத் தேந்தெடுப்பதில் மிகவும் சிரமப்படும் நடுவர்கள் ஈற்றில் இருவருக்குமே பரிசு கொடுத்த வரலாறுகள் தான் அதிகம்.

சாகச விளையாட்டுக்களில் இருவரும் வல்லவர்களாக இருந்தனர். பதினெட்டு வயதில் படிப்புக்கு முற்றுப் புள்ளி வைத்த இருவருக்கும் ஒரு பிரபல 'சேர்க்கஸ்' நிறுவனம் கைகொடுத் தது.

இவர்களின் சாகாச விளையாட்டுக்கள் அமெரிக்கா முழுவதும் மட்டு மன்றி இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகளிலும் கூட பிரபல்யம் பெறத் தொடங்கின. இறுதியில் பார்வையாளர்கள் மேடையில் காசைவாரி இறைக்கும் அளவுக்கு காட்சிகள் உச்சம் பெறும் இதனால் இவர்கள் உழைத்துக் குவித்த பணத்துக்கு அளவோ கணக்கோ கிடையாது. ஆயுள் முழுவதும் எடுப்பாக வாழப் போதிய அளவு உழைத்துவிடல் வேண்டும் என்பது இருவரினதும் இலட்சியம்.

இவர்களின் 'சேர்க்கஸ்' குழுவில் வேறு எவராலும் தாக்குப்பிடிக்க இயல வில்லை. அத்தனை அபார சக்தியும், வேகமும், பயங்கரமும்.

அப்போது இவர்களுக்கு ஏற்றாற்போல் வந்து வாய்த்தவள் தான் றூபி.

அவளின் பொறுமையும், துணிச்சலும், மனோதிடமும், தாக்குப்பிடிக்கும் உடல் அழகும் இவர்களை மிகவும் கவர்ந்து விட்டன. சாகசவிளையாட்டுக்களில் அவளைப் படாதபாடு படுத்திவிடும் இருவரும் மற்றவேளைகளிலும் கூட விட்டு வைப்பதில்லை.

மைக்கினதும் றொப்பினதும் உடல் வேகங்களுக்கும் கூட தாக்குப் பிடித்து நின்று பிடிக்கும் வல்லமை அவளி டம் இருந்தது.

சுமார் 40 அடி தூரத்தில் இருந்து துல்லியமான ஒரு இலக்கை நோக்கிக் கூரிய கத்தி வீசும் இவ்விருவரது விளையாட்டே பலரையும் கவரும் காரணங்களில் முதலாவதாக இருந்தது.

மேடையில் தோன்றும் மைக்கையும் றொப்பையும் வேறுபாடு காணமுடியாமல் பார்வையாளர்கள் திண்டாடக்கூடும். விளையாட்டுப் பயிற்சிகளில் ஈடுபட்டு விளைந்த கட்டுமஸ்தான உடல். ஆறு அடியை எட்ட ஒரு அங்குலம் மட்டுமே தேவைப்படும் உயரம். மடிப்புக் குலையாதகசங்கிப்பிசகாத கோட், சூட்,ரையுடன் தோன்றும் காட்சிகள் கம்பீரத்தை மேலும் கூட்டும் பூட்ஸ். தொப்ப , கையுறைகள் , கண்களை மறைக்கும் கறுப்புக் கண்ணாடி.


அவர்களின் எதிரில் கறுப்புநிற அரை குறை ஆடைகளுடன் தோன்றும் வெள்ளை ராணி றூபி. இவர்களின் எண்ணம் போல இசைக்கும் இசை வெள்ளத்தோடு இணைந்து சுழன்று ஆடும் அவள் தேகம். அள்ளுகொள்ளையாகக் குவிந்திருக் கும் ரசிகர்களைக் கொள்ளை கொள் ளும் அவள் உடல் வனப்பு பாதி தெரிந் தும் பாதி தெரியாமலும் படுத்தும்பாடு அவளை வாய்பிளந்து ரசிக்கும் கூட்டத்துக்குச் 'சேர்க்கஸ்' காட்டுவது ஒன்றும் கடினம் இல்லையே!

இறுதியில் மயிர்க்கூச்செறியும் நிகழ்வாக இடம்பெறும் நிகழ்வு இதுதான்.

மேடையின் ஒரு மூலையில் மென் மரப்பலகை ஒன்று நிலைக்குத்தாக இருக்கும். சுமார் ஏழு அடி உயரமும் மூன்று அடி அகலமும் உடைய கதவு போன்ற பலகை அது. அதன் முன்னே ஒட்டிச் சாய்ந்தது போல றூபி நிற்பாள். அவள் அபிநயம் பிடித்து நிற்பதைப் பார்த்தால் ஏதோ சிதம்பர நடனம் போல இருக்கும். தினம் ஒரு போஸ்.

மறுமுனையில் மேசைமீது கத்திகள் குவிக்கப்பட்டிருக்கும். அவை இருளி லும் பளபளக்கும். அவற்றின் கூர் முனைகளைப் பார்த்தாலே கண்களைக் குற்றிவிடும் போலிருக்கும். மேசைக்கு இருமருங்கும் றொப்பும் மைக்கும் நிற்பார்கள்.

(இனியும் முள்ளுக் குத்தும்)



# கழுத்து நோ குறித்து அசட்டை காட்டாதீர்



**கேள்வி:** வயது 29. பெண். கடந்த சில மாதங்களாகக் கழுத்தின் பின் பகுதியில் - பிடரியில் வலியாகவும், விறைப்பாகவும் இருக்கிறது. இது குறித்து ஆலோசனை தெரிவிப்பீர்களா?

**பதில்:** கழுத்து நோ எம்மில் பெரும்பாலானோருக்கு ஏற்படுகின்ற பொதுவான பிரச்சினையாக உள்ளது. இது பலவகையான காரணிகளாலும் கழுத்தில் அமைந்துள்ள இழையங்களில் ஏற்படும் அனேக நோய்களாலும் ஏற்படக்கூடியது. உதாரணமாக முதுகுத்தண்டு அல்லது முள்ளென்பின் இடைத்தட்டுகளின் தேய்வினால் (Degenerative Disc Disease) கழுத்து அளவுக்கதிகமாக அழுத்தத்திற்கு ஆளாகும்போது (Neck Strain), விபத்துகளின்போது ஏற்படும் கழுத்துக் காயங்களின்போது (Whiplash), முள்ளந்தண்டு இடைத்தட்டு வெளித்தள்ளல் (Herniated Disc), அல்லது அழுத்தப்பட்ட நரம்பு (Pincagn Nerve), போன்ற காரணிகளால் கழுத்து நோ ஏற்படக்கூடும்.

கழுத்து நோவானது பொதுவாக வீரியம் குறைந்த குத்துகின்ற அல்லது உழைகின்ற நோவாகவே காணப்படும். சிலவேளைகளில் இந் நோவானது கழுத்தின் அசைவுகளுக்கேற்ப கூடிக் குறையக்கூடும். இவற்றைவிட அனேகமாக விறைப்பு, தொடும்போது நோ, திடீரென சுள்ளென்ற வலி, தலை நிறைந்த உணர்வு, விழுங்குவதில் சிரமம், தலையிடி, தலைச்சுற்று கழுத்துச் சுரப்பிகளில் வீக்கம் என்பவற்றோடு நோவானது கைகளுக்குப் பரவுவதுடன் சில வேளைகளில் கைவிரல்களில் விறைப்புக் கூடக் காணப்படும். மேற்படி குணங்குறிகளை விளங்கிக் கொள்ள முதலில் கழுத்தின் அமைப்புக் குறித்துப் பார்ப்போம்.

கழுத்தின் பிரதான பாகம் முள்ளந்தண்டு எழும்பின் ஏழு தனித்தனி எலும்புகளால் ஆனது. (Cervical Vertebrae) முன்னாண் மற்றும் கால்வாய் இவ் வென்புகளால் சூழப்பட்டிருக்கும் இந்தத் தனித்தனி எலும்புகளுக்கிடையில் தட்டுகள் உண்டு. (Inter vertebral Discs) தட்டுக்களின் அமைவிடத்திற்கு அணித்தாக முன்னாண் நரம்புகள் அமைந்துள்ளன. மேலும் கழுத்தில் கழுத்துத் தசைகள், இரத்தக் குழாய்கள், நிணநீர் முடிச்சுகள், (Lymph glands) தைரொயிட் சுரப்பி, பராதைரொயிட் சுரப்பி, இரைப்பை குழாய், மூச்சுக்குழல் மற்றும் வாதனாளி என்பனவும் அமைந்துள்ளன. இந்த அமைப்புகளில் ஏதாவது ஒன்று தாக்கப்படும்போது அல்லது நோயுறும்போதுதான் கழுத்து நோ ஏற்படுகின்றது.

எனவே கழுத்து நோவானது எந்தக் காரணியால் ஏற்படுகிறது எனக் கண்டறிவதற்கு முதலில் சரியான தெளிவான நோய்ச் சரிதம் பெறப்படவேண்டும். நோய்ச் சரிதத்தை ஆராய்வதன் மூலம் நோ ஏற்படுகின்ற சரியான இடம் (Location), அளவு (Intersity), அலை அளவு (Duration) மற்றும் எங்காவது பரவுகின்றதா (Radiation) போன்ற விவரங்கள் தீர்மானிக்கப்படும். முந்தைய பழைய காயங்கள் ஏற்பட்டதா என்பது பற்றியும் குறித்துக் கொள்ளப்படும். நோவை அதிகப்படுத்தும் அல்லது குறைக்கும் அசைவுகள், நிலைகள் என்பன பற்றியும் முக்கிய கவனமெடுக்கப்படும். கழுத்து ஓய்வான நிலையிலும், அசைகின்ற நிலையிலும் கவனமாகச் சோதிக்கப்படும். ஏதாவது இடத்தில் தொடும்போது வலி ஏற்பட்டால் (Tenderness) கூடுதலான தகவலாகக் கொள்ளப்படும். மேலும் நரம்புகள் சம்பந்தப்பட்டு உள்ளனவா என அறிய நரம்புப் பரிசோதனையும் மேற்கொள்ளப்படும்.

இவை எல்லாவற்றுக்கும் மேலதிகமாக எக்ஸ் கதிர் பட மதிப்பீடு, CAT ஸ்கான், எலும்பு ஸ்கான், MRI ஸ்கான் மற்றும் Myelogram போன்ற சோதனைகளும் தேவைக்கேற்ப செய்யப்படும். இவை தவிர Electromyography (EMG) மற்றும் Nerve Conduction Velocity Test (NCV) என்பனவும் தேவைப்படலாம்.

பொதுவாகக் கழுத்து நோவுக்கான சிகிச்சை, அது என்ன காரணத்தினால் ஏற்படுகின்றது என்பதைப் பொறுத்தே தீர்மானிக்கப்படுகிறது. இது சாதாரண பூரண ஓய்வு, ஒத்தடம் கொடுத்தல், Soft Collar, Traction முதலியவற்றில் இருந்து நோ ஏற்பட்ட இடத்தில் ஸ்ரீரொயிட் ஊசிமூல சிகிச்சை மற்றும் நோவைக் குறைக்கும் மருந்துகள் பூசுதல், அழுத்திப் பிடித்துவிடல், (Massage) வலி நிவாரண மருந்துகள் உட்கொள்ளல் வரை வேறுபடக்கூடியது. சிலவேளைகளில் சத்திர சிகிச்சையும் தேவைப்படலாம்.

எனவே உங்கள் கழுத்தை ஒரு வைத்தியரிடம் காண்பிப்பதே சாலச்சிறந்தது.

இலவச மருத்துவ ஆலோசனைகளை 'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார் டாக்டர் ஜோன் பொன்னையா. நீங்கள் கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரிகள்.

**இலவச மருத்துவ ஆலோசனை**

I.) சுடர்ஒளி, யாழ்.அலுவலகம்,
361,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

II.) சுடர்ஒளி,
85,ஐயந்த மல்லிமாரச்சி மாவத்தை,
கொழும்பு 14.



**கேள்வி:** சலரோக நோயாளருக்குHbAIC என ஒரு சோதனை செய்யப்படுகிறதே அதனால் என்ன பயன்? தயவு செய்து விளக்குவீர்களா?

**பதில்:** எமது குருதியில் கீமோகுளோபின் எனும் பதார்த்தம் உண்டு. குருதியின் செந்நிறத்துக்கு இதுவே காரணமாக அமைகிறது. மேலும் செங்குழியங்களின் பிரதான புரதப் பகுதியும் இதுவே. கீமோகுளோபின் ஆனது (HEMOGLOBIN)(Hb)கீம் (HAEM) எனப்படும் இரும்பு மூலக்கூற்றையும் குளோபிலின் (GLOBULIN)எனப்படும் புரதப்பகுதியையும் கொண்டது. இதுவே ஒட்சிசனை எடுத்துச் செல்லப் பயன்படுகிறது. குருதியில் 90% ஆனவைHEMOGLOBIN A ஆகும். (இங்கு A என்பதுADULT ஆகும்) இந்த HbA வகையில் 92% ஆனவை ஒரே மாதிரியான இரசாயனக் கட்டமைப்பை உடையவை. மீதி 8% ஆனவை சிறிய சிறிய வித்தியாசமான இரசாயனக் கட்டமைப்புடைய கூறுகள் ஆகும். இவற்றுள்HEMOGLOBIN A1c, A1b, A1a1, மற்றும்A1a2 ஆகியன சிலவாகும்.


HEMOGLOBIN A1cஆனது (HbA1c)இவற்றுள் குளுக்கோசுடன் சேர்ந்தமைந்த சிறிய கூறு ஆகும்.

இது கிளைக்கோசிலேரட்(GLYCOSYLATED HEMOGLOBIN) கீமோகுளோபின் எனவும் அழைக்கப்படும் குருதியில் உள்ள குளுக்கோசின்அளவு (உணவு இல்லாமல் (FBS) சாப்பிட்டபின் (PPBS) எதேச் சையாக (RBS) அளக்கப்படுவது போலவே HbA1cன் அளவும் நீரிழிவு நோயாளருக்கான சோதனையாக உள்ளது. HbA1c இன் அளவானது குருதியில் உள்ள குளுக்கோசின் அளவுடன் மாறுபடக்கூடியது. குருதியில் குளுக்கோசின் அளவு கூடும்போது HbA1cயின் அளவும் கூடுமாயினும் நாளுக்கு நாள் அல்லது திடீரென ஏற்படும் மாற்றங்களால் அதன் அளவு பாதிக்கப்படமாட்டாது. ஆனால் கடந்த சுமார் 6 முதல் 8 வாரம் வரை இருந்த குருதி குளுக்கோசின் அளவை பிரதிபலிக்கக்கூடியது. எனவே கடந்த 2-3 மாதங்களுக்கு குருதியில் குளுக்கோசின் அளவு எவ்வாறு இருந்தது என்பதனைக் காட்டும் அளவுகோலாக HbA1C-அளவு விளங்குகிறது. இவ் அளவீட்டை மேற்கொள்வதன் மூலம் நீரிழிவு நோயாளரின் நோயின் தாக்கம் எந்தளவுக்கு கட்டுப்பாட்டில் இருந்தது என்பதை நாம் விளங்கிக் கொள்ளலாம்.

சாதாரணமாக மொத்த கீமோகுளோபினில் 6%HbA1c ஆகக் காணப்படும். இவ்வாறு சுகாதார நிலையில் அல்லது அதற்கு அண்மையாக HbA1c இன் அளவைப் பேணுவது நீரிழிவு நோயாளருக்கு ஏற்படக்கூடிய பக்கவிளைவுகளைத் தாமதப்படுத்தும் அல்லது இல்லாது ஒழிக்கும் என ஆராய்ச்சிகள் நிரூபிக்கின்றன.

முன்னர் குறிப்பிட்டதைப்போல நாளுக்கு நாள் அல்லது உடனடியாக ஏற்படும் மாற்றம் HbA1cயைப் பாதிக்காது என்பதனால் இதற்காக குருதியை எந்த நேரத்திலும் சேகரிக்கலாம். (உணவு உட்கொள்ள முன்போ அன்றேல் பின்போ) எனவே குறித்த நேரத்தில் அல்லது நாளில் குருதியில் உள்ள குளுக்கோசின் அளவைப் பார்ப்பதற்கு இந்த முறை உகந்தது அல்ல. சிறுநீரகக் கோளாறு உள்ளவர்கள் மற்றும் நீண்ட நாள் மதுப் பாவனையாளர்களுக்கு HbA1c போலியாக கூடுதலாக இருப்பதோடு தலசீமியா மற்றும் Sickle cell நோயாளருக்குக் குறைவான அளவைக் காட்டக்கூடியது என்பது கவனத்தில் எடுக்கப்படவேண்டும். ★

# அல்சரைப் போக்கும் பச்சை வாழைப்பழம்



குடல்களில் சுரக்கும் அமிலங்களும் நச்சுப் பொருட்களும் அரிப்பதன் காரணமாக குடல் புண் என்கிற அல்சர் ஏற்படுகிறது. பச்சை வாழைப்பழத்தைத் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் இந்தப் பாதிப்பில் இருந்து விடுபடலாம்.

குடல்களில் பழுதுபட்ட மெல்லிய சவ்வுத் தோல்களை விரைவில் வளரச் செய்து புண்ணை ஆற்றிவிடும் சக்தி பச்சை வாழைப்பழத்திற்கு உண்டு.

வெண்டைக்காய் விதையைக் கொஞ்சம் பார்லி கஞ்சியில் போட்டு காய்ச்சி முன்று நாள் வரை சாப்பிட்டு வந்தால் சிறுநீர் கழிக்கும் போது ஏற்படும் எரிச்சல் இல்லாமல் போகும்.

உணவு உண்பதற்கு 1/2 மணி நேரத் திற்கு முன்னதாக தினசரி அரை டீஸ் பூன் ஆலிவ் எண்ணெய்யைச் சாப்பிட்டு வந்தால், ரத்தக் குழாயில் கொழுப்பு படிவதை தடுக்கலாம். வாய்ப்புண் உள்ளவர்களுக்கு காரம் ஆகாது. முடிந்தவரை காரத்தைக் குறைத்துச் சாப்பிடுங்கள். தேங் காய்த் துண்டுகளைச் சாப்பிட்டு வந்தால் எளிதில் வாய்ப்புண் ஆறும். ஜாதிக்காயைச் சிறு சிறு துண்டுகளாகச் சீவி அதை நெய்விட்டு வறுத்து சாப்பிட்டு வந்தால் சீதபேதி குணமாகும். இதற்கு சிகிச்சை மேற்கொள் ளும் போது தயிர், மோர், இளநீர் ஆகியவற்றை மட்டும் ஏராளமாகச் சேர்த்துக் கொள்வது நல்லது. இரவில் படுக்கப் போகும்முன் வெந்நீரில் சிறிது தேன் கலந்து அந்த நீரில் வாயைக் கொப்பளித்து வந்தால் பற்களுக்குத் தொந்தரவு கொடுக்கும் பாக்டீரியாக்கள் செத்துப் போகும். பற்களின் எனாமல் சிதையாமல் பாதுகாக்கப்படும். ❋

# பல்சுவை

## சடங்கு



ஸ்பெயின் நாட்டில் கார்பஸ் கிருஷ்டி என்பவர் நினைவாகக் கொண்டாடப்படும் இவ்விழாவில் வரிசையாகக் கிடத்தப்பட்டுள்ள குழந்தைகளை பேயாகக் கருதப்படும் நபர் தாண்டும் காட்சி இது. 1620 இல் இருந்து இவ்விழா கொண்டாடப்படுகிறதாம்.

இது நம் ஊர்களில் நடக்கும் தீச்சட்டி, காவடி, தீ மிதிப்பு, தேங்காய் உடைப்பு போன்றவைக்குச் சமமானது ஆகும்.





## இது சுமை அல்ல

இவருடைய கழுத்தில் தலைக்கீழாய்த் தொங்குவது அவருடைய மனைவியேதான். மனைவியைத் தூக்கிக்கொண்டு ஓடுவதுதான் போட்டியே. இந்தக் கூத்து நடப்பது பின்லாந்து நாட்டில்.

## தன்னம்பிக்கை





வாழ்க்கையில் சாதிப்பதற்கு ஊனம் ஒருதடையல்ல என்பதனை நிரூபிக்கும் பல விதமான மனிதர்களை பற்றி நாம் கேள்விப்பட்டுள்ளோம். படத்தில் காணப்படும் கோடி என்ற அமெரிக்கச் சிறுவன் பிறப்பிலேயே இரண்டு கால்களும் ஊனம் உற்றவன். இதுவரை பல விளையாட்டுக்களில் பங்கேற்று பதக்கங்களை வென்றுள்ளான் கோடி. இவனது வெற்றிகளுக்கான இன்னுமோர் முக்கிய காரணம் இவனது பெற்றோராகும். அவர்களது ஊக்குவிப்பே அவன் இத்தகைய ஓர் தன்னம்பிக்கை மிக்க ஒருவனாக மாற வழிவகுத்துள்ளது. கோடியின் தற்போதைய இலக்கு உலக ஊனமுற்றோருக்கான ஒலிம்பிக் போட்டிகளில் ஓர் தங்கப்பதக்கத்தை வெல்வதே ஆகும்.

## விண்வெளியில் செக்ஸ்



விண்ணில் செக்ஸ் சாத்தியமா? விண்வெளி பயணத்தின்போதே செக்ஸ் தொடங்கி குழந்தையை அங்கேயே பெற்றெடுக்க வாய்ப்புள்ளதா? நாசா இது பற்றிய ஆய்வில் ஈடுபட்டுள்ளது.

இது தொடர்பான கட்டுரை அவர்களது சஞ்சிகையில் வெளிவந்துள்ளது. அதில் மனிதர்களுக்கு செக்ஸ் உணர்வு இயல்பானது. பூமியில் அதற்குச் சாதகமான சூழ்நிலையும் நிலவுகிறது. மேலும் இதற்கு முக்கியத்துவம் தருவது தனி நபர் சம்பந்தப்பட்ட விஷயம். பூமியில் செக்ஸில் அதிக ஆர்வம் காட்டுபவர்கள் விண்வெளிக்குச் சென்றதும் இந்த ஆர்வம் குறையக் கூடும் என்று தெரிகிறது. இதேபோல கருத்தரிப்பதும்கூட விண்வெளியில் குறைந்த அளவே சாத்தியம்.

விண்ணில் நீண்ட பயணம் மேற்கொள்ளும் வீரர்கள் செக்ஸ் உணர்வுகளால் உந்தப்படுவது வாடிக்கை. ஆனால் விண்வெளிப் பயணம் மேற்கொள்ளும் வீரர்களுக்கு அதிக கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு அவர்களுக்கு பொறுப்புணர்ச்சி குறித்த விழிப்புணர்வு, பயணத்துக்கு முன்பு பயிற்சியாக அளிக்கப்படுவதால் அத்தகைய உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தும் மனநிலை அவர்களிடம் இயல்பாகவே இருக்கும். எளிதில் உணர்ச்சிவசப்பட மாட்டார்கள். மேலும், ஆராய்ச்சி என்ற இலக்கை நோக்கியே அவர்களது செயற்பாடுகள் அமையும்.

# கவிதைப்புனல்



## என்னைக் காதலித்து....

ஊர்ச் சண்டையில்
முதலாம் இடமாக
முரடனாக இருந்த என்னை
நல்லவனாகவும்
கோழையாகவும்
ஆக்கிவிட்டாய் நீ
பரவாயில்லை
ஆனால் இப்பொழுது
என்னைப் பைத்தியக்காரனாகவும்
ஆக்கிவிட்டாய்.

உளவாய் செல்வம்.



காதலி
தினமும்
நான் காணும்
சூரியோதயம்

திருமணம்
உன்னையும்
என்னையும்
இணைக்க
உறவுப்
பாலம்

தேனீர்
குளிர்
காலத்து
உற்சாகத்
தோழன்

நட்சத்திரம்
உனது கூந்தலில் இருந்து
சொரிந்த மல்லிகைப்
பூக்கள்

மரணம்
மீண்டும்
உன்னைக் காதல் செய்ய
நான் பெறும்
விருது.

எஸ்.மோகனதாசன்
திருமுருகண்டி.

## நிம்மதி கொள்



*நிலை இல்லாத வாழ்விலே நிலைக்கும் என்ற*
*நினைவிலே, கட்டினாய் நிலை இல்லாத கட்டடத்தை*
*நிர்மூலமாக்கி விட்டது இயற்கை நிமலனின் கட்டளை இது.*
*நிவாரணம் கிடைக்கும் நிம்மதி கொள்.*

ஜோசப் டொர்ங்டன் ஸ்பெக்,
மட்டக்களப்பு.

## கருத்துரிமை காக்க

உண்மைத் தகவல்தரும்
ஊடகங்களை ஒடுக்கும்
அநாகரிகப் பேய்களின் அட்டகாசம்
அடக்கப்பட வேண்டும்

விடைகாணாத விசாரணைகள்
கண்துடைக்கும்,
கண்டு பிடிப்புக்களாய்
கை வீசி நடக்கும் கொடுமை

முறையான அமைப்புக்கள்
மூலகாரணகர்த்தாக்களை
இனங்காணட்டும்
சுதந்திரமான
நீதி விசாரணை முன் உண்மைகளை
உரத்தொலிக்கட்டும்

கருத்துச் சுதந்திரத்தை
நசுக்கும்
நச்சுப் பாம்புகளை
தெருத் தெருவாய் இழுத்து வாருங்கள்
மக்களெல்லாம் இனங் காணட்டும்
தக்க தண்டனை
மக்களே வழங்கட்டும்.

- கவிக்குயிலன்,
சேனையூர் – 08.

## கொடுமைப் பயணம்



**உதிரத்தைக் குடிநீராக்கி**
**சருமத்தை ஊனமாக்கி**
**சிறகுகளைச் சருகாக்கி**
**நடக்கின்றன ஓநாய்க்**
**கூட்டடங்கள்**
**கட்டடங்களை கற்குவியலாக்கி**
**காய்க்கும் மரங்களை விறகாக்கி**
**தரை வெளிகளைக் குன்றும் குழியுமாக்கி**
**பறக்கின்றன இரும்புப் பறவைகள்**
**மனைவியை விதவையாக்கி**
**கணவனை தாபோதரனாக்கி**
**குழந்தையை அநாதையாக்கி**
**எம்மை ஏதிலியாக்கி**
**கிராமத்தை இடுகாடாக்கி**
**இருப்பைக் கேள்விக்குறியாக்கி**
**தாண்டவம் ஆடுகின்றன கொடுமைகள்.**

**ஈழத் தமிழ் நண்பன்**
**சுடர்.**

## தலைவிதியா? சுமையா?

மனதில் ஒரு சுமை
வாழ்வு மறு சுமை
திருமணம் ஒரு மை
சீதனம் மறு சுமை
பிள்ளைகளின் தேவைகள் ஒரு சுமை
அதைப் பெறுவது மறு சுமை
வாழ்க்கை ஒரு சுமை
அதை வெல்வது மறு சுமை
சுமைகளோ ஒரு சுமை
இவை தமிழனின் தலைவிதியா?
இல்லைச் சுமையா?

– சுபா.

# பிள்ளையையும் கிள்ளி...




அன்றைய தினம் அவ்வாரத்தின் இறுதி வெள்ளிக்கிழமை அதனால் ''பூரணச்சந்திரன் போல்'' நகரத்தின் மத்திய பகுதியை மக்கள் கூட்டம் விழுங்கிக் கொண்டிருந்தது. எங்குமே வாகன இரைச்சல்களின் சத்தம். அது இரண்டு காதுகளையும் கிழித்தது. மறுபுறத்தில் கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு பயணிகளைத் தமது பக்கம் இழுக்கும் நடத்துனர்களின் பலகால வித்தைகளை மத்திய நகரம் நிகழ்த்திக் கொண்டிருந்தது.

அவள் பொறுமையாக இன்னும் திறக்கப்படாத கடைவாசலின் முன் அமர்ந்திருந்தாள். பழுப்பேறிய சாறி, அதற்கேற்ற சட்டை, வெயிலில் அதிக நேரம் திரிந்ததால் தலைமயிர் எண்ணெய் தண்ணியின்றி தூசி படிந்து ''பிசுபிசுத்து'' செம்மண் நிறத்தில் இருந்தது. அவளது முகமும் அதே நிறத்தில் சிவந்து உலர்ந்து போயிருந்தது. பூச்சியரித்து எஞ்சிய கறுப்புப் பற்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக பிளந்து கிடந்தன. பத்து வார வெற்றிலைக்காவி அடைத்திருந்தது. காதுகள் இரண்டும் ஒன்றுமில்லாத வெறுமையாய்.... மூக்கில் மட்டும் மூக்குத்தி என்ற பெயரில் ஒரு கறிவேப்பிலைக் குச்சி தொங்கிக் கொண்டிருந்தது. காலில் அணிந்திருந்த செருப்பு ஊசியினால் குத்திச் செப்பனிடப்பட்டிருந்தது.

அவள் மடியில் குழந்தையொன்று. இரண்டு வயது கடந்திருக்கும். அட்டை போல் சுருண்டு மடியில் படுத்திருந்தது. அதன் மூக்கிலிருந்து வழிந்த சளி உதட்டின் மேல் ஒட்டியிருக்க அதை இலையான்கள் சுற்றிவளைப்புச் செய்துகொண்டிருந்தன.

சிந்தனையில் இருந்தவள் திடுக்கிட்டு, மடியில் படுத்திருந்த பிஞ்சைத் தட்டி எழுப்பினாள்.

''சே... சனியன்.... காலங்காத்தால.. தொழிலுக்குப் போற நேரத்தில நித்திரை....எழும்பு''!

அது தன்னை மறந்து நித்திரையில்... ஏதும் கடவுள் கனவில் மிதந்திருக்கும்... அவளோ ஆத்திரத்துடன் தொடையில் விரல்களினால் கிள்ளினாள் ''வீல்''... பெருமூச்சுடன் ... விக்கி விக்கி அழத்தொடங்கியது குழந்தை.

**து.தமிழ்**

ஆ... பிறகென்ன... அவள் முகம் விறுவிறுப்படைய குழந்தையைத் தூக்கிக் கொண்டு சனக் கூட்டத்தில் ஐக்கியமானாள்.... விரைந்து நடந்தாள். மின்சார சமிக்ஞை விளக்குகள் தமது கட்டுப்பாடுகளினால் நெரிசலை துரிதப்படுத்தியன. வாகனங்கள் கொஞ்சம் ஓய்வெடுத்தன.

வாகனங்கள் நிறுத்தப்பட்டபோது அவள் ஓடிப்போய் தனது வேலையைத் தொடங்கினாள்.

நிறுத்தப்பட்ட வாகனங்களின் யன்னல் கண்ணாடியூடாகக் குனிந்து தலையை விட்டு ''ஐயா....! அம்மா....! ஐயா.. பிள்ளையைப் பாருங்கோ... சாப்பாடு இல்ல... பாலில்ல.... இந்தப் பிஞ்சுப் பாலனுக்கு உதவி செய்யுங்கோ...''

அவள் கெஞ்சினாள்... குரலில் இரக்கம் வழிந்தது... கண்ணீர் கண்களை நிரப்பியிருந்தது. முகத்தில் சோகம் ஒட்டியிருந்தது... குழந்தை தலையைத் தூக்கி... அந்தப் புதியவர்களின் முகத்தைப் பார்த்து பின்னர் மேலும் பலமாக வீரிட்டு கத்தியது... அவள் ஒவ்வொரு வாகனமாக கெஞ்சித் திரிந்தாள்... ''இந்தப் பிஞ்சு பசியால் துடிக்குது... எங்களுக்கு ஒரு வருமில்லை... இப்படி நாயாய்... பேயாய் இடம்பெயர்ந்து திரியிறம்..'' மிகவும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தாள். எந்த வாகனமும் அவளது பார்வையிலிருந்து தப்பிப் போகமுடியவில்லை.

தோளில் சிறு தோற்பை தொங்கிக் கொண்டிந்தது... கையில் சேர்த்த சில்லறை கனக்க. தோற்பையினுள் போட்டாள். கிடைத்த ஓரிரு தாள்க் காசுகளை அங்குமிங்கும் பார்த்துவிட்டு... மார்புப் பகுதியினுள் செருகினாள். வெய்யில் சூடேறத் தொடங்கியது.

சன நெரிசலும் வெக்கையும், புழுக்கமும், புகையும் குழந்தைக்குக் கண் எரச்சலைக் கொடுத்தன. அது கண்களைக் கசக்கியது ... அவளும் சற்றுக் களைப்படைந்த நிலையில் தேநீர்க் கடையில் தண்ணீர் வாங்கிக் குடித்து, குழந்தைக்கும் பருக்கி,... பின் வெற்றிலை போட்டு மறுபடி ஓடினாள்.

குழந்தை பரிதாபமாக அவளைப் பார்த்தது. என்ன பார்க்கிறாள்? உனக்கின்னும் வேலையிருக்கு...'' அவள் மறுபடியும் வாகனங்களை முற்றாகத் தேடித் தடவ.... சிலருக்கு அவளது செய்கை எரிச்சலை, கோபத்தை உண்டு பண்ணியது.

சற்று நேரத்தில் குழந்தை அவளது தோளில் தூங்கிப் போய் விட்டிருந்தது. மோட்டார் சைக்கிள் காரனிடம் மன்றடிக்கொண்டிருந்த போது... குழந்தையைக் காட்ட நினைத்து அதைத் தட்டினாள். குழந்தைக்கோ நல்ல அசதி. சரிப்பட்டு வரவில்லை. நின்றிருந்த லொறியின் பின்னால் போய் குழந்தையின் தொடையின் கீழ் விரல்களினால்.. ''வீல்...'' ''நல்லா அழு...'' ''உப்பிடிப் படுத்தியெண்டால்...'' குழந்தை கை கால்களை உதறிப் பலமாக அலறியது.

> **மோட்டார் சைக்கிள்காரனிடம் மன்றாடிக் கொண்டிருந்தபோது குழந்தையைக் காட்டநினைத்து அதைத் தட்டினாள். குழந்தைக்கோ நல்லஅசதி. சரிப்பட்டு வரவில்லை. நின்றிருந்த லொறியின் பின்னால் போய் குழந்தையின் தொடையில் விரல்களினால்... 'வீல்'.. "நல்லா அழு.." உப்பிடி படுத்தாய் என்றால்"**

அவள் அந்தக் கையோடு நகரின் மத்திய பஸ் தரிப்பிடத்திற்கு வந்து.. ஒவ்வொரு பஸ் வண்டியாக ஏறி இறங்கத் தொடங்கினாள். குழந்தை விம்மலுடன் அழுது கொண்டிருந்தது. மூக்கிலிருந்து சளி... ''ஐயா...! எங்கட நிலையால் பால் வாங்கக் காசில்ல...'' புராணத்தை தொடர்ந்து ஓதிக்கொண்டிருந்தாள்.

குழந்தை கண்கள் செருக... அவள் தோளில் சாய்ந்தது, பின் திடுக்கிட்டு... அழுதது.

பஸ் வண்டியில் சிலர் கேள்வி கேட்டனர்.

''சொந்த ஊர்...? உன் குடும்பத்துக்கு என்ன ஆனது...?'' ஏன் இப்பிடி...?'' அழுகையால் பதில் அளித்ததால் எல்லோரும் பரிதாபப்பட்டார்கள்... தோற்பை சில்லறையில் நிரம்பியது.

''ஐயோ! கடவுளே இப்பிடி கேள்விக் கேக்கிற மாதிரி வைச்சுட்டியே, புருஷன் போனமாதிரி, நானும் இந்தப் பிள்ளையும் போயிருக்கலாம்... நான் எப்பவோ செத்திருப்பன்... இந்த பச்சிளம் பாலகனுக்காக...''

அவள் தலையில் அடித்துக் கூக்குரல் செய்யப் பலர் மேலும் உதவி செய்ய முன் வந்தனர். பலர் வேடிக்கை பார்த்தனர். காசு சேர்ந்தது.

ஒருவரிடம் நேரத்தைக் கேட்டாள். நேரத்தையறிந்து பஸ்ஸிருந்து குதித்து ஓடி விரைந்தாள். இடையில் வந்த பஸ்ஸில் ஏறி... அவள் வனாந்தரமான ஓரிடத்தில் இறங்கினாள்.

தூரத்தில் ஒதுக்குப் புறமாக பல காலமாய் இருக்கும் மக்கள் குடியிருப்பு தெரிந்தது.

அவள் வருவதை எதிர்பார்த்துக் கொண்டிருந்த பெண் விழுந்தடித்து ஓடிவந்து பெரிதாக மூச்சு வாங்கினாள். காணாமல் போன கணவன் இருந்தால்' என அவள் கண் கலங்கி நிற்க...

''இந்தா, உன்ரை பிள்ளையைப்பிடி. எனக்கு நூற்றைம்பது ரூபாய். உனக்கு நூற்றைம்பது ரூபாய் பாவம் சரியான நித்திரை... இரவுக்கு நல்லா பிள்ளையை நித்திரை கொள்ளவிடு. காலையில வாறன்''

★★★

## பெற்றோர் இளைஞர் உறவு ...

13 வயதுக்கு இடைப்பட்ட பிள்ளைகள் பெற்றோரை சார்ந்து வாழ்பவர்கள். இவர்களுக்கு இந்த வயதிலேயே அடிப்படை சமூக விழுமியக் கல்வியுடன், தமது முழு கட்டுப்பாடுகளையும் பெற்றோர் கொடுக்க முடியும்.

13-20 வயதுக்கிடைப்பட்ட சுதந்திரமான வாழ்க்கையை விரும்பும் பிள்ளைகளுக்கு பெற்றோர் அளவுக்கதிகமான கண்டிப்பு, 'விமர்சனங்கள் மற்றும் கட்டுப்பாடுகளைத் திணிக்கும்போது பிள்ளைகள் அதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். ஒரு சிலர் முறை தவறவும் கூடும்.

அடுத்தபடியாக 20-25 வயது. இது இன்னொருவருடன் தங்கி வாழப் பழகும் பருவமாக இருக்கிறது. இந்தப் பருவத்தினர் இன்னொருவருடன் சார்ந்திருக்க விளைவர். இங்கும் சரியான புரிந்துணர்வு மற்றும் தன்னிச்சையான முடிவுகளுக்கு இடமளிக்கப்படும் பட்சத்தில் தவறான செயல்கள் நடக்க வாய்ப்பில்லை.

எல்லா விடயங்களிலும் தலையிடுதல், விமர்சிப்பு, கண்டனங்கள், குறைகளை பெரிய அளவில் வெளிப்படுத்தல் போன்ற அணுகுமுறைகளைக் பெற்றோர் கடைப்பிடித்தால் நிலைமை மோசமடைகிறது. இதன்போது, பெற்றோர் மறைமுகமாக பிள்ளைகளின் முடிவுகளுக்குத் தடையாக நிற்கின்றனர். இதனால் செய்யலாமா-இல்லையா என்ற குழப்பம் மற்றும் கேட்பதில் தயக்கம் என்பவற்றால் பிள்ளைகள் வழிமாறுகிறார்கள்.

சமூக நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகளும் சரியான வாழ்வியல் பற்றிய விடயங்களை, சமூக விழுமியங்களை பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுக்கத் தவறுவதாலும் இத்தகைய பிரச்சினைகள் எழுகின்றன.

பெற்றோரின் தேவைகள் என்ன? அவர்கள் எம்மிடம் எதை எதிர்பார்க்கிறார்கள்? என்பவற்றை இளைஞர்கள் புரிந்து கொள்ளவேண்டும். பெரியவர்கள் சொல்லும் விடயங்களைச் செவிமடுத்தல், எந்த ஒரு புதிய விடயத்தையும் பெரியவர்களிடம் நட்புடன் கேட்டு விளக்கம் பெறல் என்பது அவசியமாகும்.

வீட்டுக்கு மறைத்துச் செய்ய முயலும் விடயங்கள் பற்றி, அவற்றைச் செய்ய முன்னரே அதனால் ஏற்படக்கூடிய பின்விளைவுகளை தெரிந்து கொள்ளவேண்டும். முக்கியமாக, பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதார விடயங்களை முறையாகக் கற்றுக்கொள்ளவேண்டும்.



# விடாமல் துரத்துகிறது

தொடங்கி விட்டன பலப் பரீட்சைகள். சாதிக்கப் போவது யார்? ஒரு மாதத்தில் தெரிந்து விடும் முடிவுகள்.

பலருக்கு இம்முறை உடற்தேர்வு முடிவுகள் பாதகம். இதனால் பாதிக்கப்பட்டிருக்கின்றன அணிகள். காயங்கள் வீரர்களின் மனங்களைக் காயப்படுத்தி விட்டது. புது முகமாய் உலகக் கிண்ணத்துக்கு வரவிருந்தவர்கள் அழையா விருந்தாளியின் வரவால் வெளியேறி விட்டனர். இதனால் வெளியில் சிலருக்கு யோகம்தான்.

இங்கிலாந்து மிகமோசமாக பாதிக்கப்பட்டது இந்த விருந்தாளியால். மோர்கன், ஸ்வான், பிறிஸ்மன் இவர்கள் இங்கிலாந்தின் தூண்கள். ஆஷஷ் தொடர் இவர்களுக்கு வைத்துவிட்டது ஆப்பு. காயத்தால் அவதி. இதனால் உடற்தேர்வில் இவர்கள் தோல்வி.

பிரவீன்குமார் இந்தியாவிற்கு பந்து வீச்சில் தேவை. இருந்தும் தவறிவிட்டார் உடற் தேர்வில். இதனால் யோகம் ஸ்ரீசாந்துக்கு. துவண்டு திரிந்தவர் ஸ்ரீசாந்த். காரணம் அணியில் அவர் தேர்வுசெய்யப்படவில்லை. இதனால் அவர் இதயம் நொருங்கியது. அவரது ப்பேட்டி அது. குமாரின் விலகலால் வாய்ப்பு அவருக்கு.

பாகிஸ்தானில் சொகைல் தன்வீர், ஆஸியில் ஹஸி, நதன் ஹரிஸ் நீள்கிறது வெளியேறியவர்களின் பட்டியல். இந்த அவலத்தால் திறமையான அணியும் வெளியேறும் நிலை.

உலகக்கிண்ணப் போட்டிகள் நெருங்கும் தருணத்தில் போட்டிகள் தேவையா? காயத்துக்குத் தேவை குறைந்தது இரண்டு மாத ஓய்வு. உலகக் கிண்ணக் போட்டிகள் தொடங்கும் முன்னர் மூன்று மாதத்துக்கு முதலே போட்டிகளை நிறுத்தினால் காயத்திலிருந்து தப்பிக்கலாம். 2015 இல் ஆவது நடைமுறைக்கு வருகிறதா பார்ப்போம்?

**-அருண்மொழி-**

# வரவேற்கப்படும் நடைமுறைகள்

ஐ.சி.சி. இம்முறை உலகக் கிண்ணப் போட்டிகளில் அறிமுகப்படுத்தியுள்ள புதிய நடைமுறைகள் வீரர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன.

உலகக் கிண்ணப் போட்டிகள் மிகமுக்கியமானவை. பல அணிவீரர்களுக்கு வாழ்வா சாவா என்று அமைகின்ற போட்டித்தொடர். முக்கியமான தருணங்களில் நடுவர்கள் தமது வண்டவாளங்களைக் காட்டுவதனால் போட்டிகளின் முடிவுகளே மாறிவிடுகின்றன.

இதற்காக மூன்றாம் நடுவரிடம் கள நடுவரின் தீர்ப்பை மேன்முறையீடு செய்கின்ற முறைமை பரீட்சார்த்தமாக டெஸ்ட் போட்டிகளில் 2008ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. அப்போது இரு அணிகளினது சம்மதத்துடனேயே இந்த நடைமுறை பின்பற்றப்பட்டது. பின்னர் இந்த நடைமுறை 2010 ஆம் ஆண்டளவில் ஒரு நாள் போட்டிகளிலும் அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்திய அணியினைத் தவிர வேறு எந்தவொரு அணியும் இதற்கு எதிர்ப்புக் காட்டவில்லை. சர்ச்சைக்குரிய நிலையில் இழுபறிப்பட்டுக் கொண்டிருந்த இந்தப் நடைமுறை தற்போது உலகக் கிண்ணப் போட்டிகளில் நடைமுறைப்படுத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. போட்டிகளின்போது வீணாண சந்தேகங்களினைத் தவிர்த்து சிறப்பான முடிவுகளுக்கு இந்த முறை உதவுமெனத் தெரிவிக்கப்படுகிறது. இதனைவிட சுப்பர் ஓவர் முறையினையும் ஐ.சி.சி பயன்படுத்த தீர்மானித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

**-தீபக்கண்ணன்-**

# இவர்களை எதிர்பார்

உலகக் கிண்ணப் போட்டிகள் கோலாகலமாக நகர ஆரம்பித்துவிட்டது. எவர் கிண்ணம் வெல்லப் போகின்றனர்? கருத்துச் சொல்லுகின்றனர் பலர். போட்டி நடத்தும் பாக்கியம் எமது நாட்டுக்கு.

இலங்கை அணி என்றதும் நினைவுக்கு வருபவர்கள் சிலர். அவர்களில் முக்கியம் முரளி, ஜெயசூரியா. இம்முறை சனத் இல்லை. அவருக்குப் பதில் அதிரடிக்கு பெயர் பெற்ற டில்ஷான். இவரது அதிரடிகள் 2009,2010 ஆம் ஆண்டு சிறப்பு. இருப்பினும் 2010 ஆம் ஆண்டு பிற்பகுதியில் இவரது ஆட்டம் சோபையிழந்தது. மேற்கிந்தியத் தீவுகளுடனான போட்டியிலும் சராசரி ஆட்டமே வெளிப்பாடு.

இவருக்கு இணை தரங்க. மேற்கிந்தியத் தீவுகளுடனான போட்டி சிறப்பு இவருக்கு. தொடர் ஆட்டநாயகனும் இவர். 2007 இல் ஜெயசூரியவுக்கு இணையாய் ஈடுகொடுத்தார். ஜெயசூர்யா கைவிட்ட தருணங்கள் பல. அதில் குறிப்பாக நியூஸிலாந்துடன் அரையிறுதிப் போட்டி. தனது சாதனையால் வெற்றிக்கு வித்தானார்.

அனுபவம் வாய்ந்த வீரர்களும் உண்டு. சங்கக்காரா, மஹேல ஜெயவர்த்தன, முத்தையா முரளிதரன்தான் அவர்கள். சங்கக்காராவின் பங்களிப்பு பலமாக உள்ளது இலங்கைக்கு. சராசரியாக தொடர்கிறது இவரது ஆட்டம். தலைமைப் பொறுப்பு இவ

ருக்கு. விக்கெ
வரச் செய்வது
மஹேலவில்
ரால் பெறப்ப
யில். அதிரடி,
ருடன் கூடவே
இவரது ஆட்ட
முரளியின் ப
ஓட்டங்களும்
தொடர் இதுதா
மத்தியூஸ், பெ
வரிசை இவர்க
இரண்டும் இரு
மென்டிஸ்
பலருக்கு இன்று
மேலதிக இனை
கிறார். ஹட்ரிக்
டம் இருக்கிறது
புதுமுக வீரர் உ
ஆகும் இவரது ப



| திகதி | நேரம் | போட்டி | |
|---|---|---|---|
| 14.மார்ச் | மு.ப9.30 | பங்களாதேஷ்- நெதர்லாந்து | சிட்டக்கொ |
| 14.மார்ச் | பி.ப2.30 | பாகிஸ்தான்- சிம்பாவே | பல்லேகல |
| 15.மார்ச் | பி.ப2.30 | அயர்லாந்து- தென்னாபிரிக்கா | ஈடன் கார் |
| 16.மார்ச் | பி.ப2.30 | ஆஸ்திரேலியா- கனடா | பெங்களூ |
| 17.மார்ச் | பி.ப2.30 | இங்கிலாந்து - மேற்கிந்தியத்தீவுகள் | சிதம்பரம் |
| 18.மார்ச் | மு.ப9.30 | அயர்லாந்து - நெதர்லாந்து | ஈடன் கார் |
| 18.மார்ச் | பி.ப2.30 | நியூசிலாந்து - இலங்கை மும்பை | சர்வதேச |
| 19.மார்ச் | மு.ப9.30 | பங்களாதேஷ்- தென்னாபிரிக்கா | மிர்ப்பூர் ச |
| 19.மார்ச் | பி.ப2.30 | ஆஸ்திரேலியா- பாகிஸ்தான் | ஆர்.பிரேம |
| 20.மார்ச் | மு.ப9.30 | கென்யா- சிம்பாவே | ஈடன் கார் |
| 20.மார்ச் | பி.ப.2.30 | இந்தியா - மேற்கிந்தியத் தீவுகள் | சிதம்பரம் |
| | காலிறுதிச் சுற்று | | |
| 23.மார்ச் | பி.ப2.30 | ஏ1 - பி4 | மிர்ப்பூர் |
| 24.மார்ச் | பி.ப2.30 | ஏ2- பி3 | அகமதா |
| 25.மார்ச் | பி.ப2.30 | ஏ3- பி2 | மிர்ப்பூர் |
| 26.மார்ச் | பி.ப2.30 | ஏ4- பி1 | ஆர்.பிரே |
| | அரையிறுதிச் சுற்று | | |
| 29.மார்ச் | பி.ப2.30 | | ஆர்.பிரே |
| 30.மார்ச் | பி.ப2.30 | | பஞ்சாப் |

# ...ர்பார்க்கிறார்கள்

...ருக்கு. விக்கெட் காப்பாளரும் இவர்தான். இரண்டையும் சரி வரச் செய்வது இவரது திறமை.


மஹேலவில் அணி நம்பிக்கை. 40 முதல் 50 ஓட்டங்கள் இவரால் பெறப்படுகிறது அணிக்கு. மத்திய வரிசை இவரது கையில். அதிரடி, தேவைப்படும் இடத்தில் மட்டும். நிதானம் இவருடன் கூடவே இருப்பது. அணிக்கு இக்கட்டான நிலைமை. இவரது ஆட்டம் மீட்டுவிடும்.

முரளியின் பந்து வீச்சு. விக்கெட்டுகள் விழுவதாக இல்லை. ஓட்டங்களும் வழங்குவதில்லை. இவருக்கு இறுதிப் போட்டித் தொடர் இதுதான். இருந்தும் எதிர்பார்ப்பு இவரிடம் அதிகம். மத்தியூஸ்,பெரேரா இலங்கைக்கு கிடைத்த சொத்துகள். மத்திய வரிசை இவர்களுக்கு சொந்தம். துடுப்பாட்டம், பந்து வீச்சு இரண்டும் இருவருக்கும் கைவந்த கலை.

மெண்டிஸ் கைகொடுக்கிறார் சில வேளைகளில். இருந்தும் பலருக்கு இன்றும் இவரது பந்து வீச்சு எமன்தான். ஹேரத் அணிக்கு மேலதிக இணைப்பு. மலிங்க பல சாதனைகளுக்குக் காத்திருக்கிறார். ஹட்ரிக் வீழ்த்தலாம் இம்முறையும். அதற்கான தராதரம்அவரிடம் இருக்கிறது இவரது பந்து வீச்சு. குலசேகரா இம்முறை புதுமுக வீரர் உலகக்கிண்ணத்துக்கு. சொந்த மணில் 'ஸ்விங்ஸ்' ஆகும் இவரது பந்துகள். ஏனையோரும் காத்திருக்கின்றனர் கலக்க.

நாம் எதிர்பார்த்திருக்கின்றோம் இவர்களின் கலக்கலுக்காய்.

- டிலீப்-



| மைதானம் |
| --- |
| சிட்டக்கொங் சர்வதேசக் கிரிக்கெட் அரங்கு, பங்களாதேஷ் |
| பல்லேகல சர்வதேச கிரிக்கெட் அரங்கு, இலங்கை |
| ஈடன் கார்டன்ஸ் மைதானம், இந்தியா |
| பெங்களூர் சின்னச்சாமி மைதானம், இந்தியா |
| சிதம்பரம் கிரிக்கெட் அரங்கு , இந்தியா |
| ஈடன் கார்டன்ஸ் மைதானம், இந்தியா |
| சர்வதேச கிரிக்கெட் அரங்கு, இந்தியா . |
| மிர்ப்பூர் சர்வதேச கிரிக்கெட் அரங்கு ,பங்களாதேஷ் |
| ஆர்.பிரேமதாசா சர்வதேச கிரிக்கெட் அரங்கு , இலங்கை |
| ஈடன் கார்டன்ஸ் மைதானம், இந்தியா |
| சிதம்பரம் கிரிக்கெட் அரங்கு , இந்தியா |
| |
| மிர்ப்பூர் சர்வதேச கிரிக்கெட் அரங்கு, பங்களாதேஷ் |
| அகமதாபாத் சர்வதேச கிரிக்கெட் அரங்கு, இந்தியா |
| மிர்ப்பூர் சர்வதேச கிரிக்கெட் அரங்கு ,பங்களாதேஷ் |
| ஆர்.பிரேமதாசா சர்வதேச கிரிக்கெட் அரங்கு, இலங்கை |
| |
| ஆர்.பிரேமதாசா சர்வதேச கிரிக்கெட் அரங்கு , இலங்கை |
| பஞ்சாப் கிரிக்கெட் சங்க மைதானம், இந்தியா |

## 2007

மத்தியூ ஹைடன்
ஆட்டங்கள் : 11
ஓட்டங்கள் : 659
சதம் : 3
அரைச் சதம் : 1

மக்ராத்
ஆட்டங்கள் : 11
விக்கெட்டுக்கள் : 26
சிறப்பு : 3 / 14
சராசரி : 13.73

## 2003

சச்சின் டெண்டுல்கர்
ஆட்டங்கள் : 11
ஓட்டங்கள் : 673
சதம் : 1
அரைச் சதம் : 6

வாஸ்
ஆட்டங்கள் : 10
விக்கெட்டுக்கள் : 23
சிறப்பு : 6 / 25
சராசரி : 14.39

## 1999

ராகுல் ராவிட்
ஆட்டங்கள் : 8
ஓட்டங்கள் : 461
சதம் : 2
அரைச் சதம் : 3

அலொட்
ஆட்டங்கள் : 9
விக்கெட்டுக்கள் : 20
சிறப்பு : 4 / 37
சராசரி : 16.25

## 1996

சச்சின் டெண்டுல்கர்
ஆட்டங்கள் : 7
ஓட்டங்கள் : 523
சதம் : 2
அரைச் சதம் : 3

கும்பிளே
ஆட்டங்கள் : 7
விக்கெட்டுக்கள் : 15
சிறப்பு : 3 / 28
சராசரி : 18.73

## 1992

மார்ட்டின் குரோவ்
ஆட்டங்கள் : 9
ஓட்டங்கள் : 456
சதம் : 1
அரைச் சதம் : 4

அக்ரம்
ஆட்டங்கள் : 10
விக்கெட்டுக்கள் : 18
சிறப்பு : 4 / 32
சராசரி : 18.77

## 1987

கிரகாம் கூச்
ஆட்டங்கள் : 8
ஓட்டங்கள் : 471
சதம் : 1
அரைச் சதம் : 3

மக்டேர்மோட்
ஆட்டங்கள் : 8
விக்கெட்டுக்கள் : 18
சிறப்பு : 5 / 44
சராசரி : 18.94

## 1983

கௌவ்வேர்
ஆட்டங்கள் : 7
ஓட்டங்கள் : 384
சதம் : 1
அரைச் சதம் : 3

பின்னி
ஆட்டங்கள் : 8
விக்கெட்டுக்கள் : 18
சிறப்பு : 4 / 29
சராசரி : 18.66

# முதல் தரமானவர்கள்

# சந்தானத்தின் கொமடிக் கலாட்டா...



ஒவ்வொரு படங்களிலும் கொமெடிச் சந்தானம் வித்தியாசமான வேடங்களில் வந்து ரசிகர்களை சிரிக்க வைப்பார். சாய் ரமணியின் இயக்கத்தில், ஜீவாவுடன் இணைந்து 'சிங்கம் புலி' படத்தில் கொமெடியில் அசத்தியிருக்கிறார். சந்தானம் 'லேடி' வேடத்தில் இது வரை நடித்தது இல்லையாம். படத்தில் பாவாடை-தாவணி கட்டிய 'புஜ்ஜி பாபு'வாக வருகிறாராம்.

இவர் காதலிக்க முயற்சி செய்யும் பெண்ணை, நண்பர்கள் அழைத்துக் கொண்டு போவதைப் பார்த்தில் இருந்து, தாவணி கட்டிய பெண்ணாக மாறிவிடுவாராம். இந்தப் படத்திலும் சந்தானத்தின் கொமடிக் கலாட்டா தொடர்கிறதாம்.



# இன்றைய சூப்பர் ஸ்டார்கள் வாரிசு நாயகர்கள் இல்லை – ஸ்ரேயா



ஸ்ரேயா இன்று வெறும் நடிகை மட்டுமல்ல, பல கல்வி மையங்களில் கௌரவ விரிவுரையாளர் மட்டத்தில் சினிமா பற்றிப் பாடம் நடத்தி வருகிறார். சினிமாவின் வெற்றி - தோல்விகள் குறித்து அக்கு வேறு ஆணி வேறாகப் பிரித்து மேய்கிறார், நுனி நாக்கு ஆங்கிலத்தில்.

சமீபத்தில் அவர் ஒரு நிகழ்ச்சியின் பங்கேற்க வந்திருந்தார். அப்போது அவர் கூறுகையில், தீபா மேத்தா இயக்கும் 'விண்ட்ஸ் ஆப் சேஞ்ச்' என்ற ஆங்கிலப் படத்தில் இப்போது நடித்து வருகிறேன். இது எனக்கு மூன்றாவது ஆங்கில படம். தமிழ், ஹொலிவூட் படங்களில் நடிப்பதில் பெரிய வித்தியாசம் இருப்பதாகத் தெரியவில்லை. இயக்குநர்கள், கதைகள் மற்றும் படங்களை எடுக்கும் முறைகள் போன்றவைகளே படத்தின் தரத்தை நிர்ணயிக்கின்றன. வெற்றி-தோல்வி கடவுள் கையில் உள்ளது. சில நேரங்களில் திறமையான நடிகர்கள் கூட பிரபலமாக முடியாமல் உள்ளனர். கலைஞர்களுக்குத் தன்னம்பிக்கை அவசியம். எவ்வளவு கஷ்டத்திலும் எழுந்து நிற்பேன் என்று நம்பவேண்டும். வாரிசு நடிகர்களால் மட்டுமே நிலைக்க முடியும் என்பதில் நம்பிக்கை இல்லை. இந்தியாவில் உள்ள சூப்பர் ஸ்டார் நடிகர்கள் யாரும் வாரிசு நடிகர்கள் இல்லை. திறமை இருந்தால் மட்டுமே ஜெயிக்க முடியும்''- என்றார்.

# ராணாவில் ரஜினியுடன் இணைகிறார் தீபிகா

ராணா படத்தில் ரஜினிக்கு ஜோடியாக தீபிகா படுகோனே நடிக்கிறார் என்று அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து படத்தின் தயாரிப்பாளர்களில் ஒருவரான சௌந்தர்யா ரஜினி கூறுகையில், ராணா படத்தின் முக்கிய நாயகிகளுள் ஒருவராக தீபிகா நடிப்பது உறுதியாகியுள்ளது.

தீபிகா அளித்துள்ள பேட்டியில், ''ரஜினி ஒரு திரையுலக சரித்திரம். அந்த மாபெரும் கலைஞருடன் நடிப்பதில் நான் பெருமைப்படுகிறேன் - அளவற்ற மகிழ்ச்சியடைகிறேன். என் வாழ்க்கையில் மறக்க முடியாத வாய்ப்பு இது. இதற்காக சில வாய்ப்புகளை மகிழ்ச்சியுடன் விட்டுக்கொடுத்தேன்'' - என்றார்.

படத்தில் மேலும் ஒரு நாயகி நடிக்கவிருக்கிறார். அது த்ரிஷா என்று கூறப்படுகிறது. ஆனாலும் இந்தச் செய்தியை இன்னும் தயாரிப்பாளரோ, ரஜினியோ அல்லது இயக்குநர் ரவிக்குமாரோ உறுதிப்படுத்தவில்லை.

இதற்கிடையே, ராணாவின் படப்பிடிப்பு எதிர்வரும் மார்ச் மாதம் ஆரம்பமாகிறது. இந்தியாவின் பிரமாண்ட அரண்மனைகள் மற்றும் கோட்டைகளில் இந்தப் படம் எடுக்கப்படவுள்ளது. ரசிகர்கள் இதுவரை பார்த்திராத பல புதிய இடங்களை இந்தப் படத்தில் காணலாம் என இயக்குநர் ரவிக்குமார் தெரிவித்துள்ளார். ரஜினி மூன்று வேடங்களில் நடிக்கும் முழு நீள சரித்திரப் படம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

# என்னைப் பற்றிய செய்திகள் ஏன் தொடர்கின்றன? த்ரிஷா

சில தினங்களாக இணையதளங்களில் த்ரிஷா பற்றிய செய்திகள் தொடர்ந்து வந்த வண்ணம் உள்ளன. த்ரிஷாவுக்கு திருமணம் என்றும் அவருக்கு நெருக்கமானவர்கள் வெளிப்படையாகக் கூறிவருகின்றனர். அவரது தாயார் உமா கிருஷ்ணன் மாப்பிள்ளை பார்ப்பதிலும் மும்முரமாக உள்ளாராம். இன்னொரு பக்கம் எப்படியாவது ரஜினியின் ஜோடியாக ராணாவில் நடித்துவிட வேண்டும் என்பதில் தீவிரமாக உள்ளாராம் த்ரிஷா. இந்த நிலையில் அவரது மார்பில் உள்ள (நீண்ட காலமாக) டாட்டுவுக்குப் புதிய விளக்கம் கொடுத்து இணையங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

தொடர்ந்து தன்னைப் பற்றி வரும் செய்திகள் குறித்து த்ரிஷா தெரிவிக்கையில், ''ஏன் என்னைப் பற்றி மட்டும் மாறிமாறிச் செய்திகள் வெளியாகின்றன என்பது எனக்கு விளங்கவில்லை. எனது கல்யாணம் பற்றி வெளிவந்துள்ள செய்திகள் அனைத்தும் பொய்யானவை. எதற்காக அவசரப்பட வேண்டும். ஏனைய செய்திகள் பொய்யானவை என என்னால் உடனடியாக உறுதிப்படுத்த முடியவில்லை'' - என்றார்.






# தூங்காநகரம்

மதுரையில் வெவ்வேறு பகுதியில் வேலை பார்க்கும் விமல், பரணி, நிசாந்த், கவுரவ் நால்வரும் மதுக்கடையில் பழக்கமாகின்றனர். தினம் குடி, கொண்டாட்டம் எனத் திரிகிறார்கள். ஜவுளிக்கடையில் உடை மாற்றும் பெண்களை உள்ளூர் தாதா மகனும், அவன் நண்பனும் செல்போனில் படம் பிடித்து அவற்றை அதே பெண்களுக்கு அனுப்பி மிரட்டி பலாத்காரம் செய்கின்றனர்.

திருமணமாகப் போகும் கோவில் அர்ச்சகர் மகளைத் தொலைபேசிக்கும் அவளது ஆபாசப் படம் வருகிறது. அர்ச்சகர் பதறுகிறார். அவர் நிலைமையைக் கண்டு விமல் கலங்குகிறார். தாதா மகனை அடித்து நொறுக்குகிறார்.

விமலைத் தீர்த்து கட்ட தாதா கோஷ்டி தேடி அலைகிறது. அவர் ஊருக்கு ஓடுகிறார். நண்பர்கள் மூவரையும் பிடித்து விமலைக் கொல்லுமாறு தூண்டுகின்றனர்.நட்பா, நண்பன் உயிரா, என தவிக்கும். அவர்கள் எடுக்கும் முடிவு கிளைமாக்ஸ்.

கதாபாத்திரங்கள் பற்றிய வடிவேலு பின்னணி குரலில் காட்சிகள் விரிகின்றன. நண்பர்கள் மதுக்கடை சண்டையில் சேர்ந்து பரணி அறைக்குள் அடைக்கலமாகும் சீன்கள் ரகளை.

போதையில் உளறும் போதும் உதாசீனம் செய்த நண்பன் விபத்தாகி சாகக் கிடக்கையில் தூக்கிப் போய் ஆஸ்பத்திரியில் காப்பாற்றுவதிலும் அழுத்தம் பதிக்கிறார் விமல்.

மூன்று நண்பர்களும் விமல் கல்யாணத்தில் புகுந்து அவரைக் கொல்ல வியூகம் வகுப்பது எதிர்பாராத உதறல். கிளைமாக்ஸ் நிமிர்ந்து உட்கார வைக்கிறது.

மயானத்தில் பிணம் எரிப்பவராக வரும் கவுரவ் ஈர்க்கிறார். அவர் மொபைலில் உள்ள சவ ஊர்வல மேள இசை சிரிக்க வைக்கிறது. உள்ளூர் தொலைக்காட்சிச் சேவையில் தொகுப்பாளினியாக வரும் அஞ்சலி அம்சம். வாய் பேசாதவராக வரும் நிசாந்த், நகைப்புடன் வரும் பரணி விளாசுகின்றனர்.

இரு பாட்டிமார்களின் நகைச்சுவை வயிற்றைப் புண்ணாக்கும் ரகம். கொஞ்சமாய் பேசி வில்லத்தனத்தில் மிரட்டுகிறார் கமலா தியேட்டர் வி.என். சிதம்பரம். மதுரை கதை களத்தில் காட்சிகளை விறுவிறுப்பாக நகர்த்துகிறார் இயக்குனர் கவுரவ். ஆரம்பக் காட்சிகளில் இன்னும் அழுத்தம் சேர்த்து இருக்கலாம். பிற்பகுதிக் காட்சிகள் விறுவிறுப்பாகி ஒன்ற வைக்கின்றன. சுந்தர் சி.பாபுவின் பின்னணி இசை படத்தைத் தூக்கி நிறுத்துகிறது. "கூரான பார்வைகள்..." பாடல் மனதை வருடும் மெல்லிசை. கே.விஜய் உலகநாத் ஒளிப்பதிவில் மதுரை அழகு.

# காதல் திருமணம் சமீரா ரெட்டி



வாரணம் ஆயிரம், படம் மூலம் தமிழில் கதாநாயகியாக அறிமுகம் ஆனவர் சமீரா ரெட்டி. கவுதம் மேனன் இயக்கிய நடுநிசி நாய்கள் படத்தில் தற்போது நடித்து முடித்துள்ளார். இப்படம் இம்மாதம் இறுதி யில் வெளியாகிறது. அவர் பேட்டி ஒன்றில்,

வாரணம் ஆயிரம் மறக்க முடியாத படம். இதில் சூர்யாவுடன் நடித்தது பெருமையாக இருந்தது. கவுதம் மேனன் திறமையான இயக்குனர். அவரது நடுநிசி நாய்கள் படத்திலும் நடித்துள்ளேன். இது திரில்லர் கதை. கல்லூரி மாணவியாக வருகிறேன்.

எனக்கு காதல் அனுபவம் உண்டு. கல்லூரி வாழ்க்கையில் காதலித்துள்ளேன். ஆனால் பயம், வெட்கம் காரணமாக காதலை பெற்றோருக்குச் சொல்லவில்லை. அது நிறைவேறாமல் போனது. இனிப் புதிதாக ஒருவரை காதலித்து திருமணம் செய்து கொள்வேன்.



# நண்பன் குழு

கோவையில் நண்பன் சினிமா படப்பிடிப்பில் விஜய் - இலியானாவை பார்ப்பதற்கு கல்லூரி மாணவர்கள் திரண்டதால் பரபரப்பு ஏற்பட்டது. அமீர்கான் நடிப்பில் வெளியாகி இந்தியில் ஹிட்டான 3 இடியட்ஸ் படம், தமிழில் நண்பன் என்ற பெயரில் மீள்தயாரிப்பு செய்யப்படுகிறது. ஷங்கர் இயக்குகிறார். இதில் அமீர்கான் நடித்த வேடத்தில் விஜய் நடிக்கிறார். கதாநாயகியாக இலியானாவும், ஜீவா, ஸ்ரீகாந்த், சத்யராஜ் ஆகியோரும் நடிக்கின்றனர். பிரதான கதாநாயகனாக ராகவா லோரன்ஸ் நடிப்பதாக அறியவருகிறது. இதன் முதல் கட்டப் படப்பிடிப்பு ஊட்டியில் நடந்தது. தொடர்ந்து திருமண ஊர்வலம் மற்றும் பாடல் காட்சியை படமாக்குவதற்காக படப்பிடிப்புக் குழுவினர் கோவை வந்தனர். இதன்போது படப் பிடிப்புக்கு வந்த நண்பன் குழுவினரைக் கல்லூரி மாணவர்கள் சுற்றிவளைத்து ஓட்டோக்கிராப் வாங்கிக்கொண்டனர்.

# கவர்ச்சி மீது நம்பிக்கை






கதை மற்றும் நடிப்பின் மீது நம்பிக்கை இருக்கிறதோ இல்லையோ, கவர்ச்சியின் மீது நம்பிக்கை வைத்து வெளியாகும் சில படங்களை தமிழ் ரசிகர்கள் வெற்றிபெறச் செய்ததாலோ என்னவோ தமிழ் திரையுலகில் கவர்ச்சிப் படங்களுக்கு என்றுமே பஞ்சம் வந்ததில்லை.

அந்த வரிசையில் காரசாரமான ஆந்திர மசாலா படங்கள் இரண்டு கவர்ச்சியை மட்டுமே நம்பி திரையிடப்படவிருக்கின்றன. நம்மூரில் காட்டாத கவர்ச்சியையெல்லாம் தெலுங்கு தேசத்திற்கு சென்று காட்டும் நம்மூர் நாயகிகள் நடித்த படங்கள்தான் அவை. நடிகர் நாகார்ஜுனா நாயகனாக நடிக்க, அவருக்கு ஜோடியாக ப்ரியாமணியும், அனுஷ்காவும் போட்டி போட்டு கவர்ச்சி காட்டி நடித்திருக்கும் படம் வம்பு என்ற பெயரில் வெளியாகிறது. இதேபோல நடிகர் மகேஷ்பாபுவும்- அனுஷ்காவும் நடித்த படம் ஒன்றும் வெளியாக இருக்கிறது. இந்த 2 படங்களுமே செய்தியின் ஆரம்பத்தில் சொன்னபடி நாயகியரின் கவர்ச்சியை மட்டுமே நம்பி தமிழக திரையரங்குகளை அலங்கரிக்கவுள்ளன. தமிழ் ரசிகர்களைக் கவரும் வகையில் பிரத்தியேக கவர்ச்சி விளம்பரங்களும் தயாராகி விட்டன. அனுஷ்கா ப்ரியாமணியின் கவர்ச்சியை தமிழ் ரசிகர்கள் ரசிக்காமல் விட்டுவிடுவார்களா என்ன?




# அரசனாலும் இயலாத காரியமும் உண்டு



மன்னர் கிருஷ்ணதேவராயர் அரண்மனையிலே விதூசனாக - நகைச்சுவைக் கலைஞனாக விளங்கியவன் தென்னாலிராமன் என்ன நகைச்சுவை மன்னன்.

அரசர் சோர்வுற்றிருக்கும் போதும் ஏதாவது பிரச்சினை காரணமாக அவர் கவலையாக இருக்கும் போதும் தென்னாலிராமன் தனது நகைச்சுவை ஆற்றலால் அரசரை மகிழ்விப்பான். அது மட்டுமல்லாது சிக்கலான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் அரசருக்கு ஆலோசனை வழங்குவான். தென்னாலிராமன் மீது மன்னர் பேரன்பு வைத்திருந்தார்.

ஒருநாள் மாலை நேரத்தில் மன்னரும் தென்னாலிராமனும் அரண்மனைப் பூந்தோட்டத்தில் உரையாடிக்கொண்டிருந்தனர்.

''மகாராஜா! சில சிறுவர்களுக்குப் பெரியவர்களையே திணறவைக்கக்கூடிய பேராற்றலைக் கடவுள் வழங்கியுள்ளார். அப்படியான சிறுவர்களை இலகுவில் சமாதானப்படுத்த முடியாது. எனது சொந்தக்காரச் சிறுவன் ஒருவன் எனது வீட்டுக்கு வந்திருக்கிறான். அவன் சரியான சுட்டிப் பயல். அவன் விருப்பத்தை என்னால் பூர்த்தி செய்யவே முடியவில்லை. அவன் என்னைத் திணற அடித்து விடுகிறான்...'' என்றான் தென்னாலிராமன்.

''தென்னாலிராமா...! நாளைக்கு அந்தச் சுட்டிப்பயலை அரண்மனைக்கு அழைத்துவா, அவன் என்ன கேட்டாலும் உடனே கொடுத்து அவன் விருப்பத்தைப் பூர்த்தி செய்து அவனைச் சமாதானப்படுத்தி விடுகிறேன்'' என்றார் அரசர்.

அடுத்த நாள் ஐந்து வயதுடைய சுட்டிப் பையன் சதாவை அரண்மனைக்கு அழைத்து வந்தான் தென்னாலிராமன்.

''தென்னாலிராமா! உன்னைத் திணறடிக்கும் சுட்டிப்பயல் இவன்தானா....?'' என்று கேட்டபடி சிறுவனைப் பார்த்தார் அரசர். சிறுவன் சோகமே உருவாகக் காட்சியளித்தான்.

''குட்டிப் பையா! ஏன் கவலையோடு காணப்படுகிறாய்? உனக்கு என்ன வேண்டும்....? கேள். உடனே தருகிறேன்'' என்றார் மன்னர்.

''மகாராஜா....! எனக்குக் கரும்பென்றால் மிகவும் ஆசை. எனக்கு ஒரு கரும்பு வெட்டித் தாருங்கள்'' என்றான் சிறுவன்.

அரசர் ஒரு பணியாளை அழைத்து, ''அரண்மனைத் தோட்டத்துக்குச் சென்று ஒரு கரும்பு வெட்டிவா'' என்று உத்தரவிட்டார்.

''மகாராசா! அவர்போய் வெட்டி வந்தால் நான் சாப்பிட மாட்டேன். நீங்கள் போய் வெட்டி வந்தால்தான் சாப்பிடுவேன்...'' என்று கூறினான் சிறுவன். இப்படி அவன் கூறியதைக் கேட்டதும் அரசர் ஒரு கணம் அதிர்ந்துபோய் நின்றார். சபையில் உள்ளோரும் அதிர்ச்சி அடைந்தனர்.

''சரி, சரி... நானே போய் வெட்டிவந்து தருகிறேன் என்று கூறிய அரசர், தோட்டத்துக்குச் சென்று ஒரு கரும்பு வெட்டி வந்து சிறுவனிடம் கொடுத்தார்.

''மகாராசா! இதை எப்படிச் சாப்பிடுவது?... இதன் தோலைச் சீவித் துண்டு துண்டாக வெட்டித் தாருங்கள்'' என்றான் சிறுவன்.

அரசர் மிகவும் சிரமப்பட்டு கரும்பைச் சீவி, துண்டு துண்டாக வெட்டி ஒரு வெள்ளித் தட்டிலே வைத்துச் சிறுவனிடம் கொடுத்தார். சிறுவன் சத்தம்போட்டு அழத் தொடங்கி விட்டான்.

''தம்பி! நீ கேட்டபடி கரும்பைத் துண்டு துண்டாக வெட்டித் தந்திருக்கிறேன்.... சாப்பிடாமல் ஏன் அழுகிறாய்...?'' என்று அரசர் அன்போடு கேட்டார்.

''நீங்கள் வெட்டிய கரும்புத் துண்டுகளை எல்லாம் வடிவாக ஒட்டி முழுக் கரும்பாகத் தாருங்கள்'' என்று கூறினான் அந்தச்சுட்டிப்பயல். அவனுடைய பேச்சைக் கேட்டதும் அதிர்ந்து போய் சிலை போல நின்றார் மன்னர். பின்னர் ''தென்னாலிராமா! நீ கூறியது முற்றிலும் உண்மைதான்.... சில புத்திசாலிச் சிறிவர்களைத் திருப்திப்படுத்துவது கஷ்டம் என்பது உண்மைதான்'' என்று கூறினார் கிருஷ்ண தேவராய மன்னர். ❋

- மாஸ்டர் சிவலிங்கம்.

## துலங்கும் புள்ளிகள்

### அடால்ஃப் ஹிட்லர்



ஊர்ப்புலம் உடல்வதைத்து உயிர்குடித்த கொலைஞன்,
சீர்குலைத்து இன அழிப்பைச் செய்தஇழி மனிதன்,
போர்விதைத்து வெற்றியென்று புலம்பிநின்ற அந்நாள்,
ஜேர்மனியை ஆண்ட அடால்ஃப் ஹிட்லர் எனும் கொடியன்.

நீதியற்றுச் சர்வமும்ஆள் நெஞ்சனிவன் வஞ்வன்,
யூதஇனக் கொலைபுரிந்த நெறிபிறழ்ந்த இழிஞன்,
ஆதியென்ன அந்தமென்ன அவன்கொடிய கூற்றும்,
பாதகனாம் ஹிட்லரிவன் பார்வெறுக்கும் நாற்றம்.

சிலபொழுது செய்தகொடும் செய்கையவை நாளும்,
உலகமிதில் ஒழியாது உண்மைகளாய் வாழும்,
நிலமிதிலே நடந்தவைக்காய் நீதிவிழி திறக்கும்,
பலரினிக்க நன்மைகளைப் பகிர்ந்தொருநாள் ஆளும்

ஹிட்லரைப்போல் கீழ்த்தரமாய் ஆட்சிசெய்யும் பலரும்
நட்பிழந்து நாடிழந்து நலமிழந்து மாழ்வர்
அற்புதமாய் அன்புருவாய் ஆட்சிசெயின் உலகம்
எப்பொழுதும் போற்றுமன்றேல் ஏசிநிதம் தூற்றும்

★ 1889 இல் ஆஸ்திரியாவில் பிறந்தான்.

★ 1919 இல் நாசி கட்சியில் சேர்ந்து அதன் தலைவரானான்

★ 1033 இல் ஜேர்மனியின் தலைமையைப் பெற்றான்.

★ விரைவிலேயே தனது எதிரிகளைக் கொடுமை செய்தும், வருத்தியும், கொன்றும் நாட்டின் சர்வாதிகாரியானான். யூத மக்களை இனப் படுகொலை புரிந்தான்.

★ இரண்டாம் உலகப்போரின்போது அண்டை நாடுகளான ஐரோப்பிய நாடுகள் பலவற்றைக் கைப்பற்றினான்.

★ விரைவிலேயே நட்புடனிருந்த ரஸ்யாவுடனும் இங்கிலாந்து, அமெரிக்கா ஆகியவற்றுடனும் போரிட்டுப் படிப்படியாக முன்னர் கைப்பற்றிய நாடுகளை இழந்தான்.

★ பலராலும் வெறுக்கப்பட்ட ஹிட்லர் நேச நாட்டுப் படைகளிடம் சரணடையாமல் 1945 ஏப்ரல் 30 இல் பேர்லின் நகரில் தற்கொலை செய்துகொண்டான்.

★ தற்கொலை செய்துகொள்ளும்போது இவனது காதலியும் அமைச்சர்களும் இவனுடனேயே இருந்தனர்.

★ உலகிலேயே மிக மோசமான சர்வாதிகாரி என வரலாற்றில் பெயரெடுத்தவன் இவன்.

- உமாபாரதி.

## முளைக்கு வேலை தரும் மாயச் சதுரம்

### கணிதப் புதிர் - 04

| | | | | |
|---|---|---|---|---|
| 11 | 18 | 25 | 2 | 9 |
| 10 | 23 | 19 | 21 | 3 |
| 4 | 6 | 13 | 15 | 22 |
| 12 | 5 | 7 | 14 | 16 |
| 17 | 24 | 1 | 8 | 20 |

இடம் மாறியுள்ள நான்கு எண்களை மாத்திரம் உரிய கூட்டிற்குள் மாற்றியிடுவதன் மூலம் நிரை, நிரல், மூலைக்கு மூலை கூட்டுத்தொகை 65 ஆகும் வண்ணம் எண்களை ஒழுங்கமையுங்கள். உங்கள் முயற்சி வெற்றியளித்ததா? என்பதை அறிய அடுத்த வாரம் இளஞ்சுடரைப் பாருங்கள்.

கணிதப் புதிர் - 03 இன் சரியான விடை

| | | | |
|---|---|---|---|
| 2 | 30 | 28 | 8 |
| 24 | 12 | 14 | 18 |
| 16 | 20 | 22 | 10 |
| 26 | 6 | 4 | 32 |

மாணவர்களே!

**உங்கள் வாசிப்புத் திறமைக்கு ஒரு சவால்**

நீங்கள் வாசித்த புத்தகம் ஒன்றினைப் பற்றிய கருத்துக்களை A4 தாளில் அதன் ஒரு பக்கத்துக்கு மேற்படாமல் எழுதி அனுப்புங்கள். தகுதி வாய்ந்தவை பிரசுரிக்கப்படும்.

பிரசுரமாகும் ஒவ்வொரு கட்டுரைக்கும் பெறுமதி மிக்க புத்தகப் பரிசுகள் வழங்கப்படும்.

உங்கள் திறமையைக் காட்டுங்கள்.

**அனுப்பவேண்டிய முகவரி**


'இளஞ்சுடர்', சுடர் ஒளி,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர்:-..............................
தரம் :-..............................
பாடசாலை :-..............................
..............................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

.................. ..................
திகதி வகுப்பாசிரியர் கையொப்பம்

## சொற்சிலம்பம் - போட்டி இல: 457



அனுப்புபவர் பெயர்:.............................................

விலாசம்:.............................................

.............................................

கையொப்பம்:.............................................

### மேலிருந்து கீழ்

1. உயிர் வாழ்க்கையின் வெளிப்பாடு
2. தகைமைத் தன்மை
3.தினசரி மாறுவது
4.சூரிய வம்சத்துக்கு இந்தக்குலம் என்றும் கூறுவர்.
5.கண்டது கற்க இவனாவான்
8.பெருக்கல் குறி
10. நகரம்
11. எரிந்தால் மிஞ்சுவது
12.காட்டுவிலங்கு சாதுவானது.
13. வேலன்.
14. பலவந்தமாக செய்வது
15. ஊர்வன வகை விலங்கு
16.தொடக்கமே குறிப்பிட முடியாதது.
17.நேரத்துடன் தொடர்புடையது.
19.பல அல்ல.
20.செய்.

### இடமிருந்து வலம்

1. போராட்டம் இதற்கு
6.உடற் தோற்றம்
7. பாடகன்
8. குளிர்மைத்தன்மை
9. கணவன்- மனைவி
11. காட்டு விலங்கு
12.மழைக்காலம்
13.வலது குறைந்தவன்
15.உனது
16. சூரியன்
17.வனம்
18. பாம்பு ரகம்
19.காலில் அணியும் ஆபரணம்
21.சாப்பிடு
22.இது கடலில் இருப்பது

### சொற்சிலம்பம் போட்டி இல. 457

*சொற்சிலம்பம் 457 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2011 ஆண்டு மார்ச் 06 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஆகியன மார்ச் 13 ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.*

*முதலாவது பரிசாக ரூபா 250 உம், இரண்டாவது பரிசாக ரூபா 150 உம், மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.*

*அனுப்பவேண்டிய முகவரிகள்:*

**சுடர் ஒளி,**
**85, ஜெயந்த மல்லி மராச்சி மாவத்தை,**
**கொழும்பு-14.**

**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## சொற்சிலம்பம் போட்டி இல.454 விடைகள்

### மேலிருந்து கீழ்

1.சமத்துவம் 2.கரு 3.வாங்கல் 4.சகுனி 5.சதி 6.கர்வம் 8.சல்லாபம் 10.தவி 12.கிலி 14.சனி 16.புதிய 18.பதில் 19.கம்பி 20.கன்னி 21.மதி 22.ஊதா

### இடமிருந்து வலம்

1.சகவாசம் 5.சக 7.மருங்கு 8.சதிர் 9.கனிதல் 11.துகில் 13.விலாசம் 15.வலி 17.பனி 18.பதிகம் 21.மதியம் 22.ஊன் 23.மதில் 24.பிரதானி

### போட்டி இல. 454 இல் பரிசு பெற்றோர்

**1 ஆம் பரிசு** — **ச.சொர்ணமலர்,** இல17/B, மன்னார் வீதி, வவுனியா.

**2 ஆம் பரிசு** — **கவிதா. நவகுலன்,** இல 1010/21,கே.கே.எஸ்.வீதி, அரசடி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

**3 ஆம் பரிசு** — **வா.தேனுஜா,** இல.703, யோகபுரம், மல்லாவி.

### பாராட்டுப் பெறுவோர்

(1) **ஆர்.குழந்தைவேலு,**
காளிகோவில் தெற்கு வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்

(2) **திருமதி.ஷர்மிலா துஷ்யந்தன்,**
பூம்பொழில் 1001,
திருநகர் தெற்கு, கிளிநொச்சி.

(3) **சி.பாலசுந்தரம்,**
கல்வளை, சண்டிலிப்பாய்.

(4) **ம.தில்லைநாதன்,**
சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி.

(5) **பா.நிரஞ்சனா,**
2 ஆம் பகுதி,
அனிஞ்சியன் குளம்.




**அ.அபர்ணா**
**யாழ்ப்பாணம்**

கேள்வி: குட்டிக்கதை சொல்லி அர்த்தம் புரிய வைப்பதில் நீர் வல்லவராமே? எங்கே, ஒரு குட்டிக்கதை அவிழ்த்து விடும் பார்ப்போம்?

பதில்:இதோ தந்தேன்.

கதையின் தலைப்பு; விபத்து.

டொக்-டிக்-டக்.

கதை முடிந்தது.புரிய வையுங்கள் என்கிறீரா?

அண்மையில் ஒரு ஞாயிற்றுக்கிழமை நண்பர்களுடன் வெளியில் சென்றுவிட்டு இருட்டும் நேரம் வீடு திரும்புகிறேன். வழமைபோல் நல்ல 'மப்பு'த்தான்.

டொக்:-வாசல் கதவை தட்டுகிறேன்.

டிக்:-வழமைபோல் வாசல் கதவு அரைகுறையாகத் திறக்கப்பட்டது. இப்படிப்பட்ட வேளைகளில் மனைவியின் கன்னத்தை மெல்லத்தடவி, அசட்டுச் சிரிப்புச் சிரித்து சமாளிப்பது எனது வழக்கம். அன்று நடந்ததும் அதுதான்.

டக்:-ஒரு பயங்கர உதை விழுந்தது. எதிர்பார்க்கவே இல்லை. வீட்டு 'ஹுட்'டிற்குள் போய் விழுந்தேன். நாரி எலும்பு பிசகி ஒரு வாரம் ஆஸ்பத் திரியில் இருக்க நேர்ந்தது. நான் கண்டேனா கதவைத் திறந்து விட்டது மாமி தான் என்று?

**வே.சுபன்**
**காரைநகர்**

கேள்வி: காதலித்துத் தோல்வியுற்ற எனக்கு ஒருவழி கூறுங்களேன். பீளீஸ்...!

பதில்:ஒரு பஸ்ஸைத் தவறவிட்டால் அடுத்த பஸ்ஸுக்குப் பார்த்திருங்களேன்.

**வே.இளவரசி,**
**பருத்தித்துறை.**

கேள்வி:ஆண்கள் அவசரக்காரர்களா பித்தரே?

பதில்:அவசரக்காரர்களுக்குப் புத்தி மட்டு என்பது முதுமொழி. பலர் அவசரப்பட்டுக் கட்டியபின் முழிப்பதைப் பார்க்கும் போது அது சரிதான் என்று தோன்றுகிறது.

**இளங்கோ,**
**வேப்பங்குளம், வவுனியா.**

கேள்வி:சத்திரசிகிச்சை செய்யும் போது டாக்டருக்குப் பயம் இருக்காதா பித்தரே?

பதில்:பயப்பட வேண்டியது டாக்டர் அல்ல; நோயாளியல்லவா?

**அன்பரசு,**
**புதுக்குடியிருப்பு**

கேள்வி : கணவன் ஊர்சுற்றியாக இருந்தால்?

பதில்:வீட்டில் அடுப்பு எரியாது.

**மைதிலி,**
**கோண்டாவில்.**

கேள்வி:பரதநாட்டியக்காரியைக் காதலிக்கலாமா?

பதில்:காதலிக்கலாம் ஆனால் அவளது நாட்டியத்துக்கு நீர் நட்டுவாங்கம் போடவேண்டி இருக்குமே!

**த.வசந்தமல்லிகா,**
**யாழ்ப்பாணம்.**

கேள்வி:தலை நரைத்தாலும் பலருக்கு ஆசை நரைப்பதில்லையே? ஏன்?

பதில்:தலை நரைத்தவர்கள் எல்லோரும் கிழவர்களா?

**ஓங்காரமூர்த்தி,**
**பளை.**

கேள்வி:அர்ச்சனை, வரதட்சணை. ஒப்பிடும் பார்க்கலாம்?

பதில்:வரதட்சணையுடன் வந்த அம்மணியிடம் நீர் தினமும் அர்ச்சனை வாங்கிக் கட்டுகிறீர் போலும்.

**அ.அற்புதமூர்த்தி,**
**மட்டக்களப்பு.**

கேள்வி:மனைவியின் தொல்லை தாங்க முடியவில்லை. பேசாமல் சன்னியாசம் வாங்கிக் கொள்ளலாம் என நினைக்கிறேன். நல்ல நாள் குறித்துத் தருவீரா பித்தரே?

பதில்:ஞானிக்கு இல்லை; ஞாயிறும் திங்களும். நன்றே செய் : அதை இன்றே செய்.

**என்.வனிதா, யாழ்ப்பாணம்.**

கேள்வி:தேங்காய் விலை எப்போது விழும்?

பதில்:தேங்காய்கள் அதிகம் விழும் போது.

**எல்.மதியழகன்,**
**பண்டத்தரிப்பு.**

கேள்வி : களவு என்ற சொல்லுக்கு இரண்டு பொருள் இருக்கின்றதாமே?

பதில்:ஒன்று திருட்டு. மற்றையது, தலைவன் தலைவி களவாகச் சந்திப்பது. யாழ்ப்பாணத்தில் இன்று இந்த இரண்டும் கொடிகட்டிப்பறக்கின்றன.

**எம்.சீலன்,**
**வவுனியா.**

கேள்வி:திருமணமான பெண்கள் கணவனுக்கு மந்திரியாக இருக்கவேண்டும் என்கிறார்களே?

பதில்:இங்கு எதிர்க்கட்சித் தலைவி போலல்லவா இருக்கின்றார்கள்?

**என்.வதனி,**
**மட்டுவில்.**

கேள்வி: வெங்காயத்தில் மருத்துவக் குணம் உள்ளதாமே?

பதில்:சந்தைக்குப் போனால் வெங்காயத்தையே மறக்கும் குணமல்லவா வருகிறது.



சிறுகதை

# கூடு



"எனக்கிந்தக் கலியாணத்தில முழுச்சம்மதம்'' அவள் லண்டனுக் கேத்த பிள்ளை! உங்கட வீட்டுக் காரருக்கு நல்லாய்ப்பிடிச்சிட்டுது. சொன்னமாதிரி குறிப்பும் நல்லபொருத்தம்! என்ன, கொஞ்சம் கஷ்டப்பட்ட குடும்பம்... லண்டனிலை இருந்து வந்த உமக்குக் காசு முக்கியமே? படமிருக்குது .. பார்த்துச் சொன்னீரெண்டால் மற்ற அலுவலைப் பார்க்கலாம்''... அவசரமாய் வேலுப்பிள்ளை சைக்கிளில் வந்திறங்கினார்.

'அண்ணை, குறைநினைக்கக் கூடாது. எனக்குக் கலியாணம் செய்யிற நோக்கமில்லை!''

''என்ன தம்பி இது? அப்பர் ஒற்றைக்காலில நிக்கிறார். கெதியாய் எங்காவது ஒண்டைப் பொருத்திவிடு. லண்டன் போறதுக்கு முன்னாடி முடிச்சு வைச்சிடுவம் என்கிறார்.''

''நான் கலியாணம் செய்யமாட்டன்... என்ர யோசினை வேற.. அப்பாட்டைச் சொல்லிட் டன்... நீங்களும் சொல்லுங்கோ!''

''ஐயோ! கலியாண வயதுப் பெடியன் இப்படிச் சொல்லக்கூடாது!'' ஏமாற்றத்துடன் வேலுப்பிள்ளை நகர்ந்தார்.

''ஏன் உனக்கு கலியாணம் வேண்டாம்? என்னை இனியாவது கொஞ்சம் நிம்மதியாய் இருக்கவிட மாட்டியா?''

''ஏன்? நான் கலியாணம் வேண்டாமெண்டா விடுங்கோவன். அதனால் உங்கட நிம்மதிக்கென்ன கேடு வந்தது?''

''மோகன் ! நீ சொல்லுவாய்... சொல்லு! பரவாயில்லை.. உன்னை லண்டனுக்கு அனுப்பிப்போட்டு இஞ்ச நான் பட்ட வேதனை உனக்கு விளங்காது. அங்க நீ குளிரி லையும், வெயிலிலையும் உழைச்சு... ஒரு தகப்பன் நான் செய்ய வேண்டிய வேலை, பொறுப்புக்களைச் செய்தாய். நாங்கள் இஞ்ச சந்தோஷமாக இருக்க .. நீ கண்காணாத தேசத் தில.. உறவில்லாமல்... தனிமரமாய் உழைச்சு... உழைச்சு இந்தக் குடும்பத்தைக் காப்பாற்றினாய்! நன்மையோ... தீமையோ.. ஒன்றும் தெரியாமல்... சரியோ.. ஊர் என்ன சொல்லும்? இவ்வளவு காலமும் உன்ர உழைப்பை உறிஞ்சிவிட்டு.. இன்னமும் ஒண்டும் செய்யாமல் நிக்கிறமெண்டு தூற்றும்! இப்பதானே கேட்கிறம்? இப்ப எல்லாப் பொறுப்பும் முடிஞ்ச பிறகு தானே.. கலியாணம் கட்டு எண்டு கேட்கிறம்... உன்ர கலி யாணம் காணாமல் இந்தக் கட்டை வேகாது!'' ஆத் திரமும் வேகமு மாய் தொடங்கி, அமைதியாகி... விசும்பினார் அப்பா.

''உனக்கேதும் விருப்பமிருக்குது என்டால் சொல்லு! வெள்ளைக்காரி யெண்டாலும் செய்து வைக்கிறம். எங்கட குடும்பத்துக்காய் எவ்வளவு கஷ்டத்தை அனுபவிச்சனி... உன்ர வாழ்க்கையை நீயோசிக்கேல்லை... ஆனா நாங்கள் யோசிக்கிறம்... அண்ணா!''. தங்கையின் கையிலுள்ள குழந்தை அவள் அழுவதை விநோதமாய்ப் பார்த்தது.

> " நான் என்ன செய்வன் மச்சான்... என்னால அழாமல் இருக்கேலாது.. சொன்னால் கேக்கிறாளில்ல. பதினாலு வயது மகள் இப்பவே குடியும் கும்மாளமும்...."

''மோகன் நீ ஒரு முட்டாள். முதல்ல கலியாணம் வேண்டாம் என்கிறாய்? அதுவும் லண்டனை விட்டுட்டு வரப்போறனெண்டு?. முட்டாள். அவனவன் எங்கை ஓடித் தப்பலாமெண்டு தவங்கிடக்கி றாங்கள்... இருபது வருஷமாயிருந்து சிற்றிசனெடுத்தாப்பிறகு.. இஞ்ச வாறதெண்டா..? என்ன அறுப்பெடா இஞ்ச இருக்கு? மனிசனின்ர உயிருக்கு மரியாதை இருக்கோ?''

''என்னத்துக்குப் போனனோ அந்த அலுவல் முடிஞ்சிட்டுது!''

''உண்மை தான், எங்கட குடும்பத்த ஒப்பேற்றி முடிச் சிட்டாய், இனி மேலாவது நீ உன்னைப் பாரடா! வேலுப்பிள்ளையன் சொன்ன பெட்டை யை கட்டிக்கொண்டு லண்டனுக்கு ஓடியிடு. இது மனுசன் வாழுற ஊரில்ல!

அண்ணா இனி லண்டன் போக மாட்டியே?.. உனக்கென்ன விசரே? என்ர பிரண்ட் மெடிக்கல் பக்கல்ரி செகண்ட் இயர் படிச்சவன். நாளைக்கு டொக்டர்.. அவனோ இந்த நாடும் வேண்டாம்.. டொக்டர் படிப் பும் வேண்டாமெண்டு வெளிநாடு ஓடிட்டான்.. நீ என்னடா எண்டால்!

★★★

பொதுவாக.. முதல்ல கோயில் குளத்தில பொம்பிள பார்த்திட்டுத் தான் பொம்பிள வீட்ட வருவினம். நீங்கள் திடுமென வாறம் என்றவு டன் உதறலாய்ப் போச்சு. பர வாயில்லை.. தம்பி லண்டனில் கனகாலம் இருந்ததால அங்கத் தேல் வழக்கமாய் இருக்கும். பிள் ளைக்கும் நல்ல விருப்பம்'' .. பெண் ணின் தகப்பன் பூரிப்புடன் பேசினார்.

பெண் வீட்டார் பதறியபடி உபசரித்தார்கள்.

'' எனக்கு அடுத்த கிழமை செகண்ட செமிஸ்டர் எல்லாம் இருக்கு. அது முடிய எழுத்தை வைக்கலாமெண்டு அப்பா சொன் னார்.. எழுத்தையும், கலியாணத் தையும் ஒண்டாய் வைக்கிறதா...? தனித்தனியா வைக்கிறதா...? வெட்கத்துடன் அவள்.....

''........................................''

'' நீங்கள் அதிகம் கதைக்க மாட்டியள்போல... லண்டனிலை இருந்து வந்தவர் போல இல்ல.. சிம்பிளாய் இருக்கிறீயள்! யாழ்ப்பாணமே மாறிட்டது....''

'' மோகன் நான் சாகப்போறன்.. லண்டன் கேர்ள்ஸ் சரியில்லயெண்டு யாழ்ப்பாணத்தில கட்டிக்கொண்டு வந்தன். அவளும் ஆடுறாள்.. இப்ப அவங்களோட திரியிறாள். கேட்டால் சண்டை.. நான் சரியில்லையாம்.. என்ரை உழைப்புக் காணாதாம்..நான் என்னடா செய் வேன்? உணவு விடுதியில் கதறிய நண்பன் நினைவுக்கு வந்தான்.

'' எனக்கு வெளிநாட்டு மாப்பிள்ளை தான் வேணு மென்று அப்பாட்ட சொல்லிட்டன்.. லண்டன், கனடா தான் விருப் பம். பிள்ளைகளை நல்லாய்ப் படிப்பிக்கலாம். இங்கிலீசில் பேச வைக்கலாம்! எங்கட கலியாணத் திற்கு உங்கட வெள்ளைக் கார பிரண்ட்ஸ் வருவினமா? வந்தால் கம்பசில எனக்கு மதிப்பாக இருக்கும்! என்னோட பிரண்டின் அண்ண னின் கலியாணத்திற்கு அவரின் வெள் ளைக்கார பிரண்ட்ஸ் எல்லாரும் வந்தவை.. கம்பசே திகைச்சிட்டுது.''

'' நான் என்ன செய்வன் மச்சான்.. என்னால அழாமல் இருக் கேலாது. சொன்னால் கேட் கிறாளில்ல. பதினாலு வயசு மகள். இப்பவே குடியும் கும்மாளமும். இரவில் வெள்ளைக்காரன்ரை தோளில கைபோட்டுக் கொண்டு தள்ளாடிக் கொண்டு வாறாள். கண் றாவியைப் பார்க்கேலாது!.. வெறும் காசும் வசதியும் தானா, வாழ்க்கை? லண்டன் வெறுத்துப் போச்சு..'' மீண்டும் இன்னொரு நண்பனின் வெறுப்பான பேச்சு நினைவு.

'' நான் இனித் திரும்ப லண்டன் போகமாட்டன்! இஞ்சதான் தோட் டமோ துரவோ...சின்னதோ பெரிதோ ஒரு வேலை தேடிக் கொண்டு இருக் கப் போறன்?''

'' நான் இந்த கலியாணத்திற்கு சம்மதிச்சதே நீங்கள் லண்டனெண்டு தானே?''

'' லண்ட னில் எங்கட ஆட்கள் செய் யிற வேலை.....''

''வேலை எதேண்டாலும் நல்ல உழைப்புத்தானே? வசதிதானே?''

'' என்னமோ... இனி நான் போக மாட்டேன்.. சொந்த ஊரிதான் மதிப்பு, மரியாதை, நிம்மதியெல் லாம்!''

''எனக்கு இந்தக் கலியாணத்தில விருப்பமில்ல... !'' வெறுப்போடு சொன்னாள் அவள்.

தி.மயூரன்

# அதிகாரம் இல்லாத பிரதேச சபைக்கு அங்கலாய்க்கும் தலைமைகள்



மலையகத்தில் இப்பொழுது தேர்தல் பிரசாரங்கள் சூடுபிடித்து விட்டது. மலையக தொழிற்சங்கத் தலைமைகளுடன் பெரும்பான்மை அரசியல் கட்சிகளின் தலைவர்களும் மலையகத்தில் கூடாரம் அடித்துள்ளனர்.

பொது இடங்களில் போஸ்டர் ஒட்டக்கூடாது; கட்அவுட் வைக்கக் கூடாது என தேர்தல் ஆணையாளர் கண்டிப்பான உத்தரவுகளைப் பிறப்பித்துள்ள போதும் மலையக நகரங்களின் பெயர்ப் பலகைகளைக் கூடவிட்டு வைக்கவில்லை. எல்லாம் போஸ்டர் மயம்.

தோட்டப்புறங்களில் தொழிலாளர்களின் குடியிருப்புகள், கோயில்கள் மற்றும் பாடசாலை மதில்கள் இன்னும் சொல்லப்போனால் மலசலகூடச் சுவர்களிலும் கூட மலையகத் தலைவர்கள் போஸ்டர் வடிவில் சிரித்துக் கொண்டிருக்கின்றனர்.

போஸ்டர் ஒட்டுவதிலும் துண்டுப் பிரசுரங்களை விநியோகிப்பதிலும் தொண்டர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள போட்டா போட்டிகளால் ஆங்காங்கே பல மோதல்களும் இடம்பெற்றுள்ளன.

இதுவரை காலமும் ஆயிரம் பேருக்குக் குறைவான கூட்டம் என்றால் இடைநடுவில் திரும்பிப் போய்விடும் பெருந் தலைவர்கள், இன்று ஐம்பது பேர் என்றாலும் போய் மக்களைச் சந்தித்து வேண்டா வெறுப்பாகவாவது பல்லைக் காட்டிவிட்டு வருகின்றனர். போஸ்டர் இன்றி மேடைகள் இன்றி மலையகத்தில் தடம்பதித்துள்ள புதுவரவுகளினால் பெரும் தலைவர்கள் மத்தியில் இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஆரம்பத்திலேயே இந்தத் தலைமைகள் இப்படி நடத்திருந்தால் இன்று மலையகத்தில் இத்தனை பிரிவுகள் ஏற்பட்டிருக்காது.

இரா.புத்திரசிகாமணி

முன்பு மாவட்ட அபிவிருத்திச் சபைகள் பின்னர் மாகாண சபைகள், மாநகர சபைகள், நகரசபைகள், பிரதேச சபைகள் என்பனவற்றின் வெற்றியைத் தீர்மானிப்பது தோட்டத் தொழிலாளர்களின் வாக்குகள் தான்.

என்ன கொடுமை பாருங்கள். இந்த அப்பாவிகளான தோட்டத் தொழிலாளர்கள் தமது தலைவர்களின் வெற்றியை உறுதிப்படுத்தும் , வாக்களிக்கும் இயந்திரங்களாக மட்டுமே பயன்படுத்தப்படுகின்றனர். ஆனால் இந்த உள்ளூராட்சிச் சபைகளினால் தோட்டத் தொழிலாளர்களுக்கு எந்தவிதமான நன்மையும் இல்லை.

எங்கள் கட்சியின் தலைவர்தான் பிரதேசசபைத் தலைவராகிவிட்டார். எங்கள் கட்சி நகரசபையைக் கைப்பற்றிவிட்டது என்று பெருமை அடித்துக் கொள்ளும் உரிமை இவர்களுக்குரியது. இவர்களால் பதவிக்கு அனுப்பப்பட்டவர்களிடமிருந்து எந்த உதவிகளையும் பெறமுடியாது.

அது அவர்களுடைய தவறு அல்ல. ஏனென்றால் பிரதேச சபை நிதியில் , தோட்டங்களுக்கு ஒரு சதத்தைக் கூடச் செலவிடமுடியாது. நமது வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டவர்கள், நிதியில் தோட்டங்களை ஊடறுத்துச் செல்லும் பாதைகளை அமைக்கலாம். ஆனால் ஒரு தோட்டத்திற்குப் பாதை போடமுடியாது. நமது மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற ஆர்வத்துடன் செயற்பட்ட பிரதேச சபை உறுப்பினர்கள் அதிகார துஷ்பிரயோகம், சட்டத்திற்கு முரணான வகையில் செயல்பட்டனர் என சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டுள்ளனர்.

இதுவரை காலமும் ஆயிரம் பேருக்குக் குறைவான கூட்டம் என்றால் இடைநடுவில் திரும்பிப் போய்விடும் பெருந் தலைவர்கள், இன்று ஐம்பது பேர் என்றாலும் போய் மக்களைச் சந்தித்து வேண்டா வெறுப்பாகவாவது பல்லைக் காட்டிவிட்டு வருகின்றனர்.

மத்திய மாகாணத்தில் கூட பலாத்த என்ற பிரதேச சபை, மாகாண முதல் அமைச்சர்களினால் கலைக்கப்பட்டுள்ளதையும் இங்கு சுட்டிக் காட்டவேண்டியது கட்டாயமாகிவிட்டது.

இப்பொழுது பிரதேச சபைகள், கிராமங்கள் தோறும் முன்பள்ளிகளையும் , வாசிகசாலைகளையும் கலாசார மண்டபங்களையும் அமைத்து வருகின்றன.

ஆனால் தோட்ட மக்களினால் உருவாக்கப்பட்ட பிரதேச சபையால் தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கான முன்பள்ளிகளையோ வாசிக சாலைகளையோ அமைக்க முடியாது. அதற்கு அதிகாரமும் இல்லை. மாகாண சபைகளின் கட்டுப்பாட்டில் இயங்கும் இந்தப் பிரதேச சபைகளினால் சுதந்திரமாக எதையும் செய்யமுடியாது.

இதற்குக் கூறப்படும் ஒரே காரணம் தோட்டத் தொழிலாளர்கள் பிரதேசசபைக்கு வரி செலுத்துபவர்கள் அல்ல என்பது தான்.

இன்றுவரை மலையகத் தலைமைகள் இதனை வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்கின்றனவேயன்றி இது குறித்துத் தட்டிக் கேட்க அவர்களுக்குத் துணிவு இல்லை.

பிரதேச சபைகளுக்கு வரி செலுத்தவில்லை என்று ஒரம்கட்டப்படும் தோட்டத் தொழிலாளர்கள்தான் இந்த நாட்டின் தேசிய வருமானத்தில் பெரும் பங்கை வகிக்கும் தேயிலையையும் இறப்பரையும் உற்பத்தி செய்கின்றனர் என்பதைப் இவர்கள் மறந்து விட்டனரா?

யுத்த காலத்தில் நாட்டைக் காக்கும் நிதி என்ற பெயரில் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தில் பணம் கழிக்கப்படவில்லையா?

தோட்டத் தொழிலாளர்கள் மின்சாரக் கட்டணத்தையும் , குடிநீர் கட்டணத்தையும் இந்தப் பிரதேச சபைகளுக்குத் தானே செலுத்துகின்றனர். தோட்டத்தொழிலாளர்களிடமிருந்து எதையெதை எல்லாம் எடுத்துக் கொள்ளமட்டும் முடியுமோ அவற்றையெல்லாம் எடுத்துக்கொள்ள முடியும். ஆனால் அத்தோட்ட மக்களுக்காக எதையும் செய்ய மட்டும் சட்டத்தில் இடமில்லை.

உழைக்கும் தொழிலாளர்கள் இப்படி ஒதுக்கப்படுவது அநீதி மட்டுமல்ல கொடுமையிலும் கொடுமை.

வெளிமாவட்டங்களிலும், வெளிமாகாணங்களிலும் வாழ்பவர்களுக்கு இந்தச் செய்தி பெரும் ஆச்சரியத்தைக் கொடுக்கலாம். ஆனால் அது தான் உண்மை.

இவர்களின் வாக்குகளினாலும் சந்தாப்பணத்தினாலும் சுகபோகம் அனுபவிக்கும் மலையகத் தலைமைகள் இதுவரை இதைப்பற்றிச் சிந்தித்தது உண்டா?

பிரதேச சபைகளுக்குக் கூடுதலான அதிகாரம் வழங்கப்படவேண்டும். இதன் சேவையில் தோட்டங்களும் உள்ளடக்கப்பட வேண்டும் என்று எங்காவது எவராவது குரல் கொடுத்துள்ளனரா?

உண்மை இப்படி இருக்க, தோட்டத் தொழிலாளர்களுக்கு எந்தவிதமான சேவையும் செய்யமுடியாத பிரதேச சபைகளுக்கு தோட்டத் தொழிலாளர்களின் வாக்குகள் மட்டும் தேவையா?

தோட்டத் தொழிலாளர்களுக்கு இன்னும் இந்த உண்மை தெரியவில்லை. தெளிவுபடுத்தப்படவும் இல்லை. தொழிலாளர்கள் தொடர்ந்தும் தமது தலைமைகளினால் ஏமாற்றப்படுபவர்களாகவே இருக்கின்றனர். இவர்களுக்கு எப்போது விமோசனம் கிடைக்கும். இது விடை காணப்படாத கேள்வியாகவே இருக்கின்றது. ✱



# ரணில் ஒரு நயவஞ்சகர்

## ரங்கா சீற்றம்



**த**ண்டனைக்குரிய குற்றச்செயல்களுடன் நேரடியாகத் தொடர்புடையவர்கள் அரச பாதுகாப்புடன் சுதந்திரமாக நடமாடுகின்றனர். அதேவேளை வெறும் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட தமிழ் இளைஞர் யுவதிகள் காலவரையறையின்றிச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்படவேண்டும் அல்லது இவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவேண்டும். இந்த விடயத்தில் அரசு அசமந்தப் போக்கைக் காட்டுகிறது. அரசின் நடவடிக்கைகளும் ஆமை வேகத்திலேயே இருக்கின்றன என்றும் அரசின் மீது குற்றம் சாட்டுகின்றார் அவர்.

யானைச் சின்னத்தில் போட்டியிட்டு வென்ற பின் அரசுடன் இணைந்து செயல்படுகின்றார் என்று பலராலும் பேசப்படும் இவ்வேளையிலேயே ஸ்ரீ ரங்கா அரசுக்கு எதிராக இப்படிக் கை நீட்டுகின்றார்.

கண்டு கேட்டு எழுதியவர்
இரா.புத்திரசிகாமணி

"சுடர் ஒளி" வார மலருக்கு அளித்த விசேட பேட்டி ஒன்றின் போதே இதனை அவர் வெளிப்படுத்தினார்.

*உங்களுக்கு நாடாளுமன்ற அறிமுகம் கொடுத்த ஐக்கிய தேசியக் கட்சியைத் தூக்கி எறிந்து விட்டீர்களே ஏன்?*

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குள்ளநரித் தந்திரம் கொண்ட ஒரு நயவஞ்சகத் தலைவர். தனது தேவைகளுக்காகத் தமிழர்களைப் பயன்படுத்திவிட்டு கறிவேப்பிலை போல் தூக்கி எறிந்து விடுவார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் ஒருபக்கம் சமாதானப் பேச்சு என்று பம்மாத்துக் காட்டிக் கொண்டு மறுபக்கம் இயக்கத்தை இரண்டாகப் பிரிக்கச் சதி செய்து முதுகில் குத்தியவர்தானே அவர். இப்படியான பல காரணங்களால்தான் அவரைத் தூக்கி எறியவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

*ஊடகவியலாளர்கள் அரசியல் கலப்பின்றி இருக்க வேண்டும். நீங்களோ நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கிறீர்கள். இது நியாயமானதா?*

ஏன்...? ஊடகவியலாளர்கள் அரசியலில் ஈடுபடக்கூடாதா? சிங்கள ஊடகவியலாளர்களான புத்திக மனுஷ நாணயக்கார ரோஷிஹர்ஷா டலஸ் அளகப் பெரும என இப்படிப் பல ஊடகவியலாளர்கள் அரசியல் பிரவேசம் செய்துள்ளபோது நான் அரசியலில் ஈடுபட்டதில் என்னதவறு?

*உங்கள் அரசியலுக்கு அடித்தளம் இடும் வகையில்தான் மின்னல் தொலைக்காட்சி நிகழ்ச்சியை நடத்தினீர்கள் என்று குற்றஞ்சாட்டினால்...?*

இதற்கு முன்னர் எந்த மொழி ஊடகவியலாளர்களும் செய்யாததையா நான் செய்துவிட்டேன்?

இலங்கை ஜனாதிபதிகள், பிரதமர்கள், எதிர்க்கட்சி, ஆளும்கட்சித் தலைவர்கள், தமிழ் முஸ்லீம் தலைவர்கள் மட்டுமன்றி இந்தியப் பிரதமர் உட்பட பல உலகத் தலைவர்களையும் 'மின்னல்' நிகழ்ச்சியின் ஊடாக மக்கள் முன் கொண்டு வந்துள்ளேன். இது தமிழ் ஊடகத்துறைக்கு கிடைத்த ஒரு பெருமை.

*மின்னல்* நிகழ்ச்சி தனிப்பட்ட முறையில் என்னுடைய அரசியல் பிரவேசத்திற்காகப் பயன்படுத்தப்படவில்லை.

*அரசின் ஆலோசனையின் பேரில் தான் நீங்கள் கடந்த தேர்தலில் போட்டியிட்டீர்கள்; தமிழ் மக்களின் வாக்குகளைப் பிரிப்பதற்காகவே நுவரெலியாவைத் தேர்வு செய்தீர்கள் என்று சொல்லப்படுகிறது. இது உண்மையா பொய்யா?*

தவறு. நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் ஒன்று அறிவிக்கப்படுவதற்கு முன்னரே நான் மலையக மக்களை நேரடியாகச் சென்று சந்தித்தவன்; ஆதரவைப் பெற்றவன்.

எனது ஆதரவாளர்களின் வேண்டுகோளின் பேரிலேயே நுவரெலியாவில் தனித்துப் போட்டியிடுவதற்கு ஆயத்தங்களைச் செய்தோம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ரணில் விக்கிரமசிங்க ஒரு உடன்பாட்டுக்கு வந்தார். ரங்கா தனித்துப் போட்டியிட்டால் ஐ.தே.கவுக்கு கிடைக்கும் தமிழ் வாக்குகள் கிடைக்காமல் போய்விடும் என்பதால் என்னிடம் வந்தார். நான் தனித்து நின்றால் மற்றைய அணியினர் வெற்றி பெற்றுவிடுவர் என்று அவர் கருதினார்.

நுவரெலியா, பதுளை, கண்டி, கொழும்பு மாவட்டங்களில் தலா ஒரு வேட்பாளரை எமது கட்சியின் சார்பில் நிறுத்தவும் இணங்கினார். ஆனால் நான் நுவரெலியாவில் கையெழுத்திட்ட மறுநிமிடம் அந்த வாக்குறுதிகள் காற்றில் பறக்கவிடப்பட்டன. கொழும்பு, பதுளை, கண்டி மாவட்டங்களில் எங்கள் பிரஜைகள் முன்னணி வேட்பாளர் பெயர்களைப் பட்டியலில் இருந்து ரணில் வெட்டிவிட்டார். தேசியப் பட்டியலில் இடம் பெறவிருந்த மூன்று பேருக்குப் பதிலாக இரண்டு பேராக்கிவிட்டார்.

அவருடைய நோக்கம், என்மூலம் நுவரெலியா வாக்குகள் ஐ.தே.க.வுக்கு கிடைக்க வேண்டும் என்பது மட்டுமே. என்னைப் பயன்படுத்திக் கொண்டார் ரணில். அவ்வளவுதான்.

தேர்தலுக்கு முன்னரே ஐக்கிய தேசியக் கட்சியுடன் நிபந்தனைகளுடன் கூடிய எழுத்து மூல உடன்படிக்கை ஒன்றைச் செய்துள்ளோம். அதன்படி நாடாளுமன்றத்திலும் வெளியிலும் சுதந்திரமாகத் தனிக் கட்சியாகவே செயல்படுவோம். எம்மை ஐ.தே.க. கட்டுப்படுத்த முடியாது.

*நீங்கள் இப்படிச் சொன்னாலும் ஐ.தே.க. பட்டியலில் நுவரெலியா மாவட்டத்தில் ஒன்றாகப் போட்டியிட்ட ஏகாம்பரம் மற்றும் பிரபா கணேசனுடன் நீங்களும் ஒன்றாகத் தானே அரசு பக்கம் சாய்ந்தீர்கள்?*

இங்கேதான் எல்லோரும் தவறு விடுகின்றீர்கள். அவர்கள் ஏதோ ஒரு எதிர்பார்ப்புடன் அரசின் பக்கம் போய் சேர்ந்து கொண்டவர்கள். நான் அப்படியல்லன்.

இன்றும் எதிர்க்கட்சியில் தான் இருக்கிறேன். அவசரகாலச் சட்டத்துக்கு எதிராக வாக்களிக்கிறேன். 18ஆவது அரசமைப்பு திருத்தத்திற்கு, எனக்கு வாக்களித்த மக்களின் அனுமதியுடனேயே ஆதரவாகக் கதைத்தேன். அதற்கும் காரணம் உண்டு. நான் எதிர்த்து வாக்களித்திருந்தால் நான் ஹீரோவாகி இருக்கலாம். ஆனால் மக்கள் பெறும் பிரதிபலன்கள் ஸீரோவாகி இருக்கும்.

*உங்களுடைய பிரஜைகள் முன்னணிக்கு நான்கு இடங்களைத் தருவதாக ஐ.தே.க ஒப்புக்கொண்டபோதும் நீங்கள் போட்டியிட நுவரெலியா மாவட்டத்தைக் குறிப்பாகத் தெரிவு செய்ததற்கான காரணம் என்ன?*

> **ஏன் ஊடகவியலாளர்கள் அரசியலில் ஈடுபடக்கூடாதா? சிங்கள ஊடகவியலாளர்களான புத்திக மனுஷ நாணயக்கார ரோஷிஹர்ஷா டலஸ் அளகப் பெரும என இப்படிப் பல ஊடகவியலாளர்கள் அரசியல் பிரவேசம் செய்துள்ள போது நான் அரசியலில் ஈடுபட்டதில் என்னதவறு?**

நான் யாழ்ப்பாணத்தில் பிறந்து கொழும்பில் வாழ்ந்தவன். தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும், பிரிவினைவாதம் ஒழிக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருப்பவன். மலையக மக்களின் வாழ்க்கை நிலையை நேரடியாகச் சென்று கண்டறிந்தவன். மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ள அவர்களின் அடிப்படை வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த ஏதாவது ஒரு வழியில் உதவவேண்டும் என்ற நோக்கத்தில் தான் நுவரெலியா மாவட்டத்தைத் தெரிவு செய்தேன்.

*அப்படியானால்... உங்களுக்கு முன்னால் வந்த மலையகத் தலைவர்கள் எதையுமே செய்யவில்லை என்று கூறுகின்றீர்கள்...?*

நான் அப்படிக் கூறவில்லை. எந்த ஒரு தலைவரையும் குறை கூறுவது எனது நோக்கம் அல்ல. பழக்கமும் அல்ல. யதார்த்தம் இதுதான். இலங்கையிலேயே வறுமைக்கோட்டின் கீழ் மிகவும் பின் தங்கிய மாவட்டமாக இருந்த அம்பாந்தோட்டை மாவட்டம் கடந்த நான்கு வருடங்களில் கொழும்பை விட முன்னேற்றம் கண்டுள்ளது. காரணம் அங்கு ஏற்பட்ட தலைமைத்துவ மாற்றம்.

இருநூறு வருட பழைமையான சரித்திரம் கண்டது மலையகம் என்கிறோம். நாம் என்ன செய்துள்ளோம்? ஒரு சமூகத்துக்கு அத்தியாவசியமான குடியிருப்பு வசதி, சுகாதார வசதி, கல்வி வசதி, மற்றும் தொழில் வாய்ப்பு, சத்துள்ள போஷாக்கு இவை எல்லாவற்றிலும் கீழ்மட்டத்திலேயே இருக்கின்றோம். ஆனால் போஷாக்கின்மை, குறைப் பிரசவம், இறப்பு விகிதம், தொற்று நோய் அபாயங்கள் அதிகரித்துள்ளன.

நாட்டுக்குத் தேவையான மின்சாரம் உற்பத்தியாவது மலைநாட்டில். நல்ல நீரை போத்தலில் அடைப்பதும் அங்குதான். ஆனால் மலையக மக்களுக்கு வெளிச்சமும் இல்லை. நல்லகுடி நீரும் கிடையாது.

*நீங்கள் சொல்வது சரி என்றே வைத்துக் கொள்வோம். மலையகத்தை முன்னேற்ற நீங்கள் என்னதான் திட்டம் வைத்திருக்கிறீர்கள்?*

தனி ஒருவனால் எல்லா விடயங்களையும் ஒரே இரவில் பூர்த்தி செய்துவிட முடியாது. ஒரு சமூதாயத்தின் வளர்ச்சியை அளவிடுவது அங்கு வாழும் கல்விமான்களின் எண்ணிக்கையை வைத்தே. எனவே முழு மூச்சாக கல்விப் பணியில் என்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளேன். நான் வந்த சில காலத்திற்குள் ஹீங்குராங்கெத, லூல் கத்துரா தோட்ட மக்கள் டவுனுக்கு வருவதனால் 15 மைல்கள் வரவேண்டும். இத் தோட்டச் சிறார்களின் நலன் கருதி அங்கு ஒன்பது லட்ச ரூபா செலவில் பாலர் பாடசாலை ஒன்றை அமைத்தேன். ஒலிபண்ட் தோட்டத்தில் ஆரம்ப பாடசாலை ஒன்று அமைக்கப் படுகிறது.

றம்பொட தமிழ் மகாவித்தியாலயத்திற்கு 30 லட்சம் ரூபா செலவில் கலாசார மண்டபம் ஒன்றை அமைத்துக் கொடுத்துள்ளேன். டவுனிலேயே இப்படியான மண்டபம் இல்லை என கொத்மலை பிரதேச செயலாளர் குறிப்பிட்டுள்ளார். இப் பிரதேசத்தில் 15 பாடசாலைகளைச் சேர்ந்த 300 ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களைக் வழங்கி உள்ளேன்.

நாம் கல்விக் கண்களை திறந்துவிட்டால் மலையகம் வளர்ச்சிப் பாதையில் செல்ல வாய்ப்பாக அமையும். இப்படி ஒவ்வொரு தலைவர்களும் ஒவ்வொரு துறையைப் பொறுப்புடன் அபிவிருத்தி செய்ய முன்வரவேண்டும். பிளாஸ்டிக் கதிரைகளை யும் பந்துகளையும் கொடுத்துவிட்டால் மலை

யகம் வளர்ச்சியடைந்து விடாது.

*சரி! மலையகத்தில் காலூன்ற உங்கள் கல்விப் பணியை ஆரம்பித்துவிட்டீர்கள் அடுத்தது உள்ளூராட்சித் தேர்தல்தானே? உங்கள் நுவரெலியா மாவட்டத்தில் இம்முறை ஏன் போட்டியிடாமல் முல்லைத்தீவுக்குப் போய்விட்டீர்கள்?*

எனது ஆதரவாளர்களின் ஆலோசனைக்கமைய மலையகத்தில் உள்ள எல்லா கட்சிகளையும் ஒன்றிணைத்து ஒரே அணியில் ஒரே சின்னத்தில் போட்டியிடுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டேன்.

மலையக மக்கள் முன்னணி அரசியல் பிரிவுத் தலைவர் வி.இராதகிருஷ்ணனுடன் பலமுறை பேசினேன். அவரும் சதாசிவம், மனோகணேசன் போன்றவர்களும் இதனை வரவேற்றனர். ஆனால் திகாம்பரம் மட்டும் என்னை இணைத்துக் கொண்டு கூட்டு அமைப்பதை கடுமையாக எதிர்த்தார்.

நான் நுவரெலியாவில் கால் வைத்தவுடன் மாகாண சபைத் தேர்தலில் ஆகக் கூடுதலான வாக்குகளைப் பெற்று முன்னணியில் இருந்த வாக்கு வங்கி சரித்து விட்டது. நான் வந்தால் தான் இல்லாமல் போய்விடுவோமோ என்று ஆள் பயந்தே போய்விட்டார். அதுதான் எதிர்க்கிறார்.

இப்பொழுது கூட மலையக மக்கள் முன்னணியின் கூட்டணியில் போட்டியிட்டாலும் ஒரே சின்னமாக மண் வெட்டியில் போட்டியிடவில்லை. மன்னாரில் உள்ள ரிஷாத்பதியுதீனின் மயில் சின்னத்தை இரவில் வாங்கிப் போட்டியிடுகின்றார்.

தோழமைக் கட்சிகளை நம்பாதவர் எங்கோ உள்ளவரை நம்புகிறார். இப்படியான குத்து வெட்டுக்களால் தான் ஒரே கூட்டணி முயற்சி தோல்வியடைந்தது. இதற்கு மத்தியில் நாங்களும் தனித்துப் போட்டியிட்டால் மலையக வாக்குகள் மேலும் சிதைந்து போகும் என்ற 'நல்ல' சிந்தனையால் போட்டியில் இருந்து விலகிவிட்டோம்.

*உங்களுடைய தனிப்பட்ட செல்வாக்கை விரிவுபடுத்திக் கொள்வதற்காகவே 'மின்னலை'ப் பயன்படுத்தியது போல் வடக்கு கிழக்குப் பகுதியில் சுனாமி நிவாரணம், வெள்ள நிவாரணம் என்பவற்றையும் பயன்படுத்திக் கொண்டீர்கள். அதனால் வாக்குகள் கிடைக்கும் என்று நம்பித்தானே உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் முல்லைத்தீவு மாவட்டத்தில் களம் இறங்கி உள்ளீர்கள்?*

மின்னலைப் பயன்படுத்தித்தான் வந்தேன் என்றால் நான் கொழும்பிலோ அல்லது முஸ்லீம் மக்கள் செறிந்து வாழும் கிழக்கிலோ போட்டியிட்டிருந்தாலும் வெற்றி பெற்றிருக்க முடியும். நான் அரசியலுக்கு வரும் நோக்கம் இல்லாதபோதே ரணில் என்னைப் பிரதிமேயர் ஆக்குவதாகவும் அவர்களுடன் இணைந்து கொள்ளுமாறும் கேட்டார். அதனை நிராகரித்துவிட்டேன்.

மனிதாபிமானப் பணிகளுக்காகவே முல்லைத்தீவுக்கும் சென்றுள்ளேன்.

இன்று வெள்ளத்திலும் யுத்தத்திலும் பெரிதும் பாதிக்கப்பட்ட ஒரு பிரதேசம் முல்லைதீவு மாவட்டம். அவர்கள் இனி இழப்பதற்கு ஏதும் இல்லை. அதேவேளை 1956 முதல் 1983 வரை இடம்பெற்ற இன வன்முறைகளின் போது இரத்தினபுரி, பதுளை, கண்டி, நாவலப்பிட்டி ஆகிய பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்த மலையக மக்களும் அங்கே வாழ்ந்து வருகின்றனர். நான் ஏற்கனவே கூறியது போல் தமிழ் மக்கள் எந்த மூலையில் வாழ்ந்தாலும் வடக்கு, கிழக்கு மலையகம் என்ற பேதமின்றி தமிழ் பேசும் மக்களின் தேவை அறிந்து செயற்படுவது எனது கொள்கை. அதனால் தான் முல்லைத்தீவு மாவட்டத்தில் போட்டியிடுகின்றோம்.

*நீங்கள் இப்படிக் கூறுகின்றீர்கள். ஆனால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தனித்துவத்தையும் செல்வாக்கையும் மட்டுப்படுத்துவதற்காகத்தான் அரசு உங்களைப் பகடையாக்கி களம் இறக்கி, ஆதரவும் (திரை மறைவில்) வழங்கி வருவதாக ஒருகதை உலாவுகிறதே...?*

இதுவும் வெறும் விமர்சனம். உண்மை இல்லை. டக்ளஸ் தேவானந்தாவுக்கு எதிராக என்றால் யாழ். அல்லது கிளிநொச்சி மாவட்டத்தில் அல்லவா எமது வேட்பாளர்களை நிறுத்தி இருக்க வேண்டும். முல்லைத் தீவில் அரசும் போட்டியிடுகிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

*சரி அதைவிட்டு விடு வோம். ஜனாதிபதியுடனும் அவர்களுடைய வாரிசுகளுடனும் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டுள்ள நீங்கள் வடக்கு மக்கள் மத்தியில் காணப்படும் தமிழ்த்தேசிய உணர்வையும் ஒற்றுமையும் சீர்குலைக்கத் தான் வடக்கில் கால் வைக்கிறீர்கள் என்று பெரும் குற்றச் சாட்டு உண்டே அதற்கு என்ன சொல்வீர்கள்?*

நான் அரசியலுக்கு வரும் முன்னரே ஜனாதிபதியுடனும். பின்னர் அவரது சகோதரர் பசில் ராஜபக்ஷ, மகன் நாமல் ராஜபக்ஷ ஆகியோருடனும் தொடர்புளை வைத்துள்ளேன். அதேபோன்று எனது திருமணத்தின்போது ஐ.தே.கவினர்தான் முற்றுமுழுதாக முன்னின்று உதவினர். எல்லா அரசியல் கட்சிகளினதும் அறிமுகம் எனக்கு உண்டு. இதில் தவறு ஒன்றும் இல்லையே. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஜனாதிபதியையும் அமைச்சர்களையும் அடிக்கடி சந்திக்கின்றனர். தேனீர் அருந்துகின்றனர்.

அவர்கள் சந்திப்பதும் போவதும் தமிழ்த் தேசியம் நான் சந்தித்தால் பேசினால் துரோகமா? ஏன் ரணிலில் கூட அடிக்கடி போய் ஜனாதிபதியிடம் கோப்பி குடித்துவிட்டு வருகின்றார்தானே? இவர்கள் போய் பேசிவிட்டு வருகின்றனர். வேறு ஒன்றும் கிடையாது. ஆனால் நான் நாமல் மூலமாகப் பல விடயங்களைச் செய்கிறேன். நாமல் மூலமாக அபிவிருத்திப் பணிகளுக்கு அத்திவாரம் இடச் செய்துள்ளேன். முல்லைத் தீவுமக்கள் என்னிடம் கொடுத்த மனுக்களை ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்து பலரை விடுவித்துக் கொடுத்துள்ளேன்.

நான் நுவரெலியாவில் கால் வைத்தவுடன் மாகாண சபைத் தேர்தலில் ஆகக் கூடுதலான வாக்குகளைப் பெற்று முன்னணியில் இருந்த வாக்கு வங்கி சரித்துவிட்டது. நான் வந்தால் தான் இல்லா மல் போய்விடுவோமோ என்று ஆள் பயந்தே போய் விட்டார்.

தமிழ்த்தேசியம், ஒற்றுமை பற்றிப் பேசும் கூட்டணியினர் அதனை நடைமுறைப்படுத்து கின்றனரா? இந்திய வம்சா வழித் தோட்டத் தொழிலாளர்களின் வாக்குரிமையைப் பறிக்கும் பிரஜா உரிமைச் சட்டத்தைக்கொண்டு வருவதில் ஜி.ஜி.பொன்னம் பலமும் முக்கிய பங்காளி என்று நான் கூறியபோது எனக்கு வக்கீல் நோட்டீஸ் அனுப்பினார் அன்று தமிழ்க் காங்கிரஸில் இருந்த விநாயக மூர்த்தி.

முன்னாள் அமைச்சர் மகேஸ்வரன் சுடப்பட்டபோது புலிகள் ரங்காவின் ஊடாகத்தான் இதனைச் செய்தனர் என்று பொலிஸ் மா அதிபருக்குக் கடிதம் எழுதினார் டக்ளஸ். அந்தச் சமயத்தில் எனது பெயரும் கொலைசெய்யப்படுபவர்களின் பட்டியலில் இருந்தது. கொலை மிரட்டல்க்ள் வந்தன. இதனால் மூன்று மாதம் வெளிநாட்டில் தங்க நேரிட்டது.

ஊடகவியலாளர்கள் கடத்தப்பட்டனர். கொல்லப்பட்டனர். இதில் 90 வீதமானவர்கள் தமிழ் ஊடகவியலாளர்கள். இதனால் பல மூத்த ஊடகவியலாளர்கள் வெளிநாடுகளில் தஞ்சம் அடைந்துவிட்டனர். நானும் அப்படிச் சென்று தங்கியி ருக்கலாம். எல்லா வசதிகளும் இருந்தும் நான் அப்படிச் செய்யவில்லை. தொடர்ந்து ஊடகங்களுக்கு அச்சுறுத்தல்கள் விடப்பட்ட நிலையிலும் நான் எனது பணியைக் கைவிட்டுவிடவில்லை. அது தொடரும்.

*சரி, உங்கள் கட்சிக்கும் உங்களுக்கும் ஏதாவது அரசியல் கொள்கை இருக்கிறதா? இருந்தால் அது என்ன?*

தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஒன்றுபட வேண்டும். தமிழ், முஸ்லிம் என்று பேதம் இன்றி தமிழ் பேசும் சிறுபான்மை சமூகம் என்ற உணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். வடக்கு, கிழக்கு, மலையகம் என்ற வேறுபாடுகள் நீக்கப்பட வேண்டும். இன்று பாருங்கள். வடக்கு-கிழக்கு தமிழர், யாழ்ப்பாணம் மட்டக்களப்பு தமிழர், யாழ்ப்பாணத் தமிழர் - வன்னித் தமிழர், யாழ்ப்பாணத்தார் - தீவகத் தமிழர் என்று பிரித்துத்தானே பேசுகின்றனர். ஒற்றுமை உணர்வு பேச்சில் மட்டும் இருக்கக் கூடாது.

தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமைக்காகச் செயற்படுவது. செயலிலும் இருக்க வேண்டும். அரசியல், பொருளாதார, கல்வி, கலை, அபிவிருத்தியில் புறக்கணிக்கப்பட்டவர்கள் நாட்டின் எந்த மூலையில் வாழ்ந்தாலும் அவர்களைத் தேடிச் சென்று பணிபுரிவது எங்களுடைய முக்கிய நோக்கம்.

எமது பணிக்கு எந்த விதமான தடைகள் அச்சுறுத்தல்கள் வந்தாலும் அமைதி வழியில் அவற்றை முறியடித்து முன் செல்வோம்.

அதில் வெற்றி பெறுவோம். ★



# அன்ரனாக் குருவிகள்

சிறிய குருவி சுதந்திரமாய்ப் பறந்து பறந்து உலகைப் பார்க்கிறது. அதன் கண்ணுக்கெட்டிய தூரம்வரை தெரியும் பரந்த வெளிக்கு அப்பாலும் என்ன இருக்கிறது என்பதைப் பார்க்கத் தூண்டும் குறு குறு விழிகள். தனது சிறிய இறக்கைகளை விரித்துப் பறக்கிறது. பயணிக்கிறது. அதன் வாழ்க்கை இன்பமயமானது. அதனைக் கண்டு இரசிக்கும் கவிஞரைக் காணுகிறோம். குருவியின் இருப்பையும் பறப்பையும் பார்த்துப் பரவசப்படுகிறார். வீட்டுக் கூரையில் அன்ரெனா மீதில் - குந்தியிருக்கும் அந்தக் குருவியின் செயல் கவிஞரைக் கொக்கி இட்டு இழுக்கிறது.

**குருவி**
**சின்னஞ் சிறு குருவி**
**குந்திபிருக்கிறது அன்ரெனா கொம்பில்**
**முன்னே பென்னம் பெரிய வெளி**
**உந்திப் பறக்கும் உலகளக்கும்**
**பிறகு வந்து ஒய்வெடுக்கும்**
**தங்கி இருந்து அண்டவெளிக்குத்**
**தாவும் இடம் போலதற்கு அன்ரெனா**

என்கிறார் கவிஞர்.

எத்தனை சுதந்திரம். எத்துணை மகிழ்ச்சி. அந்தக் குருவியின் உந்திப் பறப்பும், அன்ரெனாக் கொம்பில் அது ஒய்வெடுக்கும் ஒய்யாரமும் கவிஞரின் மனதுக்கு உவகை தருகிறது. அதே வேளையில் அன்ரெனாவுடன் இணைந்து ஒளி பரப்பும் தொலைக்காட்சிப் பெட்டியின் முன்னே சூழ்ந்து கை கட்டி குறு குறு விழி விழித்து குந்தி இருக்கும் குழந்தைகளை வீட்டினுள்ளே காணுகின்றார். அவரது மனதில் வருத்தும் வேதனை மேலெழுகிறது. எல்லோரையும் போல் அவர் குழந்தைகளை ஏசத் துணியவில்லை. அந்தப் பிள்ளைகளோடு பேசத் துடிக்கிறார்.

**"சிறிசுகாள்**
**உங்கள் விழிகளிலும் அதே குறுகுறுப்பு**
**கண்ணிமைகளிலோ**
**கனவுகளின் சிறகடிப்பு"**

என்கிறார்.

அவரது இந்த வார்த்தைகள் சிறுவர்களின் ஆளுமையை விழிப்படையச் செய்யும் அழைப்பாக அமைகிறது.

**"பிறகேன் கட்டுண்டீர்**
**தொலைக்காட்சிப் பெட்டியின் முன்**
**எந்தக் கைகட்டிப் பறவைகளையும்**
**இப்படி நீங்கள் கண்டதுண்டா?**

என்கிறார்.

வெளியே வந்து பாருங்கள். தொலைக் காட்சிப் பெட்டியைத் தொட்டு நிற்கும் அந்த அன்ரெனா மீதில் அமர்ந்திருக்கும் அந்தச் சின்னஞ்சிறிய குருவியைப் பாருங்கள். அதைப்போல் நீங்களும் இந்தப் பரந்த உலகைப் பாருங்கள் உங்கள் சிந்தனைக்குச் செயல்வடிவம் தரும் வகையில் விரிந்த வானும் மண்ணும் காற்றும் உங்களை - உங்கள் வளர்ச்சியை ஊக்கும் சக்திகளாய் உணர வைக்கும்

**"வெளியே வாருங்கள்**
**விரிந்த உலகுளது**
**கடலுளது மலையுளது**
**காடுளது கூட்டங் கூட்டமாய்**
**குருவிகள் நீந்திவரும் காற்றுளது**
**வெளிவருக தொலைக் காட்சிக் கூண்டுக்குள்**
**அடைபட்ட குருவிகாள்**
**வெளிவருக**
**உலகளக்கும் உணர்கொம்பு**
**உன்னிடத்தும் உன்னிடத்தும்"**

எத்தகைய அருமையான அறிவுரை சிறிசுகளுக்கு மாத்திரமல்ல பெரிசுகளுக்கும் அது பொருந்தும். கவிஞர் கண்ட குருவியும், தொலைக்காட்சிப் பெட்டியும் அதே வேளை அங்கு பெட்டியைச் சூழ்ந்து அடைபட்டுக் கிடந்த குழந்தைகளின் செயலும் நயந்தரும் இனிய கவிதையாய்ப் பலரது கவனத்தை ஈர்க்கும் அறிவுரையாய் உள்ளத்தைத் தொடுகின்றது

**மைதிலி.தேவராஜா**

கவிஞர் அமரர் சு.வில்வரத்தினம் எழுதிய நூற்றுக் கணக்கான கவிதைகளில் ஒரு துளி இது. புதுக்கவிதை உலகம் என்றும் மறக்காத பிரபலமான கவிஞர் அவர்.

புங்குடுதீவில் 07.08.1950ல் பிறந்தவர் அவரது பெற்றோர் வேலாயுதம் சுப்பிரமணியம் - மாணிக்கம் தம்பதியினராவர். அகங்களும் முகங்களும், காலத்துயர், காற்றுவழிக்கிராமம், நெற்றிமண் உயிர்த்தெழும் காலத்திற்காக, வாசிகம் என்பவை அவரது கவிதைத் தொகுதிகளாகும். அவர் 2006. டிசம்பர் மாதம் அமரரானார்.

அவரது கலைத்துவம் மிக்க வெளிப் பாடுகளின் மூலம் அவரை இலக்கிய உலகம் மறந்துவிடாது என்பது நிச்சயமாகும். ★

# ராசி-பலன்

**20 . 02 . 2011 - 26 . 02 . 2011**




### அச்சுனி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்

இந்த வாரம் பல விஷயங்களில் கவனம் செலுத்தினாலும், சில செயல்களில் அதிக முயற்சியோடு ஈடுபட்டு முன்னேற்றமான பலன்களை அடைவீர்கள். கோபம், வேகத்தைத் தவிர்த்து அனைவரிடமும் அன்பாக நடந்து கொள்ள திட்டமிடுவீர்கள்.

உத்தியோகத்தில் உள்ளவர்களில் சிலருக்கு எதிர்பாராத வெளியூர் மாற்றம் ஏற்படலாம். வேலையில் பொறுப்புகள் அதிகமாகலாம். குடும்பத்தில் பண வரவு சிறிது கூடுதலாகும். சிறு சிறு கடன்களை தீர்க்க முயற்சிகளை மேற்கொள்ளலாம். மங்கல நிகழ்ச்சிகள் நடத்த திட்டமிடுவீர்கள்.

சிறப்புப் பரிகாரம் : வியாழக்கிழமை ஹயக்ரீவருக்கு துளசி மாலை சூட்டி நெய் தீபமிட்டு வழிபாடு செய்வது மனோ திடத்தை அதிகப்படுத்தும்.

அதிர்ஷ்ட எண்கள் : 3,5,6 , அதிர்ஷ்ட நிறம் : வெளிர் மஞ்சள், அதிர்ஷ்டக் கிழமை : வியாழன்.




### கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்

புதிய நபரின் அறிமுகத்தால் சிறு வெற்றிகள் உண்டாகும். மறைமுக எதிரிகளை முறியடிக்க பாடுபடுவீர்கள். பண வரவு மட்டும் கைகளுக்கு வந்து சேர தாமதமாகும். எவ்வளவுதான் முன் யோசனையுடன் செயல்பட்டாலும், தொழில் ரீதியான விஷயங்களில் தாமதங்கள் ஏற்படலாம். உத்தியோகத்தில் உள்ளவர்களில் சிலர், உயர் அதிகாரிகளின் ஆதரவோடு சில சலுகைகளை அனுபவிக்கலாம். குடும்பத்தில் அவ்வப்போது ஏற்படும் சிறு பிரச்சினைகளைச் சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். பெண்கள் ஆரோக்கிய விஷயத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

சிறப்புப் பரிகாரம் : சனிக்கிழமை ஆஞ்சநேயருக்கு வெண்ணை சாத்தி, நெய் தீபமிட்டு வழிபாடு செய்வது வெற்றியைத் தரும்.

அதிர்ஷ்ட எண்கள் : 6,8,9 , அதிர்ஷ்ட நிறம் : வெளிர்நீலம்,அதிர்ஷ்டக் கிழமை : சனி .




### மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

நீங்கள் செய்யும் செயல்கள் பலவற்றில் வெற்றி அடைவீர்கள். மனதில் உற்சாகமும், சுறுசுறுப்பும் ஏற்படும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் சக ஊழி யர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். சக ஊழியர்களின் குடும்ப விஷயங்களில் தலையிடுவதை தவிர்க்கவும். தொழில் விவகாரங்களில் ஏற்பட்ட சிக்கல்களை நெருங்கிய நண்பர்கள் மூலம் தீர்த்துக் கொள்வீர்கள். குடும்பத்தில் எதிர்பாராத பணவரவுகள் இருக்கும். பெண்கள் ஆரோக்கிய குறைகளில் இருந்து விடுபட்டு வெளியூர் பயணங்கள் செல்ல திட்டமிடுவீர்கள்.

சிறப்புப் பரிகாரம் : சனிக்கிழமை சனிபகவானுக்கு எள்ளன்னம் நிவேதனம் செய்து வழிபாடு செய்வது சிறந்த பலன்களை அளிக்கும்.

அதிர்ஷ்ட எண்கள் : 5,8,9 , அதிர்ஷ்ட நிறம் : சிவப்பு.

அதிர்ஷ்டக் கிழமை: செவ்வாய்.




### புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்

நண்பர்களின் உதவியால் முக்கிய திருப்பங்கள் உண்டாகும். சிந்தனை செய்து திட்டமிட்டு செயல்படும் காரியங்களில் முன்னேற்றமான பலன்களை அடைவீர்கள். வரவுகள் வாசலை அடையும் முன் செலவுகள் சிறகடித்து முன்னால் வந்து நிற்கும்.

உத்தியோகத்தில் உயர் அதிகாரிகளின் விருப்பப்படி வேலையினை செய்து கொடுப்பீர்கள். சொந்தத் தொழில் செய்பவர்கள் கூட்டு வியாபாரம் செய்பவர்கள் அதிக முதலீடுகளுடன் வியாபாரத்தை விரிவாக்கவும், புதிய கிளைகள் தொடங்கவும் திட்டமிடுவார்கள்.

குடும்பத்தில் சீரான போக்கு காணப்பட்டாலும், அவ்வப்போது சிறு சிறு பிரச்சினைகளும் உண்டாகலாம்.

சிறப்புப் பரிகாரம் : வியாழக்கிழமை தட்சிணாமூர்த்திக்கு வில்வ மாலை சூட்டி, நெய் தீபமிட்டு வழிபட சகல பாக்கியங்களும் பெறலாம். அதிர்ஷ்ட எண்கள் : 3,5,9 ,அதிர்ஷ்ட நிறம் : வெளிர்மஞ்சள்,அதிர்ஷ்டக் கிழமை : வியாழன்.




### மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்

உறவினர் வருகையால் இல்லத்தில் மகிழ்ச்சி பெருகும். இஷ்ட தெய்வத்தின் அருளால் எடுக்கும் முயற்சிகள் சிலவற்றில் முன்னேற்றமான பலனைக் காண்பீர்கள். வீடு, மனை தொடர்பான விஷயங்களில் சாதகமான சூழ்நிலை உருவாகும்.

சொந்தத் தொழில் செய்பவர்களுக்கு தங்கள் தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும். கூட்டுத்தொழில் செய்பவர்கள் வியாபாரத்தில் சற்று அதிகமான லாபம் பெறக்கூடும். குடும்பத்தில், சொந்த பந்தங்களின் வருகையால் மகிழ்ச்சி ஏற்பட்டாலும் செலவுகளும் இருக்கலாம். பெண்களுக்கு சுபகாரியங்களைப் பற்றி பேச வாய்ப்புகள் உண்டாகும்.

சிறப்புப் பரிகாரம் : செவ்வாய்க்கிழமை அங்காரக பகவானுக்கு சிவப்பு மலர் சூட்டி, நெய் தீபமிட்டு வழிபாடு செய்வது நல்ல பலன் தரும். அதிர்ஷ்ட எண்கள் : 1,3,9 , அதிர்ஷ்ட நிறம் : இளம்சிவப்பு.

அதிர்ஷ்டக் கிழமை : செவ்வாய்.




### உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள், அஸ்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்

கடந்த கால மனக்கசப்புகளை மாற்ற பாடுபடுவீர்கள். செய்யும் வேலைகளில் சிறு தடங்கல் இருந்தாலும் முடிவில் நன்கு நடைபெறும்.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு அலுவலகத்திலேயே புதிய பொறுப்புகள் வந்து சேரும். சொந்தத் தொழில் செய்பவர்கள் புதிய வாடிக்கையாளருக்காக ஓய்வின்றி பணிகளில் ஈடுபடுவர். குடும்பத்தில் மங்கல நிகழ்ச்சிகள் நடைபெற முன்னேற்பாடுகளில் ஈடுபடுவீர்கள். கடன் பிரச்சினைகளால் ஏற்பட்ட கலக்கம் நிவர்த்தியாகும். வேலைக்காக காத்திருக்கும் இளைஞர்களுக்கு வேலை கிடைக்கும்.

சிறப்புப் பரிகாரம் : வெள்ளிக்கிழமை துர்க்கா தேவிக்கு சிவப்பு அரளியினல் மாலை சூட்டி நெய் தீபமிட்டு வழிபாடு செய்வது நல்ல பலன்களை அளிக்கும். அதிர்ஷ்ட எண்கள் : 6,8,9., அதிர்ஷ்ட நிறம் : இளஞ்சிவப்பு, அதிர்ஷ்டக் கிழமை : செவ்வாய்.




### சித்திரை 3, 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்

முக்கிய விஷயங்களை திட்டமிட்டு முடிக்கக் கூடிய சூழ்நிலைகள் உண்டாகும். எடுத்த காரியங்களை வெற்றிகரமாக முடிக்க பாடுபட்டு சிறு வெற்றிகள் அடைவீர்கள். கொடுக்கல் வாங்கல் விஷயங்களில் கவனமாக இருப்பது அவசியம். வரவேண்டிய பணம் கைக்கு வருவதற்கு சிறிது தாமதமாகலாம். சொந்தத் தொழில் செய்பவர்கள் வரவுகளைப் பெறுவார்கள். குடும்பத்தில் சீரான போக்கு இருந்தாலும் சிறு சிறு பிரச்சினைகளும் ஏற்படக்கூடும். கணவன், மனைவி உறவுகள் வழக்கம்போல் இருக்கும். கோர்ட்டு வழக்கு சாதகமாக முடியும்.

சிறப்புப் பரிகாரம் : புதன்கிழமை லட்சுமி நரசிம்மருக்கு துளசி மாலை சூட்டி நெய்தீபமிட்டு வழிபாடு செய்தால் எதிரிகள் பயம்.

விலகும்.அதிர்ஷ்ட எண்கள் : 5,6,9. அதிர்ஷ்ட நிறம் : இளம்பச்சை, அதிர்ஷ்டக் கிழமை : புதன்.




### விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை

நீங்கள் செய்யும் வேலையில் வெற்றிபெற முயற்சிகளை அதிகரிக்க வேண்டியிருக்கலாம். தளர்ச்சிகளைக் கண்டு தளராமல் மேலும் தக்கவர்களின் உதவியுடன் முன்னேறுவீர்கள். சொந்தத் தொழிலில் இருப்பவர்களுக்கு செய்து கொடுத்த வேலைக்காக பாராட்டு கிடைக்கலாம். வியாபாரம் விறுவிறுப்பாக நடைபெறும்.

குடும்பத்தில் தொல்லை கொடுத்த சிறு சிறு கடன்களை அடைத்து விடுவீர்கள். உறவினர்களிடையே இருந்த மனக்கசப்பு விலகும். சக கலைஞர்களின் குடும்ப நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பரிசளித்து மகிழ்வர். பங்குச்சந்தை வியாபாரம் முன்னேற்றமாக நடைபெறும். ஆலோசித்து நீங்கள் எடுத்த முடிவு வெற்றியைத் தரும்.

சிறப்புப் பரிகாரம் : திங்கட்கிழமை மகாலட்சுமிக்கு மலர் சூட்டி, நெய் தீபமிட்டு வழிபடுவது நல்ல பலன்களைக் கொண்டு வந்து சேர்க்கும். அதிர்ஷ்ட எண்கள் : 2,5,6,அதிர்ஷ்ட நிறம் : சிவப்பு, அதிர்ஷ்டக் கிழமை : ஞாயிறு.




### மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்

எதிர்பார்த்த ஒரு விஷயம் சாதகமாக முடியும். வேலைகளில் உற்சாகத்தோடும் முயற்சிகளோடும் செயல்பட்டாலும், சிலவற்றில் மட்டுமே எதிர்பார்க்கும் முன்னேற்றத்தை அடையமுடியும். அண்டை அயலாரிடம் நீங்கள் கலகலப்பாக பேசினாலும் அவர்கள் உங்களை விமர்சிக்க நேரலாம்.

குடும்பத்தில் அவ்வப்போது ஏற்படும் தொல்லைகளைச் சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். பெண்களால் குடும்ப அங்கத்தினர்களுக்குள் சிறு மன வேறுபாடுகள் ஏற்பட்டு அகலும். பங்குச்சந்தை வியாபாரம் சுமாராக நடைபெறும்.

சிறப்புப் பரிகாரம் : ஞாயிற்றுக்கிழமை சூரிய பகவானுக்கு சிவப்பு மலர் சூட்டி நெய் தீபமிட்டு வழிபாடு செய்பவர்களுக்கு சகல நலன்களும் வந்து சேரும். அதிர்ஷ்ட எண்கள் : 2,5,9, அதிர்ஷ்ட நிறம் : வெள்ளை, அதிர்ஷ்டக் கிழமை : திங்கள்.




### உத்திராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருகோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்

சில எதிர்பாராத தனலாபங்களை நீங்கள் இந்த வாரம் சந்திக்க வாய்ப்பு உண்டு. தீவிர முயற்சியில் ஈடுபட்டு பல காரியங்களில் வெற்றி காண்பீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு அலுவலகம் மூலம் வரவேண்டிய பண வரவுகள் வந்து சேரலாம். பாதியில் விட்ட வேலைகளைத் தொடருவீர்கள்.

குடும்பத்தில் பணவரவுகள் அதிகமாகலாம். சிறு சிறு கடன்கள் அடைபடும். வயதான பெரியோர்களுக்கு ஆரோக்கியக்குறை ஏற்பட்டு அகலும். பெண்களின் ஆரோக்கியம் நல்ல முறையில் இருக்கும். கலைத் துறையினர் சிலருக்கு புதிய ஒப்பந்தங்கள் மூலம் பணவரவு அதிகமாகலாம்.

சிறப்புப் பரிகாரம் : புதன்கிழமை அன்று ஸ்ரீசுதர்சனருக்கு துளசி மாலை சூட்டி நெய்தீபமிட்டு வழிபட சகல சவுபாக்கியங்களும் உண்டாகும். அதிர்ஷ்ட எண்கள் : 5,6,9, அதிர்ஷ்ட நிறம் : இளம்பச்சை, அதிர்ஷ்டக் கிழமை : புதன்.





### அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்

எடுத்த செயல்களில் தக்கவர்களின் உதவியோடும், அதிக முயற்சிகளோடும் பாடுபட்டு விரும்பிய பலனை அடைவீர்கள். கூட்டு வியாபாரம் செய்பவர்களுக்கு வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் இருக்கும். பணப்பொறுப்பில் உள்ளவர்களை அடிக்கடி கண்காணிப்பது பிரச்சினைகளை தவிர்க்கும்.

குடும்பத்தில் சீரான போக்கு காணப்பட்டாலும், சிறு சிறு தொல்லைகளும் இருக்கும். பெண்கள், வெளியில் நடைபெறும் மங்கல நிகழ்வுகளில் பங்கு பெறுவார்கள். கலைத்துறையினர் புதிய வாய்ப்புகளில் பங்குபெற வெளியூர் பயணங்களை மேற்கொள்ள நேரிடும்.

சிறப்புப் பரிகாரம் : வெள்ளிக்கிழமை மாரியம்மனுக்கு செவ்வரளி மலர் மாலை சூட்டி நெய் தீபமிட்டு வழிபாடு செய்வது நல்ல பலன்களை அளிக்கும். அதிர்ஷ்ட எண்கள் : 5,6,9, அதிர்ஷ்ட நிறம் : வெளிர்நீலம், அதிர்ஷ்டக் கிழமை : வெள்ளி .




### பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி

சிறு சிறு வெற்றிகளால் இந்த வாரம் உங்களுக்கு மனமகிழ்ச்சி உண்டாகும். பிரச்சினைகளை திறமையாக சமாளிப்பீர்கள். கொடுக்கல், வாங்கலில் கவனமாக இல்லாவிட்டால் பிரச்சினைகள் ஏற்படலாம். உத்தியோகஸ்தர்கள் தங்கள் பொறுப்புகளில் கவனமாக இல்லாவிட்டால் உயர் அதிகாரிகளின் கோபப் பார்வைக்கு இலக்காக நேரலாம்.

சொந்தத் தொழில் செய்பவர்கள், முக்கிய உபகரணங்களை பாதுகாப்பாக வைத்திருப்பது அவசியம். கூட்டு வியாபாரத்தில் ஓரளவு லாபம் உண்டு. போட்டியாளர்களின் பாதிப்பினால் வியாபாரத்தில் முன்னேற்றம் தடைபடலாம். குடும்பத்தில் கடன் தொல்லை இருக்கலாம்.

சிறப்புப் பரிகாரம் : செவ்வாய்க்கிழமை முருகப்பெருமானுக்கு சிவப்பு மலர் சூட்டி தீபமிட்டு வழிபாடு செய்வது நன்மை தரும். அதிர்ஷ்ட எண்கள் : 1,6,9 , அதிர்ஷ்ட நிறம் : இளஞ்சிவப்பு,அதிர்ஷ்டக் கிழமை : செவ்வாய்.

## எங்கு போய் நான் எனக்கு மாப்பிள்ளை தேடுவேன்?





திருமணத்தின்போது ஆணை விட பெண் சற்று உயரம் குறைந்தவளாகவே இருப்பதை எதிர்பார்ப்பார்கள். இது வழமை. உலகிலே மிக உயரமான பெண்களும் உள்ளனர். இந்த உயரமான பெண்ணுக்கு எங்கு போய் உயரமான மாப்பிள்ளை தேடுவது?

உலகின் மிக உயரமான மொடல் அழகி என்று கின்னஸ் சாதனைக்குரிய பெண்ணாக அமேஷன் ஈவ் திகழ்கிறார். அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தைச் சேர்ந்த 31 வயதுடைய அமேஷன் ஈவ் நடிகையுமாவார். இந்த மொடல் அழகி 6 அடி 8 அங்குலம் உயரம் கொண்டவராவார்.

அதேவேளை, இந்த மொடல் அழகியிடம் யாரும் சேஷ்டைகள் புரிய முடியாது. ஏனெனில் இவர் ஒரு சிறந்த மல்யுத்த வீராங்கனையும் ஆவார். எனது குடும்பத்தைச் சேர்ந்த அனைத்துப் பெண்களும் உயரமானவர்கள் என அமேஷன் ஈவ் தெரிவித்துள்ளார். இவரது தாய் 6 அடி ஒரு அங்குலம், தந்தை 6 அடி 7 அங்குலம் உயரம் கொண்டவர்களாகும்.

முழுநேரமாக மொடலிங் செய்கிறார். அதேவேளை ஆண்களுக்கு மல்யுத்தம் கற்றுக்கொடுக்கிறார். ஒரு மணித்தியாலத்திற்கு 400 அமெரிக்க டொலர்கள் அறவிடுகிறார். இவர் அணியும் பாதணியின் அளவு 14 ஆகும். இந்த அளவு கொண்ட பாதணிகளை கொள்வனவு செய்வது மிகவும் சிரமம் என ஈவ் தெரிவித்துள்ளார்.

இவரது மொடலிங் படங்கள் 27 இற்கும் மேற்பட்ட நாடுகளில் உள்ள சஞ்சிகைகளின் முன் அட்டையை அலங்கரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# தம்பதியினரின் உறவுகள்....



மனிதனுக்கு நிம்மதி கொடுக்கும் இடம் படுக்கையறை. இதற்குச் சில நாகரீக நடைமுறைகள் இருக்கின்றன. அவற்றைப் பின்பற்றாவிட்டால், துணைவருக்கோ அல்லது அருகில் படுப்போருக்கோ தொந்தரவாகி விடக் கூடும்.

படுக்கையறை என்றாலே தனிமை என்று அர்த்தம். பல தம்பதிகளுக்குத் தனிமை வாய்ப்பது படுக்கையறையில் மட்டும்தான். அந்த நேரத்தில் உங்களின் அன்பை வெளிபடுத்தும் விதத்தில் மென்மையாக அணைப்பது தவறில்லை. பெரும்பாலான ஆண்கள் 'உறவுக்கு பின் உடனே தூங்கிப் போகிறார்கள் என்கின்றன ஆய்வுகள். மாறாக பெண்களோ அன்பான அரவணைப்பை எதிர்பார்க்கிறார்கள்.

தூங்குவதற்கு முன் துணையுடன் சிறிது நேரம் அன்போடு உறவாடுங்கள், உரையாடுங்கள். சிறிது நேரத்துக்கு பின் இருவரும் இயற்கையாகவே விலகித் தூங்க ஆரம்பித்து விடுவீர்கள். இல்லாவிட்டால், 'தூங்கலாம் என்று நினைக்கிறேன்' என்று வெளிப்படையாகக் கூறி விட்டுத் தூங்க ஆரம்பியுங்கள். அதற்கு முன், அன்பான புன்னகையுடன் கூடிய 'குட் நைட்' அருமையாக இருக்கும்.

. துணையில் ஒருவர் இன்னும் தூக்கம் வராமல் அல்லது அரைகுறைத் தூக்கத்தில் இருக்கலாம். அடுத்தவரோ ஆழ்ந்த உறக்கத்தில் குறட்டை விடலாம், கன்னாபின்னாவென்று உருண்டு அடுத்தவரைக் கட்டிலில் இருந்தே தள்ளிவிட்டுவிடலாம். விளைவு: ஒருவருக்கு நிம்மதியில்லாத உறக்கம், காலையில் கிறக்கம்.

கடுமையாகக் குறட்டை விடுபவர்கள் மூக்குப் பட்டை போன்றவற்றை அணிந்து கொள்ளலாம். காது, மூக்கு, தொண்டை நிபுணரைப் பார்க்கலாம். 'பாதிக்கப்படுபவர் காது அடைப்பான் மாதிரியானதை உபயோகிக்கலாம். மெலிதாக மெல்லிசையை ஒலிக்க விடலாம். துணையிடம் நீங்கள் ரொம்ப சத்தமாகக் குறட்டை விடுகிறீர்கள் என்று சத்தம் போடாமல் எடுத்துக் கூறலாம். கடுமையாக உருண்டு புரண்டு படுப்பவர்களிடம் இருந்து தப்பிப்பதற்கான ஒரே தீர்வு, படுக்கை அளவை அதிகரிப்பதுதான்.

இருவரும் பொதுநேரத்துக்கு தூக்கத்துக்குப் போனால்,' விளக்கு அணைக்கும் கொள்கை என்ற ஒன்றைக் கொண்டு வாருங்கள். இருவரில் ஒருவர் தூங்கியபிறகு அடுத்தவர் அடுத்த அரைமணி அல்லது முக்கால் மணி நேரத்துக்கு புத்தகம் படிக்கலாம். ஆனால் அதன் பின் விளக்கை அணைத்துவிட வேண்டும்.

தம்பதிகளுக்கான அந்தரங்க இடம் படுக்கையறை. படுக்கையில் சாய்ந்து விளையாடி, உறவாடி என்று சிறிது நேரத்துக்கு பின்புதான் தம்பதிகளுக்கு 'அடுத்தகட்டத்துக்கு போகும் மனநிலை வரும். அந்த மனநிலையைக் குழப்பும் வகையில் கைத்தொலைபேசி,

# காதலர் தினத் திருமணம்



அன்புக்கும் காதலுக்குமான மாதமாக பெப்ரவரி மாதம் கருதப்படுகிறது. அதிலும் பெப்ரவரி மாதத்தில் வரும் காதலர் தினத்திலோ அல்லது அந்த நாளின் நெருக்கத்திலோ திருமணம் செய்து கொள்வது என்பது மிகவும் பொருத்தமுடையது. திருமணத்தைப் பற்றி தேமஸ் மூர், வேறுபட்ட விதியையும், வாழ்வையும் கொண்ட இரண்டு ஆத்மாக்கள் தங்களையும், தங்கள் குடும்பத்தினரையும் இணைக்கும் உன்னதமான பந்தத்தை ஏற்படுத்துவது திருமணமாகும் என்று கூறினார்.

ஒவ்வொரு நாளும் நமது வாழ்வு என்பதும் கூட நமது ஆத்மாவின் புரியாத, கால வரையறையற்ற ஒரு பந்தம்தான். அந்தப் பந்தம் ஏற்படும் நாள் மகத்தானதாக இருக்க வேண்டும்.

அதற்காக உங்களுடைய திருமண அழைப்பிதழில் இருந்தே காதலர் தின வண்ணத்தைக் கொடுக்கத் துவங்குங்கள்.

திருமண அழைப்பிதழில் மன்மதனின் அழகிய உருவத்தைப் பொறித்து, வார்த்தைகளை தங்க நிறத்தில் இருக்குமாறு அமையுங்கள். உங்கள் நாளின் வண்ணத்தை உங்கள் அழைப்பிதழ் பறை சாற்றட்டும். திருமண அழைப்பிதழில் உங்கள் இருவரின் புகைப்படங்களையும் பொறித்திடுங்கள்.

உங்கள் திருமண பந்தத்தை அனைவருக்கும் தெரிவிக்கும் அந்த நிகழ்விற்கான மண்டபத்தை மிக யர்ரிக்கையாகத் தெரிவு செய்யுங்கள். நீங்கள் எந்த மண்டபத்தை தெரிவு செய்தாலும், அங்கு ஏராளமான மெழுகு வர்த்திகளைக் கொளுத்தி வைக்கும் வசதியுள்ளதாக அது இருக்கட்டும். ஏனெனில் மெழுகு வர்த்திகள் திருமண நாளிற்கான மனச் சூழலைத் தரும். இயற்கையான ஒரு சூழலில் திருமண நிகழ்வு நடைபெறட்டும். அதற்கேற்ற வகையில் பூந்தோட்டத்தையோ அல்லது மலர்கள் பூத்த செடிகள் நிறைந்த மண்டபத்தையோ தெரிவு செய்யுங்கள்.

## காதல்: திருமணம்

★ சாலையில் கை கோர்த்துக் கொண்டு நடந்து செல்பவர்கள் காதலர்கள்.
★ நீ முன்னாடி போனா நான் பின்னாடி வருவேன் என்று ஆளுக்கொரு பக்கம் போவது தம்பதிகள்.

★ பசி, உறக்கம் மறக்க வைப்பது காதல்.
★ இதை மட்டுமே நினைக்க வைப்பது கல்யாணம்.

★ உறக்கத்தில் காணும் இனிமையான கனவுதான் காதல்.
★ அந்த இனிமையான கனவைக் கலைக்கும் அலாரம் சத்தம்தான் கல்யாணம்.

★ எல்லாக் குறைகளையும் ரசிப்பவர்கள் காதலர்கள்.
★ நிறைகளே கண்ணுக்குத் தெரியாதவர்கள் தம்பதிகள்.

★ குழந்தைகளின் செல்லக் கொஞ்சல் காதல்.
★ அவர்களின் முரட்டுப் பிடிவாதம் கல்யாணம்.

★ ஒவ்வொன்றையும் கேட்டுவிட்டு செய்வது காதல்
★ செய்துவிட்டு தெரிவிப்பது கல்யாணம்.

★ எல்லா தவறுகளையும் ரசிப்பவள் காதலி.
★ எல்லா செயல்களையும் குறைசொல்பவள் மனைவி.

★ போட்டி போட்டுக்கொண்டு விட்டுக் கொடுப்பார்கள்.
★ போட்டி போட்டுக் கொண்டு சண்டை போடுவார்கள்.



# மனம் திருந்திய தம்பி



# சிறுவர் சுடர்

தொகுப்பு- எஸ்.ஜெயா

ஓர் ஊரில் ஒரு விவசாயிக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தனர். அவர்கள் நல்ல ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்தனர். அவர்களின் தாய் இறந்து விட்டார். அதனால் விவசாயி கஷ்ரப்பட்டு தன் பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றி வந்தார்.

காலம் செல்லச் செல்ல இரண்டாவது மகனுக்கு அண்ணன் மேல் பொறாமை ஏற்ப டத் தொடங்கியது. இதனால் அவனது வாழ்க்கை மாறியது. ஆனால் அண்ணனோ தந்தைக்கு உதவி, படிப்பிலும் முதல் மாணவனாகச் சிறந்து விளங்கினான்.

ஒரு நாள் தம்பி அண்ணனுக்குப் பால் கொண்டு சென்றான். அப்போது அவனுக்கு ஒரு யோசனை உதித்தது. நான் அண்ணனைக் கொன்றால் தனி ஆளாகிவிடுவேன். அப்பாவின் அன்பு தனக்கு மட்டும் என்று நினைத்து பாலில் நஞ்சைக் கலந்து அண்ணனின் அறைக்குக் எடுத்துச் சென்றான். அண்ணன் பாடம் படித்த பின்பு வேதம் வாசித்து தியானத்தில் இருந்தான். தம்பி பால் கிண்ணத்தைக் கொண்டு சென்று கொடுத்தான். அண்ணன் பாலைக் குடிக்க எடுத்தபோது அதில் ஏதோ மிதப்பதைக் கண்டு பாலைக் குடிக்காமல் அப்படியே வைத்து விட்டான். மறுநாள் குப்பை எரிக்கும்போது அண்ணனை அதற்குள் தள்ளிவிடலாம் என எண்ணி ஓடிவந்தான். அப்போது அங்கிருந்த பெரிய கிடங்கினுள் விழுந்தான். அவன் விழுந்த சத்தம் கேட்டு ஓடி வந்த தந்தை தம்பி கிடங்கினுள் விழுந்திருப்பதைக் கண்டு அவனை தூக்கி முத்தமிட்டுக் கட்டி அணைத்தார். தந்தை என்னிலும் இவ்வளவு அன்பு வைத்திருக்கிறார் என்பதை அறிந்து அன்றிலிருந்து அவன் திருந்தி வாழத் தொடங்கினான்.

**கி.கஜீவன், பொஸ்கோ.**



சீ.கஜன், நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி.



ஏஞ்சல், 9 'G', பிரான்ஸ் லோரன்ஸ் போப் வித்தால் கல்லூரி.



சீ.அகல்யா, யாழ்.இந்து மகளிர் கல்லூரி.



பயிற்சியின் போது....

# நான் பெற்ற தற்காப்புப் பயிற்சி

அம்மா உயர் படிப்பு படித்ததன் காரணமாக நானும் தம்பியும் அவருடன் டென்மார்க் சென்று கொஞ்சக் காலம் வாழ்ந்தோம். டென்மார்க்கில் நான் ஆரம்பப் பாடசாலையில் படித்தபோது ஒருநாள் காலையில் எனது வகுப்புப் பிள்ளைகள் விளையாட்டுத் துவக்கோடு பாடசாலைக்கு வந்தார்கள். எனக்கு முதலில் ஒன்றும் விளங்கவில்லை. அப்போது விளையாட்டு வகுப்பின் தலைவர் அங்கு வந்தார். ஓர் இடத்தில் வைத்து எங்களுக்குக் கறுப்பு, பச்சை நிற வர்ணங்களை முகத்தில் பூசி விட்டார்.

பின்பு பாடசாலையை விட்டுச் சிறிது தூரம் நடந்து ஒரு காட்டுக்கு அருகில் எங்களைக் கூட்டிச் சென்றனர். விளையாட்டு வகுப்பின் மற்றச் சில தலைவர்களும் அங்கு நின்றனர். எங்களுக்குப் பக்கத்தில் பல படிக்கட்டுகள் இருந்தன. அந்தத் தலைவர்கள் எங்களைப் படிக்கட்டுகளில் ஏறி, இறங்கி வரச் சொன்னார்கள். உடனே நாங்களும் படிக்கட்டுகளில் ஏறி, இறங்கி வந்தோம். அதன்பின் நாங்கள் காட்டுக்குள் சென்றோம்.

எங்களைக் குழுவாகப் பிரித்து விட்டார்கள். அதில் நான் என்னுடைய நண்பர்கள் இருந்த குழுவில் சேர்ந்துகொண்டேன். பிறகு அந்தத் தலைவர் எங்களைக் காட்டுக்குள் ஓடச் சொன்னார். நாங்கள் குறுக்குப் பாதையால் ஓடியபடி இடைக்கிடையே நிலத்தில் படுத்துக் கொண்டு சுடுவதுபோல் சத்தம் போட்டோம். அப்போது மழை பெய்தது. நான் நனைந்துபோய் விட்டேன். அதன் பிறகும் நாங்கள் பயிற்சியைச் செய்துகொண்டிருந்தோம். விளையாட்டு வகுப்பின் தலைவர் எங்களை ஒன்றாகச் சந்தித்து எங்களுக்கு ஆலோசனை கூறித் திரும்பவும் அந்தப் பயிற்சியைச் செய்யச் சொன்னார். நான் பள்ளத்தில் ஓடிக் கொண்டிருக்கும் போது ஒருவர் என்னைத் தள்ளி விட்டார். இவ்வாறு திடீரெனத் தாக்கும் பயிற்சியையும் எமக்குத் தந்தார்கள்.

இறுதியாக ஒவ்வொருவருக்கும் தற்காப்புப் பயிற்சி பெற்றமைக்கான சான்றிதழை மைதானத்தில் வைத்துத் தந்தார்கள். அதன்பிறகு பாடசாலைக்கு நாங்கள் நடந்து வந்தோம். நான் சிறிது நேரம் பாடசாலையில் விளையாடிக் கொண்டிருந்தபோது எனது அம்மா அங்கு வந்து என்னைப் பார்த்தபோது அதிர்ச்சி அடைந்து விட்டார். பிறகு கேட்டார் 'முகத்தில் என்ன பூசி இருக்கிறாய்' என்று. நான் சொன்னேன் 'கறுப்பு, பச்சை வர்ணங்களைப் பூசி ஆமிப் பயிற்சி எடுத்து சான்றிதழ் வாங்கினேன்' என்று. அதன்பின்பு நானும் அம்மாவும் கதைத்தபடி வீட்டுக்குச் சென்றோம்.



நண்பர்களுடன் உணவு அறையில்...

தே.அபிராம், தரம் - 4 E, யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை.



ர.சிந்துஜன், 7 'ஏ', யா/ ஆவரங்கால் நடராஜா இராமலிங்கம் வித்தியாலயம்.



ருதிஸ்துரன் டிலக்ஷன், 7 'ஏ', யா/ ஆவரங்கால் நடராஜா இராமலிங்கம் வித்தியாலயம்.



ந.கஜப்பிரியன், யா/கொக்குவில் இந்து ஆ.பா.



நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற கால்கோள் விழாவில்....

உண்மைச் சம்பவம்



# பார்வை ஒரு தடையல்ல ②

(சென்றவாரத் தொடர்ச்சி)

நெஞ்சு வெடித்து விடும் போலிருந்தது. ஆனாலும் எப்படியோ கொடியிலிருந்து அரவிந்தின் கால்களைப் பிரிந்தெடுத்துவிட்டான். இனி அவனையும் சுமந்து கொண்டு மேலே வந்தாக வேண்டும். ஆனால் அவனிருந்த நிலையில் இன்னொரு உடலையும் அவனால் சுமக்க இயலாது. அவனை இழுக்க வேண்டும். எதையாவது பற்றி இழுக்க வேண்டும். மேலும் துழாவிய போது அரவிந்தின் பெல்ட் தட்டுப்படவே அதை உறுதியாகப் பற்றிக் கொண்டு 25 அடியையும் கடப்பது ஒரு யுகம் போல் தோன்றியது. அவனுக்கு விலா எலும்புகள் நொறுங்கிவிடும் போல் இருந்தது. அப்போது அவன் அனுபவித்த வேதனையை வார்த்தைகளால் விளக்க முடியாது.

கடைசியாக அவனது மனோவலிமை இருவரையும் மேலே கொண்டுவந்தது. உடனடியாகவே இருவர் (அப்போது தான் சில ஆண்கள் வந்திருந்தனர்) கயிற்றின் உதவி கொண்டு அரவிந்தைத் தூக்கி முதலுதவி செய்யத் தொடங்கினார்கள். கொண்டிபாவை ஒருவரும் கவனிக்கவேயில்லை. அவனோ மன ஆறுதலுடன் கைக்குக் கிடைத்த ஒரு பாறையைப் பிடித்துக் கொண்டு ஆழமாக மூச்செடுத்துக் கொண்டிருந்தான். சற்றுநேரத்தில் விழுங்கிய தண்ணீர் அரவிந்த் வயிற்றிலிருந்து வெளி யேறியது. உடனடியாக அவன் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டான். மீதமிருந்தவர்கள் அப்போதுதான் கொண்டிபாவைக் கவனித்து அவனை வெளியே தூக்கிவிட்டார்கள்.

> அவனோ மன ஆறுதலுடன் தனக்குக் கிடைத்த ஒரு பாறையைப் பிடித்துக் கொண்டு ஆழமாக மூச்செடுத்துக் கொண்டிருந்தான்.

கொண்டிபா, ஏலான்பாயின் துணையோடு குடிசைக்குப் போய் உடைமாற்றிக் கொண்டு குற்றையில் விட்டுப் போன உணவை உண்டுவிட்டுக் களைத்துப் போய் உறங்கிவிட்டான். மறுநாள் பகல் பொழுது களைப்பின் காரணமாக கொண்டிபா வெளியே எங்கும் செல்லவில்லை.

ஆஸ்பத்திரியில் அரவிந்த் பூரணமாகப் குணமடைந்ததால் அவனை ''டிஸ்சார்ஜ்'' செய்துவிட்டார்கள். இன்னும் 30 வினாடிகள் அவன் தண்ணீருக்கடியில் இருந்திருந்தால் அவன் மூளை பிராணவாயு இல்லாத காரணத்தால் முற்றாகச் செயலிழந்திருக்கும் என்று வைத்தியர்கள் கூறினார்கள். சேரிக்கு வந்தவுடன் அவனது மாமியாருடன் நேரே கொண்டிபாவின் குடிசைக்குத்தான் அரவிந்த் வந்தான். திண்ணையில் சாய்ந்துகொண்டிருந்த கொண்டிபாவின் காலில் விழுந்து அவனது கால்களைக் கட்டியணைத்துக் கொண்டு அவன் கண்ணீர் விட்டது எல்லோர் மனதையும் கரைப்பதாக இருந்தது. கொண்டிபாவும் ஒன்றும் தோன்றாமல் அரவிந்தின் தலையைக் கைகளால் தேடிப் பிடித்து மெதுவாக வருடி ஆறுதல் படுத்தினான்.

மறுநாள் முதல் கொண்டிபாவை அதிஷ்ட தேவதையின் பார்வை அணைத்துக் கொண்டது. அவனது அந்த வீரதீரச் செயலைப் பாராட்டிப் பத்திரிகைகளில் அவனது புகைப்படத்துடன் செய்தி வெளிவரத் தொடங்கியது. பல பிரபலங்கள், மற்றும் பிரமுகர்கள் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியதோடு நில்லாமல் ஒரு தொகைப்பணத்தையும் சேர்த்து அனுப்பினார்கள். மொத்தமாக 13 ஆயிரம் ரூபா அவனுக்கு கிட்டியது. கொண்டிபா பிச்சை எடுப்பதை விட்டு விட்டான். அன்பளிப்பாகக் கிடைத்த பணத்தில் ஒரு சிறிய கடையை ஆரம்பித்துக் கௌரவமான முறையில் தொழிலை மேற்கொண்டான். அந்த ஊர்ப் பெண் ஒருத்தி விரும்பி அவனை மணந்துகொண்டாள். தனக்கு ஆதரவு தந்த மனைவியின் துணையுடன் அவனது வியாபாரம் நன்றாக நடக்கவே அவனது வாழ்வில் இந்த நிகழ்ச்சி ஒரு திருப்பு முனையாக அமைந்துவிட்டது.

கட்டாயத்தின் காரணமாகப் பிச்சை எடுக்கும் தொழிலில் இறங் கிய கொண்டிபா இனி ஒரு போதும் பிச்சை எடுக்கப் போவதில்லை. ஆனால் தனது பழைய வாழ்க்கையைத் ஒருபோதும் தான் மறக்கப் போவதில்லை என்று தன்னை நேரில் பாராட்டியவர்களிடம் அவன் அடக்கத்துடன் சொல்லி வந்தான். ★★

பேபி

# எல்லாமே மன்னன் பெயரால்...



ஊரெல்லாம் அலைந்து அந்தக் குறுநில தேசத்தின் தலைப்பகுதிக்கு அன்றுதான் வந்திருந்தான் பரதேசி. அவனுக்கென்ன. வேண்டியதெல்லாம் வயிற்றுக்குச் சோறு. படுக்க ஒரு மூலை. அது பெரியதொரு பாடில்லையாயினும். சில நேரங்களில் அதுக்கே பெரும் பாடாகி விடுவதுண்டு. அதனால் அவன் அனுபவிக்கும் துன்பங்களை அவனே உணர்வான். கிடைத்த சத்திரத்தின் ஒரு மூலையைப் பிடித்துக் கொண்டான். பரதேசிகளுக்குரிய விடுப்பறியும் அத்தனை குணங்களும் இந்தப் பரதேசிக்கும் இருந்தது. அன்று அலைந்த களைப்புத் தீர ஓய்வெடுத்து, பின் மறுநாள் நகர்வலம் வர முடிவெடுத்தான். கிடைத்த இடைவெளியில் தனது கந்தல்களைத் தோய்த்துக் காயவிட்டான்.

திடீரென மக்கள் கூட்டமாக எங்கோ ஓடுவது போலவும், வேகமாக நடப்பது போலவும் இருப்பதை அவதானித்த பரதேசி, மறுநாளைய திட்டத்தைக் கைவிட்டு அப்பவே வீதிக்கு வந்தான். அங்கும் இங்குமாகப் போய்க்கொண்டிருக்கும் கூட்டத்தில் அவனும் ஒருவனாகக் கரைந்து மக்கள் என்ன பேசிக்கொள்கிறார்கள்? எதற்காக இந்தப் பதற்றம்? என அறியத் தனது காதுகளை மக்கள் கூட்டத்திற்குள் தூக்கி றிந்தான். சில நேரம் செல்ல அத்தனை விடயங்களையும் தொகுத்துக் கொண்டான்.

சில தினங்களுக்கு முன்னர் அந்தத் தேசத்தின் தலைப்பகுதிக்குள் புகுந்த ஈவிரக்கமற்ற கொள்ளையர் கூட்டம் சில வீடுகளில் உள்புகுந்து நகை, நட்டுகளைக் கொள்ளையடித்தது. அதுமட்டுமல்லாது ஆசிரியர்கள், தடுப்பில் இருந்து விடுவிக்கப்பட்ட நபர்கள், ஆயர்கள், ஐயர்கள், குழந்தைகள் என பலரைக் கொன்று தீர்த்துவிட்டுத் தப்பி விட்டது. இதனால் அதிர்ச்சியும், வேதனையும் கொண்ட அப்பகுதி மக்கள் நடந்த அநியாயத்தைக் கண்டித்துக் கூட்டம் ஒன்று போட்டார்கள். அக்கூட்டத்தில் பங்கு பற்றியவர்களுள் அந்நாட்டு அரசாங்கத்தின் முக்கிய உறுப்பினரும் ஒருவராவார். இப்போது அந்த அரச உறுப்பினருக்கு அந்த நாட்டு மன்னன் தூக்குத் தண்டனை நிறைவேற்றியுள்ளான்.

முதலில் சுருக்கமாக அதை அறிந்த பரதேசி ஆடித்தான் போய் விட்டான். ''அரசாங்கத்தின் முக்கிய உறுப்பினர் என்ன தவறுதான் செய்தார்?'' என யோசித்தான். தொடர்ந்து காதெறிந்த பொழுது, அரசாங்கத்தின் முக்கிய உறுப்பினர் பேசிய மேடையில் அரசாங்கத்திற்கு எதிரான எதிர்க்கட்சிக் குழு வைச் சேர்ந்த ஒருவன் பேசியுள்ளான். எதிர்கட்சியாளருடன் ஒரே மேடையில் நின்றதால்தான் முக்கிய உறுப்பினருக்கு தண்டனை என அறிந்து கொண்டான். என்ன தான் இருந்தாலும் அந்த முக்கிய உறுப்பினர் மேல் பரதேசிக்கு இரக்கமாய் இருந்தது. மன்ன னின் அரசாங்கத்தை நினைத்து நொந்து கொண்டான்.

அந்த இடத்திலேயே வழங்கப்பட்ட அன்னதானம் பரதேசியின் வயிற்றைக் குளிர வைத்தது. ஆனாலும் இரவெல்லாம் தூக்கம் வராமல் அவன் கண்களில் முகம் தெரியாத அந்த உறுப்பினரின் முகம் பரிதாபமாக இரங்கி நிற்பது போல் தோன்றித் தோன்றி மறைந்தது. பரதேசி விரலுக்கு மிஞ்சிய வீக்கமாக வேதனைப் பட்டான். எப்படியோ, எப்போது தூங்கினோம் எனத் தெரியாது தூக்கியெழுந்த பரதேசி நகர்வலம் புறப்பட்டான்.

பிரதான வீதியின் ஒரு மூலையில் திரும்பும் பொழுது. மக்கள் கூட்டமாக நிற்பதை அவதானித்து அங்கு போனான் பரதேசி. தலை துண்டிக்கப் பட்ட நிலையில் ஒருவரின் உடல் அங்கே தொங்கிக் கொண்டிருந்தது. பரதேசி விசாரித்தான். அரசாங்கத்தின் முக்கிய உறுப்பினர் பேசிய மேடையில் பேசி யதற்காக எதிர்க் கட்சிக் குழுவால் கொலை செய்யப்பட்ட எதிர்க்கட்சியாளரின் உடல்தான் அது என பரதேசி அறிந்து கொண்டான். மக்களின் பொதுப் பிரச்சினையில் குரல் கொடுத்த அரசாங்கத்தின் முக்கிய உறுப்பினரா, அல்லது எதிர்க்கட்சியாளரா? யார் துரோகி? இப்போது பரதேசிக்குத் தலைசுற்றியது பசியால்... அல்ல. ★★★

பரதேசி

# மீள்புனரமைக்கப்படும் யாழ்ப்பாணக் கோட்டை




இற்றைக்கு 400 வருடங்களுக்கு முற்பட்ட ஒல்லாந்தர் கால கட்டிடவியல் அமைப்பு முறையில் அமைக்கப்பட்டது. யாழ்.கோட்டை. இக் கோட்டையினை மீள்புனரமைப்பு செய்யும் பணிகள் நெதர்லாந்து அரசாங்கத்தின் அனுசரனையோடு உள்நாட்டு தொல்லியலாளர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன்போது மீட்கப்படும் மனித, எலும்புகள், ரோம, சீன, மட்பாண்டங்கள் மற்றும் ஆபரணங்கள் போன்றன. இப்பகுதியில் மனிதநிலவுகை ஆரம்பமான காலத்தை பல நூற்றாண்டுகளுக்கு முன் கொண்டு போகின்றது. அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஓர் அகழ்வாய்வில் இற்றைக்கு 700 வருடங்களுக்கு முற்பட்ட ஈழத்தாழி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. தற்போது இப்பகுதி யாழ்ப்பாணதில் சுற்றுலாப்பயணிகளை கவரும் முக்கிய மையமாகவுள்ளது. புனரமைப்பின் பின் நாட்டின் அதிகவருமானம் தரும் சுற்றுலாமையமாக மாறும் என எதிர்பார்க்கப்படுகிறன.

எத்தகைய சலவைக்கும்
மில்க் வயிட்
சவர்க்காரம்
New
Milk WHITE Soap
மில்க் வயிட்
சவர்க்காரம்
விஞ்ஞான ரீதியில் நிரூபிக்கப்பட்ட உச்ச வெண்மைக்கான உத்தரவாதம் கொண்டது.
கடின நீரிலும் இலகுவாக பாவனைக்கு உகந்தது.
மிருகக் கொழுப்பற்றது.
100% தாவர எண்ணெய் தயாரிப்பு.
மில்க்வயிட்
என்று கேட்டுவாங்கி வித்தியாசத்தை உணருங்கள்
சந்தைப்படுத்துவோர்:
Shaw Wallace Marketing
தொடர்பு: 0777630904










இப்பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2011, பெப்ரவரி 20ஆம் திகதி வெளியிடப்பட்டது.